பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 01 வள்ளுவர் ஆண்டு 2048 ஐப்பசி 17 வெள்ளிக்கிழமை 03.11.2017 கதிர் 362

## மைத்திரியின் கூட்டத்தில் கூட்டு எதிரணி பங்குபற்றாது

கொழும்பு, நவ.3

சு.கவின் தலைவர் என்ற முறையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இன்று கொழும்பில் சு.கவின் எம்.பிக்களுக்காகக் கூட்டியுள்ள கூட்டத்தில் கூட்டு எதிரணியில் உள்ள எம்.பிக்கள் பங்கு பற்ற மாட்டார்கள்.

நேற்று முன்தினம் நாடாளுமன்றக் கட்டடத் பக்கம் 18 »

# அரசியல் கைதிகளை விடுவிக்குமாறு கோரி மழைக்கு மத்தியிலும் மனித சங்கிலிப் போர்




## வவுனியாவில் நேற்றுத் திரண்டனர் மக்கள்

கொழும்பு, நவ.3

இலங்கையில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ள சகல அரசியல் கைதிகளையும் விடுவிக்குமாறு கோரி, வவுனியாவில் நேற்று வியாழக்கிழமை மனித சங்கிலிப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

கொட்டும் மழைக்கு மத்தியில், வவுனியா மாவட்ட செயலகத்திலிருந்து வைத்தியசாலை சுற்றுவட்டம் வரை கைகோத்தவாறு இந்தப் போராட்டம் நடத்தப்பட்டது.

அநுராதபுரம் மேல் நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்ட மூன்று தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பான வழக்கை மீண்டும் வவுனியாவுக்கு மாற்றுமாறும், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குமாறும் போராட்டக்காரர்கள் இதன் பக்கம் 18 »



எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் நேற்று கொழும்பில் இலங்கைக்கான தென்னாபிரிக்கத் தூதுவர் ஆர்.பி.மார்க்ஸ் அம்மையாரைச் சந்தித்தபோது எடுக்கப்பட்ட படம்.

## கொட்டும் மழையிலும் மாணவர்கள் போராட்டம்

### நேற்று 4ஆவது நாளாகவும் தொடர்ந்தது

யாழ்ப்பாணம், நவ.3

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் முன்னெடுத்து வரும் போராட்டம், நேற்று வியாழக்கிழமை நான்காவது நாளாகவும் தொடர்ந்து நடைபெற்றது. பக்கம் 18 »



# மீள ஆயுதப் போர் வராமல் தவிர்ப்பது அரசின் பொறுப்பு



## ரெலோவின் அடைக்கலநாதன் நேற்று சபையில் ஆட்சியாளர்களுக்கு எச்சரிக்கை

கொழும்பு, நவம்பர் 3

**மீண்டும் ஓர் ஆயுதப் போராட்டம் ஒன்று வெடிக்காது என்று யாரும் கூறிவிடமுடியாது. அவ்வாறான ஒரு நிலை ஏற்படுவதைத் தவிர்ப்பது ஆட்சியாளர்களின் கைகளிலேயே தங்கியுள்ளது.**

**இவ்வாறு நேற்று நாடாளுமன்றத்தில் வைத்து ஆட்சியாளர்களுக்கு எச்சரிக்கை விடுத்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினரும் ரெலோவின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன்.**

புதிய அரசமைப்புத் தொடர்பான இடைக்கால அறிக்கை குறித்த விவாதம் நேற்று மூன்றாவது நாளாகவும் நாடாளுமன்றத்தில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போது அவர் பக்கம் 18 »

## மேர்வின் மீண்டும் அரசியலுக்கு!



கொழும்பு, நவ.3

முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா 'ஜாதிக ஜனதா பக்சய' என்ற பெயரில் புதிதாக அரசியல் கட்சி ஒன்றை நேற்று ஆரம்பித்து உள்ளார்.

கடந்த காலங்களில் ஊடகங்களைத் தாக்கியமை, ஆள்கடத்தல் உட்பட பல்வேறு சர்ச்சைகளில் சிக்கிய முக்கிய அமைச்சராக மேர்வின் சில்வா விளங்கினார். பக்கம் 18 »

## தமிழர் இறைமையுடன் வாழும் அரசமைப்பே எமக்கு வேண்டும்

### நாடாளுமன்றில் இடித்துரைத்தார் நிர்மலநாதன் எம்.பி.

கொழும்பு, நவ.3

"தமிழர்கள் இறைமையுடன் வாழ்வதற்குரிய வகையில் புதிய அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் விருப்பமும் அதுவே. – இவ்வாறு நேற்று நாடாளுமன்றில் தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன்.

புதிய அரசமைப்பு தொடர்பான இடைக்கால அறிக்கை குறித்த விவாதம் நாடாளுமன்றில் நேற்று நடைபெற்றது. இதில் பங்கேற்று உரையாற்றும் பக்கம் 18 »

## நல்லாட்சி அரசின் வேகம் போதாது

### ஐரோப்பிய ஒன்றியம் குற்றச்சாட்டு

கொழும்பு, நவ.3

பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்படாமை, வடக்கு – கிழக்கில் மக்களின் காணிகளை விடுவிப்பதில் காணப்படும் தாமதங்கள் போன்றவை உட்பட மனித உரிமை விவகாரங்களில் இலங்கை அரசின் பக்கம் 18 »



# நாட்டில் தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்தாமல் பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்த முடியாது!

## சந்திரிகா பண்டாரநாயக்க சுட்டிக்காட்டு

கொழும்பு, நவ. 03

தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்தாமல் பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்த முடியாது என்று முன்னாள் ஜனாதிபதியும் தேசிய ஐக்கிய மற்றும் நல்லிணக்கத்தின் தலைவருமான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கா தெரிவித்துள்ளார்.

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் தேசிய ஐக்கியத்துக்கான பாக்கீர் மாக்கார் மத்திய நிலையம் ஏற்பாடு செய்துள்ள அகில இலங்கை பாடசாலை சித்திர மற்றும் கட்டுரைப் போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவத்தில் நேற்றுமுன்தினம் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே முன்னாள் ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கையிலும் பார்க்க மிக பின்தங்கிய நிலையில் அன்று இருந்த சிங்கப்பூர் இன்று உலகில் பெரும் வளர்ச்சி கண்ட நாடாக மேம்பட்டுள்ளது.

இதற்குக் காரணம் அந்நாட்டு தலைவர் லீ இக்குவான் யூ அன்று மேற்கொண்ட நல்லிணக்க செயற்பாடுகளே ஆகும்.

சில கடும்போக்காளர்களுக்குப் பயப்படாமல் நாட்டின் எதிர்காலத்துக்கான தீர்மானங்கள் மேற்கொள்ளப்படவேண்டும்.

நாட்டில் உயர்மட்டத்திலான அரசியல் நல்லிணக்கம் காணப்படுகின்றது. இருப்பினும் வங்குரோத்து அரசியல்வாதிகள் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக உண்மைக்குப் புறம்பான விடயங்களைச் சமூகத்தில் முன்னெடுக்க முயற்சிக்கின்றனர்.



கடும்போக்கு மற்றும் இனவாதம், மதவாதம் உள்ளிட்டவற்றைத் தோற்கடிப்பதற்குத் தற்போதைய அரசால் முடிந்துள்ளது என்றும் அவர் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட இவர் 1948ஆம் ஆண்டில் நாட்டுக்கு சுதந்திரம் கிடைத்த பொழுது நல்லிணக்கம் தொடர்பில் எந்தவித பிரச்சினைகளும் இருக்கவில்லை.

அப்பொழுது தமிழ், சிங்களம், முஸ்லிம் மற்றும் பேகர் உள்ளிட்ட அனைத்து இன மக்களும் சுதந்திரத்தை பெற்றுக்கொள்வதற்காகச் செயற்பட்டனர்.

நாட்டில் இனவாத மோதல் 1956இற்கு பின்பே ஏற்பட்டது. இதுவரையில் நிர்வாகத்தில் இருந்த அரசுகள் கடும் போக்காளர்களின் காரணமாகத் தேசிய பிரச்சினையில் தீர்வு காண்பதில் பின்வாங்கினர். தமது பங்களிப்புடன் ஆரம்பிக்கப்பட்டுள்ள தேசிய ஐக்கியம் மற்றும் நல்லிணக்க அலுவலகத்தின் மூலம் நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்காக பாடசாலை மட்டத்தில் பல நிகழ்ச்சித் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வில் கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம், தேசிய ஐக்கியத்துக்கான பாக்கீர் மாக்கார் மத்திய நிலையத்தின் தலைவர் இம்தியாஸ் பாக்கீர்மாக்கார், ஜனாதிபதியின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ, தேசிய மற்றும் நல்லிணக்க அலுவலகத்தின் பணிப்பாளர் நாயகம் எம்.எஸ். ஜயசிங்க ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றினர்.

## ஹட்டனில் எதிர்ப்புப் போராட்டம்!



கடந்த 2015 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட நல்லாட்சி அரசின் பின்னர் அரசியல் பழிவாங்கல்கள் காரணமாக நாங்கள் தொழில்களை இழந்து அவல நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம் என ஹட்டனின் எதிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வரும் இளைஞர், யுவதிகள் தெரிவித்துள்ளனர்.

தொண்டமான் பவுண்டேசனின் கீழ் இயங்கி வந்த பிரஜாசக்தி நிறுவனத்தில் களஉத்தியோகத்தர்களாகப் பணியாற்றிய 175 பேர் பணி நீக்கம் செய்யப்பட்டமைக்கு எதிராகக் கறுப்புப் பட்டியணிந்து ஹட்டன் நகரில் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று நேற்றையதினம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

ஹட்டன் மணிக்கூட்டு கோபுரத்துக்கு முன்னால் இடம்பெற்ற இந்தக் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில், எதிர்ப்பு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

இந்நிலையில், போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள் தெரிவித்தவை வருமாறு:-

கடந்த இரண்டு வருட காலமாக எவ்வித அறிவித்தலும் இன்றி நாங்கள் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளோம்.

இதன்காரணமாக எம்மைப் போன்ற பெருந்தோட்டபகுதியைச்சேர்ந்த 175 இளைஞர், யுவதிகளுக்குத் தொழில் இல்லாமல் போயுள்ளதுடன் ஆறு மாத கால சம்பளமும் கிடைக்காமல் போயுள்ளது.

பிரஜாசக்தி நிறுவனத்தின் கள உத்தியோகத்தர்களாகக் கடமையாற்றிய காலப் பகுதியில் பெருந்தோட்ட மக்களுக்குப் பல்வேறு சேவைகளைச் செய்து வந்தோம்.

கடந்த 2015ஆம் ஆண்டு நல்லாட்சி அரசு உருவாகியதன் பின்னர் பிரஜாசக்தியை பொறுப்பேற்ற அமைச்சால் நாங்கள் அரசியல் பழிவாங்கல்களுக்கு உள்ளாகியுள்ளோம். எமது தொழில் இல்லா நீக்கப்பட்டதால் நிர்க்கதியான எமது குடும்பங்கள் தொடர்பாக ஜனாதிபதி கவனத்திலெடுக்க வேண்டும் எனக்குறிப்பிட்டுள்ளனர்.

# வேலிகளை அமைத்து யானைகளைக் கட்டுப்படுத்த அதிகாரிகள் முன்வரவேண்டுமெனக் கோரிக்கை!

## ஐயன்கன்குளம், புத்துவெட்டுவான் பழைய முறிகண்டி விவசாயிகள் கோரிக்கை



முல்லைத்தீவு மாவட்டத்தில் துணுக்காய் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட ஐயன்கன்குளம், புத்துவெட்டுவான், பழைய முறிகண்டி தேராங்கண்டல், கோட்டைகட்டிய குளம் உள்ளிட்ட பகுதிகளில் காட்டு யானைகளால் பாதிக்கப்படுகின்றோம் என விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்தும் இதுவரை இந்தப் பிரச்சினைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கவில்லை என்றும் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் தேராங்கண்டல் கிராமத்தைச் சேர்ந்த விவசாயி ஒருவர் தெரிவித்தவை வருமாறு:-

நாங்கள் பூர்வீகமாக விவசாயமே செய்து வருகிறோம். இங்கு யானை பிரச்சினை ஒரு பெரிய பிரச்சினையாக இருந்துவருகிறது. கடந்தமுறையும் வறட்சி காரணமாக சரியான முறையில் விவசாயத்தை மேற்கொள்ள முடியவில்லை. இருப்பினும், அரைவாசி வயல்கள் நீர் பாய்ச்சி விவசாயம் செய்தபோது அதனை அறுவடை செய்ய முடியவில்லை. யானைகள் அவற்றை அழித்துவிட்டன.



இவ்வாறு, காட்டு யானைகளின் தொல்லையால் அரைவாசி வருமானம் கூட பெற முடியவில்லை. வங்கிகளில் கடன் பெற்றும் நகைகளை அடைவு வைத்தும் கடைகளில் கடன் அடிப்படையில் பசளை மருந்துகளை பெற்று விவசாயத்தை மேற்கொள்ளுகிறோம்.

நாம் பல்வேறு சிரமத்தின் மத்தியில் வறட்சியை ஒரு புறமாக சமாளித்தாலும் யானைகளால் பல்வேறு இன்னல்களுக்கு முகம் கொடுத்துள்ளோம்.

எனவே இந்த யானைகளை கட்டுப்படுத்த மற்றைய இடங்களில் செய்வது போன்று யானை வேலிகளை அமைத்து தந்து எமது வாழ்க்கையை நிம்மதியாகக் கொண்டுசெல்ல அதிகாரிகள் முன்வர வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஐயன்கன்குளம் பகுதியில் அமைக்கப்படுகின்ற யானை வேலி பணியை துரிதப்படுத்துமாறும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## முன்னாள் பிரதி அமைச்சருக்கு 4 வருட கடூழிய சிறைத் தண்டனை!

முன்னாள் பிரதி அமைச்சர் ஷாந்த பிரேமரத்னவுக்கு 4 வருட கடூழிய சிறைத்தண்டனை வழங்குமாறு கொழும்பு மேல்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்தத் தண்டனையுடன் சேர்த்து 10 ஆயிரம் ரூபா தண்டப்பணம் செலுத்துமாறும் மேல்நீதிமன்ற நீதிபதி பியசேன ரணசிங்க மூலம் உத்தரவிடப்பட்டுள்ளது.

2007 ஆம் ஆண்டில் அம்பாறை பிரதேசத்தில் பெண்ணொருவரிடம் 50 ஆயிரம் ரூபா லஞ்சம் பெற்றமை தொடர்பில் லஞ்ச ஊழல் ஆணைக்குழுவால் முன்னாள் பிரதி அமைச்சருக்கெதிராக கொழும்பு மேல்நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டிருந்தது.

நீண்ட வழக்கு விசாரணைகளின் பின்னர் அந்த வழங்கில் முன்னாள் பிரதி அமைச்சர் ஷாந்த பிரேமரத்ன குற்றவாளியாக நிரூபிக்கப்பட்டு அவருக்கு 4 வருட கடூழிய சிறைத்தண்டனை வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சம்பந்தனை வெறுங்கையுடன் அனுப்பாதீர்!

## மனோ கணேசன் வற்புறுத்து

எதிர்க்கட்சி தலைவர் சம்பந்தன் இன்று மிகவும் இறங்கி வந்து பேச்சு முயற்சிகளில் ஈடுபட்டுள்ளார். அதைவிட அவரால் இறங்க முடியாது. அவரைத்தயவு செய்து வெறுங்கையுடன் வடக்குக்கு அனுப்பி வைத்து விடாதீர்கள். அப்படி அனுப்பி வைத்தால் வரலாறு உங்களை மன்னிக்காது – என நேற்றுக் காலை அரசமைப்புப் பேரவையில் உரையாற்றிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சர் மனோ கணேசன் கூறினார்.

அமைச்சர் மனோ தனது உரையில் மேலும் கூறியவை வருமாறு:–

இந்த நாட்டில் ஒரு பிரிவினருக்கு முழு நாடும் சிங்கள, பௌத்தம் மட்டுமே எனக் கூற உரிமை இருக்கும் போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வடக்கு, கிழக்கை இணைக்கக் கோரும் உரிமை இருக்கிறது. ஒரு சாராருக்கு ஒற்றையாட்சி என்று கூற உரிமை இருந்தால், மற்றவர்களுக்கு சமஷ்டி எனக்கூறும் உரிமை இருக்கிறது. பௌத்த மதத்துக்கு மட்டுமே பிரதம இடம் வேண்டும் என இங்கே கூறும்போதும், அங்கே அவர்களுக்கு மதசார்பற்ற நாட்டை கோரும் உரிமை இருக்கிறது.

இது அரசமைப்பு சட்டமூலம் அல்ல. இடைக்கால யோசனை ஆவணம் மட்டுமே ஆகும். இதன்மூலம் நாம் ஒரு விவாத அரங்கை ஆரம்பித்துள்ளோம். எல்லாவிதமான யோசனைகளையும் முன்வைக்க எல்லோருக்கும் உரிமை உண்டு. ஆனால், இங்கே யாரும் நாட்டை பிரித்து தனி ஒரு நாட்டை அமைக்கக் கோர முடியாது. அல்லது தனது அரசியல் இலக்கை அடைய ஆயுதத் தூக்க முடியாது. அத்தகைய கருத்துகளை வடக்கிலும் சரி, தெற்கிலும் சரி எவரும் கூற முடியாது. அவைப் பற்றி வாதவிவாதம் இங்கே இல்லை. அவை சட்ட விரோதம். அத்தகைய எந்த ஒரு யோசனையும் இங்கே இந்த இடைக்கால ஆவணத்தில் முன்வைக்கப்படவில்லை.

எனக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பல முரண்பாடுகள் உள்ளன. வழிகாட்டல் குழுவில் நான் கூட்டமைப்பு பிரதிநிதிகளுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டுளேன். அது வேறு விடயம். ஆனால், எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் இன்று மிகவும் இறங்கி வந்து பேச்சு முயற்சிகளில் ஈடுபட்டுள்ளார். அதைவிட அவரால் இறங்க முடியாது என்று நான் அறிவேன். அவரை தயவு செய்து வெறுங்கையுடன் வடக்குக்கு அனுப்பி வைத்து விடாதீர்கள்.

மறைந்த தந்தை எஸ்.ஜே.வி. செல்வநாயகம், 'தமிழர்களை கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்' – என்றார்.

சம்பந்தனை இலங்கை நாட்டையே கடவுள்தான் காப்பாற்ற வேண்டும் என்று சொல்லும் நிலைமைக்கு தள்ளி விடாதீர்கள். அதன்மூலம் அவரைப் பலவீனப்படுத்தி, தீவிரவாதிகளை பலப்படுத்திவிடாதீர்கள். அப்படி அனுப்பி வைத்தால் வரலாறு உங்களை மன்னிக்காது என்பதை ஐக்கிய தேசிய கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி, பொது எதிரணி, மக்கள் விடுதலை முன்னணி ஆகிய சிங்கள பெரும்பான்மை கட்சிகள் புரிந்து கொள்ள வேண்டும் என நான் இங்கே கூற விரும்புகிறேன்.

புதிய அரசமைப்பு ஏன் தேவை என்பதில் பலருக்கு பல அபிப்பிரா

பக்கம் 18

# மனிதாபிமான வைத்திய சேவையை கேவலமாகக் கொச்சைப்படுத்தாதீர்!

## யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்தியர் ரி.சத்தியமூர்த்தி விநயமான வேண்டுகோள்



வைத்தியர் சத்தியமூர்த்தி



வைத்தியர் மலரவன்

மனிதாபிமான வைத்திய சேவையைக் கொச்சைப்படுத்தி விமர்சிக்கும் போக்குக் குறித்து யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்தியர் ரி.சத்தியமூர்த்தி வேதனையுடன் பகிரங்க அறிக்கை வெளியிட்டிருக்கின்றார்.

அந்த அறிக்கையில் அவர் தெரிவித்திருப்பவை வருமாறு:–

அதிகரித்துவரும் வைத்திய தேவைகளை சமாளிப்பதற்காக பல்வேறு சவால்களை எதிர்கொள்ள வேண்டி இருக்கிறது. நாளொன்றில் பல்லாயிரக் கணக்கானவர்களுக்கு சிகிச்சை அளிக்கும் நிறுவனம் மிகவும் சிக்கல் தன்மை வாய்ந்தது. 24 மணி நேரமும் இயங்கும் போதனா வைத்தியசாலை போன்ற சேவை நிறுவனங்கள் மிகவும் கடமையுணர்வும் அர்ப்பணிப்பும் உள்ளவர்களைக் கொண்டு இயங்கி வருகின்றது. முறையற்ற விமர்சனங்கள் இங்கு கடமை புரிபவர்களை மோசமாகப் புண்படுத்துகின்றன. இதனை தொடர்ந்து செய்வதால் இப்பகுதியில் கடமையாற்றுவதற்கு வைத்தியர்களும் ஏனையவர்களும் முன்வரமாட்டார்கள்.

இங்கே தற்போது கடமையாற்றுபவர்கள் வேறு பிரதேசங்களுக்கு அல்லது மேலைத்தேச நாடுகளுக்கு செல்லும் வாய்ப்பு அதிகமாகும். இந்நிலைமை தொடர்ந்தால் பல்வேறு மட்ட உத்தியோகத்தர்களின் பற்றாக்குறையுடன் இயங்கும் வைத்திய சேவை மேலும் பாதிப்படையும். இது தவிர மக்கள் மத்தியில் தவறான எண்ணங்களைப் புகுத்தி முரண்பாடான நோயாளர் சேவையை உருவாக்கும் அபாயமும் காணப்படுகிறது.

அண்மைக் காலங்களில் சமூக வலைத்தளங்கள் மற்றும் ஒரு சில ஊடகங்களில் ஊடகதர்மத்திற்கு அப்பால் வைத்திய சேவை விமர்சிக்கப்பட்டமை மிகவும் கவலைக்குரியது. ஒருவருக்கு ஏதும் பாதிப்பு ஏற்பட்டு விட்டால் உரிய நிறுவனங்களுக்கு அறிவித்து பரிகாரத்தை தேடமுடியும். அல்லது உரிய சேவை கிடைக்காவிட்டால் முறையிட பல்வேறு வழிகள் காணப்படுகின்றன. குறிப்பாக பொலிஸ் மற்றும் நீதிமன்றங்களை நாடித் தங்கள் பிரச்சினைகளைக் கூற முடியும்.

அரசவைத்தியசாலைகளுக்கு வரும் நோயாளிகளை கட்டுப்படுத்த முடியாது. இந்த பிரதேசம் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் இருந்தும் சில சமயம் வெளிநாடுகளில் இருந்தும் வருபவர்களுக்குக்கூட சிகிச்சை அளிக்கின்றோம். பல்வேறு விடுதிகளிலும் கடமையாற்றும் வைத்தியர்கள், தாதியர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் அநேகமான நேரங்களில் தங்களுடைய வேலையின் அளவுக்கு அப்பால் கடமையாற்ற வேண்டியுள்ளது. இது பலருக்கு நன்றாகத் தெரியும். இவை சரியான முறையில் வெளியில் கொண்டுவரப்படுவதில்லை. ஆனால் சில சந்தர்ப்பங்களில் ஏற்படுகின்ற குறைபாட்டை பெரிதாக்கி பொது மக்கள் ஏளனமாக பார்க்கக்கூடிய வகையில் விமர்சிக்கப்படுவது நிறுத்தப்பட வேண்டும். ஆக்கபூர்வமான விமர்சனங்கள் எப்போதும் எம்மால் ஏற்றுக் கொள்ளப்படும்.

தற்போது வெளிவருகின்ற செய்திகளும் விமர்சனங்களும் அநேகமான உத்தியோகத்தர்களை புண்படுத்துவதோடு அவர்களின் கடமைகளைச் செய்ய விடாமல் தடுக்கும் அபாயமும் காணப்படுகிறது.

உதாரணமாக சில வைத்தியர்கள் சில விசேட சிகிச்சைகளைச் செய்ய தயங்குவார்கள். இது இப்பகுதி வாழ் மக்களுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தும்.

வெளிநாடுகளில் வசிப்பவர்கள் தங்கள் பெற்றோர்களுக்கும் உறவினர்களுக்கும் நல்ல சிகிச்சையை வழங்க வேண்டும் என எதிர்பார்ப்பது வரவேற்கத்தக்கது. ஆனால் எம்மால் மேலைத்தேசநாடுகள் போன்ற வசதிகளைக் கொண்ட சிகிச்சையை இங்கு வழங்க முடியாதுள்ளது. ஆனால் தரமான, பாதுகாப்பான சிகிச்சையை எப்போதும் வழங்குவதில் நாம் அவதானமாக இருக்கின்றோம். இதை இங்குள்ளவர்களும் உணர வேண்டும்.

அண்மையில் கண் சத்திர சிகிச்சை நிபுணர் மலரவன் பற்றி ஒரு சிலர் நெறிமுறைகளைக் கடந்து செய்திகளை வெளியிட்டனர். இது அவரை மாத்திரம் அல்ல, ஏனைய வைத்தியர்களையும் கடுமையாகப் புண்படுத்தி விட்டது.

வைத்திய நிபுணர் மலரவன் கடந்த 5 வருடங்களாக வைத்தியசாலையில் கடமையாற்றி வருகின்றார். இக்காலப்பகுதியில் யாழ் போதனா வைத்தியசாலையில் 10ஆயிரத்து 955 'கற்றாக்' சத்திர சிகிச்சைகளை மேற்கொண்டுள்ளார். இது தவிரவும் கண்ணோடு சம்பந்தப்பட்ட பல்வேறு சத்திர சிகிச்சைகளை மேற்கொண்டுள்ளார்.

காலை 8.00 மணிக்கு முன்னரே கடமைக்கு வரும் வைத்திய நிபுணர் மலரவன், சத்திர சிகிச்சை நாள்களில் மதிய நேர உணவை ஒரு போதும் எடுத்தவர் அல்லர். சில நாள்களில் சத்திர சிகிச்சை இரவு நேரம் வரை நீடிக்கும்.

இவர் மேற்கொண்ட 'கற்றாக்' சத்திர சிகிச்சைகள் மிகவும் சவாலானவை. இவற்றில் 1,378 'கற்றாக்' சத்திர சிகிச்சைகளை பொது மயக்கமருந்து வழங்கிச் செய்துள்ளார். இது தவிரவும் பல்வேறு நோய்களுடன் அனுமதிக்கப்பட்ட நோயாளிகளுக்கும் ஏனைய வைத்திய நிபுணர்களின் சிகிச்சையைச் சரி செய்து கண் சத்திர சிகிச்சை செய்துள்ளார்.

வைத்திய நிபுணர் மலரவன் கண் சிகிச்சை கிளினிக் மற்றும் கண் சத்திர சிகிச்சை விடுதியின் வளர்ச்சியில் அதிக அக்கறை காட்டுபவர். வைத்தியசாலை நிர்வாகத்தோடும் தொடர்பு கொண்டு கண் சிகிச்சை வசதிக்காக பாடுபட்டவர். அவர் சிகிச்சை பெறும் அனைவரிடமும் அதிக அக்கறை கொண்டவர். விடுதியில் அனுமதிக்கப்பட்டவர்கள் மற்றும் கிளினிக்கிற்கு வரும் எல்லா நோயாளிகளையும் மிகுந்த அவதானத்துடன் பார்வையிடுவார். எப்போதும் அவர்களுக்கு கவனமாக சிகிச்சை அளிப்பார்.

வட மாகாணத்தில் ஏனைய பொது வைத்தியசாலைகளில் கண் சத்திரசிகிச்சை நிபுணர்கள் நிரந்தரமாகக் கடமையாற்றுவதில்லை. ஆகவே அம்மாவட்டங்களுடைய 'கற்றாக்' நோயாளிகளும் யாழ்.போதனா வைத்தியசாலைக்கே சிகிச்சை பெற வருகின்றார்கள். அதற்காக விசேட சத்திர சிகிச்சை நாள்களை அறிவித்து அவர்களுக்கு கண் சத்திர சிகிச்சை செய்திருக்கின்றார். இது மாத்திரமல்லாமல், நாட்டின் ஏனைய பிரதேசங்களில் இருந்தும் சிகிச்சைக்காக வைத்தியசாலைக்கு வருபவர்களுக்கு போதியளவு சிகிச்சையை வழங்கி வருகின்றார்.

அண்மையில் தனியார் வைத்தியசாலை ஒன்றில் சிகிச்சை செய்யப்பட்டவர்கள் கண்களில் ஏற்பட்ட தொற்றுக்காரணமாக யாழ் போதானா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். இவர்களுக்கு எமது வைத்தியசாலையில் வழங்கப்பட வேண்டிய அனைத்து வித சிகிச்சைகளையும் வழங்கி வருகின்றோம். எமது வைத்தியசாலையில் இவ்வாறான தொற்று கடந்த காலங்களில் ஏற்படவில்லை. இருப்பினும் எதிர் வரும் காலங்களில் மிகவும் அவதானமாக இருக்க அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளோம்.

மருத்துவ உலகைப் பொறுத்தவரையில் இவ்வாறான திடீர் சம்பவங்கள் சவாலானவையாக இருந்து வருகின்றன. இவ்வாறான திடீர் சம்பவங்கள் விஞ்ஞான ரீதியாக ஆராயப்பட்டு தடுக்கப்பட வேண்டும். அத்துடன் சம்பந்தப்பட்டவர்களுக்கு உரிய பரிகாரம் வழங்கப்பட வேண்டும். பாதிக்கப்பட்டவர்கள் சட்டரீதியாக நடவடிக்கை எடுப்பது பொருத்தமாகும். மாறாக தனிப்பட்டவர்கள் மீது பல்வேறு அவதூறுகளையும் குற்றங்களையும் சுமத்துகின்றமையை உடனடியாக நிறுத்திக் கொள்ளவேண்டும்.

வைத்திய நிபுணரான மலரவன் மீது வெளிநாடு ஒன்றில் வசிக்கும் இருவர் காணொலி மூலமாக அவதூறு காட்சியை வெளியிட்டு அவருடைய பெயருக்கும் புகழுக்கும் களங்கத்தை ஏற்படுத்த முயற்சித்துள்ளனர். அத்துடன் இப்பகுதியில் இருக்கும் ஏனைய உத்தியோகத்தர்களை பயமுறுத்தியுமுள்ளனர். இது விடயமாக குற்றவிசாரணைப் பிரிவுக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. குறிப்பாக அவர்கள் வாழும் நாட்டின் பாதுகாப்புத் தரப்பினருக்கும் சம்பந்தப்பட்டவர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை இப்பகுதியிலுள்ள பொதுமக்களுக்கு எடுத்துச் செல்லப்படும் செய்திகள் பற்றி நாம் கரிசனையாக இருக்க வேண்டும். சிலசமயங்களில் உண்மையான தகவல்கள் வெளிக்கொண்டு வரப்படுவதில்லை. இதனால் பொது மக்களிடையே கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டு சேவை பாதிப்பு ஏற்படும். ஆகவே உன்னதமான மருத்துவ சேவை பற்றி மக்களுக்கு உண்மை நிலை கண்டு செல்லப்பட வேண்டும். – என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

# புதிய அரசமைப்பு சந்தேகமே!

புதிய அரசமைப்பு உருவாக்கம் நடக்குமா என்பது நாளும் பொழுதும் கேள்விக் குறியாகி வருகின்றது.

இந்த முயற்சியில் நல்லாட்சி அரசு உண்மையில் நேர்மைத் தனத்துடன் - மெய்மையான மனப்பாங்கில் - செயற்படுகின்றதா என்ற சந்தேகம் தினசரி வலுத்து வருகின்றது.

கடந்த நான்கு நாள்களாக நாடாளுமன்றம் அரசமைப்பு சபையாக மாறி நடத்திய விவாதத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூறிய கருத்துகள் புதிய அரசமைப்பு சாத்தியமாகுமா என்ற கேள்வியை எழுப்பாமல் இல்லை.

தமிழர் தரப்பில் மிக முக்கிய பிரதிநிதிகளான எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தனும், கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரனும் அங்கு வைத்த கருத்துகள் முக்கியமானவை.

இந்த இருவரும்தான் அரசமைப்பு உருவாக்கத்துக்கான செயற்பாடுகளில் தமிழர் தரப்பில் பிரதான பிரதிநிதிகளாகப் பங்குகொண்டவர்கள்.

புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர்பாக இதுவரை அரசுத் தரப்புடன் நேரடிப் பேச்சு நடத்திய அவர்களின் கருத்துகள் கவனிக்கப்பட வேண்டியவை. அரசமைப்புக் குழுவில் செயற்படுகின்றமை குறித்து எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் தெரிவித்த விடயங்கள் ஊன்றி நோக்கப்பட வேண்டியவை.

அரசமைப்புக் கவுன்ஸில் நடவடிக்கைகளில் இவர்கள் இருவரும் நேர்மைத்திறத்துடன் நேரடியாகப் பங்களித்தவர்கள்.

அவர்கள் இருவரினதும் அரசமைப்புச் சபை உரையை ஊன்றிக் கவனிப்பவர்கள் இந்த முயற்சியில் அவர்களது நம்பிக்கை - எதிர்பார்ப்பு - எவ்வளவு தூரம் இடிந்து போயிருக்கின்றது என்பதை அந்த உரைகளின் வரிகளுக்கு இடையில் அவதானிக்க முடியும்.

இந்த அரசமைப்பு உருவாக்க முயற்சி தொடர்பாகக் கடந்த ஒரு வருடமாக இப்பத்தியில் ஒரு விடயத்தைத் திரும்பத் திரும்பச் சுட்டிக்காட்டி வருகின்றோம்.

அது, இந்த நடவடிக்கைக்கான கால அவகாசம் பற்றியது.

நல்லாட்சி அரசு வந்த கையோடே, சுறுசுறுப்பாக - முழு மும்முரமாக - இந்த முயற்சியை முன்னெடுத்திருந்தால் அது வெற்றி பெற்றிருக்கும், காலம் செல்லச் செல்ல இந்தப் புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சி கேள்விக்குறியாவது நிச்சயம் என்று திரும்பத் திரும்பச் சுட்டிக் காட்டியிருந்தோம்.

அதுதான் இப்போது நடக்கின்றது.

அரசமைப்பு உருவாக்கத்துக்கான வழி நடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கை கடந்த வருடம் நவம்பரிலேயே ஏறத்தாழ தயாராகி விட்டது. ஆனால், அது பகிரங்கமாகி, அரசமைப்புச் சபைக்கு (நாடாளுமன்றுக்கு) வருவதற்கு ஏறத்தாழ ஒரு வருடமாகி விட்டது.

இப்போது இடைக்கால அறிக்கையிலிருந்து அடுத்த கட்டத்துக்கு நகர்வதற்கு குறைந்த பட்சம் ஆறுமாதமாவது செல்லும் என்பது உறுதியாகியுள்ளது.

இனி நடவடிக்கை ஏப்ரல் புத்தாண்டுக்குப் பின்னர்தான் என்று பிரதமரே அறிவித்துவிட்டார்.

2016 மார்ச் மாதம் அரசமைப்பு நிர்ணய சபையாக மாறிய நாடாளுமன்றத்தில், அரசமைப்பின் மாதிரி வடிவம் - நகல் - முன்வைக்கப்படுவது வரும் 2018 ஏப்ரலுடன் இரண்டு ஆண்டுகள் கடந்தாலும் சாத்தியமில்லை. அதற்குப் பின்னர்தான் நகல் வடிவம் தயாராகும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுத் தமது நாடாளுமன்ற உரையில் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

அதற்கிடையில் எதிர்வரும் ஜனவரி இறுதியில் உள்ளூராட்சித் தேர்தல் வரப் போகின்றது.

அந்தத் தேர்தல் முடிவுகளோடு புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சி குப்பைக் கூடைக்குள் போகுமோ தெரியவில்லை. ஆனால், விடயங்கள் நகர்கின்ற திசை அப்படித்தான் போய் முடியும் என்பதற்குக் கட்டியம் கூறுகின்றன.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழிப்பேன் என்று நாட்டு மக்களுக்கு வாக்குறுதி அளித்து, அதனடிப்படையில் ஆட்சிப்பீடம் ஏறிய மைத்திரிபால சிறிசேனவுக்கு, அந்த ஜனாதிபதி ஆட்சி அதிகாரத்தின் மீது அதீத பற்று ஏற்பட்டு, அடுத்த தடவையும் தாம் ஜனாதிபதியாக இருக்க வேண்டும் என்ற ஆசை எப்போது ஏற்பட்டதோ, அப்போதே புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சிகள் குப்பைக் கூடைக்குள் போய்விட்டன. அதுதான் நிஜம்.

இந்தப் புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சிக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினதும், அவரது தலைமையிலான சு.கவினதும் முழு ஆதரவு - நேர்மைத் திறத்துடனான பூரண ஒத்துழைப்பு - கிட்டாத வரையில் இந்த முயற்சி வெற்றி பெறப் போவதில்லை என்பதுதான் இன்றைய நிலைமை.

இதனைத் தாண்டி புதிய அரசமைப்பை வெற்றிபெற வைப்பதற்கு நல்லாட்சி அரசின் பிரதான பங்காளியான ஐ.தே.கட்சியும் பிரதான எதிர்க்கட்சியான இலங்கைத் தமிழரசுக் கட்சியும், ஜே.வி.பியும் என்ன செய்யப் போகின்றன. பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

# வடக்கு ஆளுநரின் உறுதிமொழியை அடுத்து கைவிடப்பட்டது தொண்டமானாறு போராட்டம்!



யாழ்ப்பாணம், நவ. 03

தொண்டமானாறு அக்கரை உல்லாசவிடுதி அமைந்துள்ள பகுதியில் நடைபெறும் கலாசார சீரழிவைத் தடுக்கக்கோரி நடைபெற்றுவரும் உண்ணாவிரதப் போராட்டத்தை வட மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே நேற்றுமுன்தினம் சென்று பார்வையிட்டுள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் ஆளுநர் அலுவலகத்தில் ஆளுநரை சந்தித்துக் கலந்துரையாடினர்.

இதன்போது இந்தப் பகுதிக்கு நேரடியாக வந்து பார்வையிடுவார் என ஆளுநர் உறுதிமொழி வழங்கியதன் அடிப்படையில் நேற்றுமுன்தினம் மாலை அங்கு சென்று நிலைமைகளை ஆராய்ந்துள்ளார்.



உல்லாசக்கடற்கரை என்ற பெயரை மாற்றித்தர வேண்டும், கலாசார சீரழிவைத் தடுக்கும் வகையிலான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும் என அவர்கள் ஆளுநரிடம் கோரிக்கையை முன்வைத்திருந்தனர் எனவும் அதை அடுத்து அங்கு பொலிஸ் காவலரண் ஒன்றை நிரந்தரமாக அமைப்பதற்கான உத்தரவை வட மாகாண பொலிஸ் மா அதிபருக்கு ஆளுநர் பணிப்புரை வழங்கியுள்ளார்.

சிறுவர் துஷ்பிரயோகம், மதுப்பாவனை மற்றும் ஏனைய பிரச்சினைகள் இதன் மூலம் தீர்க்கப்படும் என எதிர்பார்க்கிறார் எனவும் அவர்களின் ஏனைய கோரிக்கைகள் தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடவுள்ளார் எனவும் ஆளுநர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் ஆளுநரின் இந்த உறுதிமொழியைத் தொடர்ந்து அங்கு மேற்கொள்ளப்பட்டு வந்த போராட்டம் கைவிடப்பட்டுள்ளது.

(க)

# மனித உரிமைகளை உறுதிப்படுத்தும் வாய்ப்பு மீண்டும் உருவாகியுள்ளது என்கிறார் பிரதமர்!

நாட்டில் மனித உரிமைகளை உறுதிப்படுத்தும் வாய்ப்பு மீண்டும் உருவாகியிருக்கிறது என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கையின் 2017 - 2021 ஆம் ஆண்டுக்கான மனித உரிமைகள் பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டுத் தேசியத் திட்டம் வெளியிடும் நிகழ்வு நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதமர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மனித உரிமைகள் தொடர்பில் கருத்துத் தெரிவிப்போருக்கு எதிராக வன்முறைகளைப் பிரயோகிக்கக்கூடாது. அதற்கு மாறாக அவர்கள் கருத்து வெளியிட வாய்ப்பளிக்க வேண்டும் எனப்பிரதமர் சுட்டிக்காட்டியுள்ளார்.



இந்த நிகழ்வில் நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர உரையாற்றுகையில், மனித உரிமைகளைப் பாதுகாக்க சமகால அரசாங்கம் அர்ப்பணிப்புடன் பாடுபடுகின்றதென்று குறிப்பிட்டார்.

# சர்வதேச பௌத்த சம்மேளனத்தின் ஏழாவது மாநாடு கொழும்பில்!



கொழும்பு, நவ. 03

சர்வதேச பௌத்த மகா சம்மேளனத்தின் 7 ஆவது மாநாடு நேற்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் கொழும்பில் ஆரம்பமானது.

அலரிமாளிகையில் நேற்றுக் காலை ஆரம்பமான இந்த மாநாடு எதிர்வரும் 7ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் 47 நாடுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி 800 இற்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

(க)

**நாளை**

**04.11.2017**
**சனிக்கிழமை**

நட்சத்திரம் : பரணி பி.இ 3.19 வரை
திதி : பூரணை மு.ப 11.49 வரை
சுபநேரம் : 3.04 – 4.34 வரை
இராகுகாலம்: 9.04 – 10.34 வரை

# கீதா குமாரசிங்க நாடாளுமன்ற உறுப்பினராக செயற்படமுடியாது என உயர் நீதிமன்றமும் தீர்ப்பு!



கொழும்பு, நவ. 03

இரட்டை பிரஜாவுரிமை காரணமாக கீதா குமாரசிங்கவுக்கு தொடர்ந்தும் நாடாளுமன்ற உறுப்பினராகச் செயற்படமுடியாது என உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இந்தத் தீர்ப்பு தொடர்பிலான மனு நேற்று பிரதம நீதியரசர் தலைமையிலான ஐவர் அடங்கிய நீதியரசர்கள்குழாம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இரட்டைக் குடியுரிமை இருப்பதால், கீதா குமாரசிங்கவுக்கு, இலங்கை நாடாளுமன்றத்தில் உறுப்பினராக இருக்க முடியாது எனக் கடந்த மே மாதம் மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்ப்பளித்து இருந்தது.

இதனையடுத்து, இந்தத் தீர்ப்பை எதிர்த்து கீதா உயர் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்திருந்தார்.

இந்தநிலையில், இரட்டைக் குடியுரிமையுடன் கீதா, இலங்கை நாடாளுமன்றத்தில் உறுப்பினராக இருக்க முடியாது என உயர்நீதிமன்றமும் அறிவித்துள்ளது.

(க)

# ஹெரோயினுடன் இருவர் கைது!

கொழும்பு, நவ. 03

131 கிராமுக்கு மேற்பட்ட ஹெரோயின் போதைப் பொருளை வைத்திருந்த ஒருவர் கிராண்ட்பாஸ், நாகலகம்வீதி பிரதேசத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

வெள்ளவத்தை குற்றத் தடுப்பு பிரிவின் அதிகாரிகள் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போதே இந்த நபர் கைது செய்யப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு 14 பிரதேசத்தைச் சேர்ந்த 33 வயதுடைய நபரொருவர் இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார் என்றும் அவர் மாளிகாகந்தை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, 10 கிராம் 150 மில்லி கிராம் ஹெரோயின் வைத்திருந்த மற்றுமொருவரும் கிராண்ட்பாஸ் பகுதியில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த நபர் கொலன்னாவ பகுதியைச் சேர்ந்தவர் எனப் பொலிஸார் குறிப்பிட்டனர்.

(க)

# யாழில் பெய்துவரும் மழையால் நீர்நிலைகளின் நீர்மட்டம் உயர்வு!



யாழ். குடாநாட்டின் பலபாகங்களிலும்பெய்துவரும் தொடர்ச்சியான மழையால் மாவட்டத்தின்நீர்நிலைகள் நிரம்பி வழிகின்றன.

வட கிழக்கு பருவப் பெயர்ச்சி காலநிலையால் வடக்கு கிழக்கு உள்ளிட்ட நாட்டின் பல பாகங்களிலும் கன மழை பொழிந்து வருகிறது.

இதனிடையே, மழை மேலும்சில நாள்களுக்கு நீடிக்கலாம்எனஇலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் கூறியுள்ளது.

இந்த நிலையில், நேற்றுமுன்தினம் நள்ளிரவு பெய்த கடும் மழையால் யாழ்.குடாநாட்டின் பருவகால ஆறான வழுக்கையாறின் நீர் மட்டம் அதிகரித்துள்ளது.

இந்தஆற்றின்நீரேந்து வாய்க்கால்களும் முட்டி வழிந்துள்ள நிலையில் அராலிப் பகுதியிலுள்ள பிரதான கழிமுக வான் கதவுகள்திறக்கப்பட்டுள்ளனஎன்றுதெரிவிக்கப் படுகிறது.

இதேவேளை, நாட்டில் பொழிந்துவரும் கனமழை காரணமாக இடி மின்னல் போன்ற அனர்த்தங்களிலிருந்து மக்களைப் பாதுகாப்பாக இருக்குமாறு வளிமண்டலவியல்திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

# சுற்றாடல் அதிகாரிகள் 156 பேர் நியமனம்!



மத்திய சுற்றாடல் அதிகார சபையால் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ள 156 சுற்றாடல் அதிகாரிகளுக்கு நியமனம் வழங்கும் நிகழ்வு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெற்றது.

மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சில் நேற்றுமுன் தினம் இந்தநிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வை ஆரம்பித்து வைக்கும் முகமாக 25 பேருக்கு ஜனாதிபதியால் நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் பிரதி அமைச்சர் அநுராத ஜயரத்ன, அமைச்சின் செயலாளர் அனுர திசாநாயக்க, மத்திய சுற்றாடல் அதிகார சபையின் தலைவர் கலாநிதி லால் மர்வின் தர்மசிறி உள்ளிட்ட குழுவினர் பங்குபற்றினர்.

# கண்பார்வை குறைபாடுகளை கண்டறிவதற்கான உபகரணம் நன்கொடை!



கொழும்பு, நவ. 03

பொரளை லேடி றிஜ்வே வைத்தியசாலைக்கு சிறு குழந்தைகளுக்கான கண்பார்வைக் குறைபாடுகளைக் கண்டறிவதற்கான உபகரணம் வழங்கப்பட்டது.

சுகாதார போசாக்கு மற்றும் சுதேச வைத்தியத்துறை அமைச்சர் வைத்தியர் ராஜித சேனாரத்ன தலைமையில் சுகாதார அமைச்சில் நேற்றுமுன்தினம் இந்த நிகழ்வு நடைபெற்றது.

காலியைச் சேர்ந்த வைத்தியர் திலக்க என்பவரால் ஒருகோடியே 30 லட்சம் ரூபா பெறுமதியான இந்த உபகரணம் நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளது.

(க)

# ரணில் – மைத்திரி இரகசிய சந்திப்பு!



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் 4 மணிநேர சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

இந்தச் சந்திப்பு கொழும்பில் நடைபெற்றுள்ளது.

இந்தச் சந்திப்பு இரகசியமாக இடம்பெற்றதோடு சந்திப்பில் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் தொடர்பில் முழுமையான தகவல் இதுவரை வெளியாகவில்லை.

குறிப்பாக, ஜனவரி மாதம் நடைபெறவுள்ள உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல் தொடர்பான விடயங்கள் இந்த இரகசிய சந்திப்பில் அதிகளவில் ஆராயப்பட்டிருந்தன என்றும் தெரியவருகின்றது.

இதேவேளை, இந்த மாதம் நாடாளுமன்றத்தில் சமர்பிக்கப்படவுள்ள வரவு- செலவுத் திட்டத்தைத் தொடர்ந்து அமைச்சரவையில் மாற்றங்களைக் கொண்டுவருவது தொடர்பாகவும் நீண்டநேரம் பேசியுள்ளனர் என்றும் உயர்மட்டத்தகவல்கள்தெரிவிக்கின்றன.

# 40 மாடுகளைக் கடத்திச் சென்ற ஐந்து சந்தேகநபர்கள் கைது!

முல்லைத்தீவு, நவ. 03

முல்லைத்தீவுபுதுக்குடியிருப்புப் பகுதியில் நாற்பது மாடுகளைக் கடத்திச் சென்ற ஐந்து சந்தேகநபர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

புதுக்குடியிருப்பு கள்ளியடிப் பகுதியிலேயே பசு உள்ளிட்ட 40 மாடுகளை கடத்திச் சென்ற இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சந்தேக நபர்கள், அனுமதிப்பத்திரமின்றி 40 மாடுகளைக் கடத்திச் சென்றனர் எனவும் இதன் அடிப்படையிலேயே இந்த ஐந்து சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டனர் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும் இந்தச் சந்தேக நபர்களிடம் மேலதிக விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார், இவர்களை நீதிமன்றில் முன்னிலைப் படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று தெரிவித்துள்ளனர். (க)

# வடக்கு – கிழக்கு இணைப்பு என்பது கூட்டமைப்பின் கோரிக்கை மட்டுமே!




வடக்கு, கிழக்கு இணைப்புத் தொடர்பில் இடைக்கால அறிக்கையில் முன்வைக்கப்பட்டுள்ள யோசனை கூட்டமைப்பின் யோசனை மாத்திரமே என அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

எனினும், இந்த விடயத்தைப் பெரிதுபடுத்திக்கொண்டு வடக்கு, கிழக்கை இணைக்கப்போகின்றோம் எனத் தென்பகுதி அரசியல்வாதிகள் பிரசாரங்களை முன்னெடுத்து வருகின்றனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசமைப்பு நிர்ணய சபைக் குழுவின் இடைக்கால அறிக்கை மீதான மூன்றாம் நாள் விவாதத்தில் கலந்துகொண்டு நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அவர், இடைக்கால அறிக்கையில் வடக்குக் கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட வேண்டும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு யோசனையை முன்வைத்துள்ளது.

இது வழிநடத்தல் குழுவின் நிலைப்பாடு அல்ல. இது கூட்டமைப்பின் தனிப்பட்ட கருத்தாகும்.

எனினும். இதனைச் சிலர் பெரிதுபடுத்திக்கொண்டு தெற்கில் பிரசாரங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

கூட்டமைப்பு யோசனையை மட்டுமே முன்வைத்துள்ளது. எனினும். வடக்கு - கிழக்கு இணைப்பு என்பது கிழக்கு, முஸ்லிம் மக்களின் இணக்கப்பாட்டுடன்தான் மேற்கொள்ளப்பட வேண்டும் என அவர்மேலும்தெரிவித்துள்ளார்.

## முன்னாள் சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர் கைது

பொலிஸ் அவசரத் தொலைபேசி இலக்கத்துக்குக் கிடைக்கப் பெற்ற ரகசிய தகவலின் அடிப்படையில் திருகோணமலை - மூதூர் பகுதியில் முன்னாள் சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அந்த நபர் நேற்றுமுன்தினம் இரவு மது அருந்திவிட்டு வீதியால் சென்றவர்களுக்கு இடையூறுவிளைவித்தார் என்ற குற்றச் சாட்டில் பொலிஸாரல் கைது செய்யப்பட்டார்.

சம்பவத்தில் 40 வயது மதிக்கத் தக்க முன்னாள் சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார் என மூதூர் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தநிலையில், அவர் மூதூர் பொலிஸில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார். அத்துடன், மூதூர் நீதிவான் நீதிமன்றத்தில் அவரை ஆஜர்படுத்துவதற்கான ஏற்பாடுகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(ப)

கந்தளாயில்

## கடை உடைத்த சந்தேகநபர் கைது!

திருகோணமலை - கந்தளாய் பகுதியில் வர்த்தக நிலையமொன்றை உடைத்துத் தொலைபேசிகளைத் திருடிய குற்றச்சாட்டில் ஐந்து மாதங்களின் பின்னர் சந்தேகநபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அந்த நபர் நேற்றுமுன்தினம் கந்தளாய் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். இந்தத் திருட்டுச் சம்பவம் கடந்த மே மாதம் இடம்பெற்றது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப)

## விறகு வெட்டச் சென்றவர் சடலமாக மீட்பு

மட்டக்களப்பு - கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தாந்தாமலை காட்டுப்பகுதிக்குள் இருந்து ஆணொருவரின் சடலம் நேற்றுமுன்தினம் மீட்கப்பட்டுள்ளது. அரசடித்தீவுக் கிராமத்தைச் சேர்ந்த ஐந்து பிள்ளைகளின் தந்தையான க.இராசரத்தினம் என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

# கிழக்கு மாகாணப் பட்டதாரிகளின் கோரிக்கையை நிறைவேற்றுங்கள்

கிழக்கு மாகாணப் பட்டதாரிகளின் கோரிக்கையை நிறைவேற்றுமாறு கூறி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் இரா.துரைரெட்ணம் ஜனாதிபதிக்குக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார் என்று தெரிவித்துள்ளார்.

அந்தக் கடிதத்தில், கிழக்கு மாகாண சபையின் பொதுச் சேவை ஆணைக்குழுவால் வேலையற்ற பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்குகின்றமை தொடர்பாக விண்ணப்பங்கள் கோரப்பட்டு, போட்டிப் பரீட்சைநடத்தி அண்ணளவாக 2 ஆயிரத்து 868 பேர் 40 புள்ளிகளுக்கு மேல் எடுத்த நிலையில், சுமார் ஆயிரத்து 441 பேருக்கு ஆசிரிய நியமனம் வழங்கப்பட உள்ளது என அறியக்கூடியதாக உள்ளது.

இந்த நடவடிக்கை எடுத்தமைக்காக ஆளுநர், பொதுச் சேவை ஆணைக்குழுச் செயலாளர், கல்வி அமைச்சு ஏனைய உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளையும் வாழ்த்துக்களையும், தெரிவித்துக் கொள்கின்றேன்.

தற்சமயம் வழங்கப்படப் போகும் ஆயிரத்து 500 நியமனங்களைத் தவிர மிகுதியாக 40 புள்ளிகள் எடுத்தவர்கள் ஆயிரத்து 400இற்கும் மேற்பட்டவர்கள் உள்ளனர்.ஏனைய 40 புள்ளிகளுக்குக் குறைவாக எடுத்தவர்கள் மூவாயிரம் பேர் இருக்கின்றமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும் அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு–

1. 40 புள்ளிகளுக்கு மேல் எடுக்கப்பட்டவர்கள் 1400 பேருக்கு மேற்பட்டவர்கள் உள்ளமையால் இவர்களும் ஆசிரிய நியமனம் கோரி நிற்கின்றனர்.

2. 40 புள்ளிகளுக்கு மேல் எடுக்கப்பட்டவர்களில் 40-45 வயதை உடையவர்களும் வயது அதிகரித்துச் செல்பவர்களும் உள்ளமையால் இவர்களும் நியமனம் வழங்குமாறு கோரியுள்ளனர்.

3. 40 புள்ளிகளுக்கு கீழ் எடுத்தவர்கள் 40-45 வயதை உடையவர்களும் உள்ளமையால் இவர்களும் நியமனம் வழங்குமாறு கோரியுள்ளனர்.

4. மிகுதியாக உள்ள 3000பேர் பரீட்சையில் குறிப்பிட்ட புள்ளிகளுக்கு மேல் எடுக்காத வேலையற்ற பட்டதாரிகள் உள்ளமையால் விசேட திட்டத்தின் கீழ் மத்திய மாகாண அரசு பயிற்சி அடிப்படையிலோ அல்லது ஏதாவதொரு முறையைக் கையாண்டு ஆசிரியத் தொழிலோ அல்லது திணைக்களங்களிலோ நியமனங்களைக் கோரி நிற்கின்றனர்.

வேலையற்ற பட்டதாரிகளைப் பொறுத்தவரையில் தொடர்ச்சியாகக் கிழக்கு மாகாணத்தில் சுமார் 3ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் 5 மாதங்கள் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தி இவர்களது

### ஜனாதிபதிக்கு கடிதம்

நியமனத்துக்கு வலுச்சேர்த்தவர்கள் என்பதை யாரும் மறுதலிக்க முடியாது.

இவர்களைப் பொறுத்தவரையில் மீண்டும் வேலையற்ற பட்டதாரிகளை இன்னொரு போராட்டத்தை நடத்துவதற்கு மத்திய மாகாண அரசு வழி சமைக்கக் கூடாது.

இவை மட்டுமின்றி அரசியல் தலைமைகளும் மௌனிகளாக இருந்து விடக்கூடாது. பட்டதாரிகளுக்கு வயதுகள் அதிகரித்துச் செல்கின்றமையால் தற்கொலை செய்யுமளவுக்குக் கூட ஒரு சிலருக்கு மனநிலைமாறியுள்ளது.எனவே, மத்திய மாகாண அமைச்சு இவர்களுக்கான நியமனத்தை வழங்கத் துரித நடவடிக்கை எடுத்துநியமனம்வழங்கஆவன செய்ய வேண்டும் என கூறப்பட்டுள்ளது. (ப)

# மூன்று வாகனங்கள் மோதி விபத்து!

மட்டக்களப்பு - பெரியகல்லாறு பிரதான வீதியில் நேற்றுமுன்தினம் மாலை 6.30 மணியளவில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பிலிருந்து கல்முனை நோக்கிப் பயணித்த இ.போ.ச. பஸ் ஒன்றுடன் மோட்டார் சைக்கிளும் சிறிய ரக டிப்பர் வாகனம் ஒன்றும் ஒன்றோடு ஒன்று மோதிக்கொண்டதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

மேலதிக விசாரணைகளைக்களுவாஞ்சிக்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.





# சீனாவின் முக்கியமான பங்காளி இலங்கை!



## சீன உதவிப் பிரதமர் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 03

இலங்கை சீனாவின் முக்கியமான ஒரு பங்காளி என்று சீனாவின் உதவிப் பிரதமர் வாங் யாங் தெரிவித்துள்ளார்.

சீனாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள இலங்கை வெளிவிவகார அமைச்சர் திலக்மாரப்பன நேற்றுமுன்தினம் பீஜிங்கில் சீன உதவிப் பிரதமர் வாய் யாங்கைச் சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தார்.

இதன்போது சீன உதவிப் பிரதமர் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கையுடனான உறவுகளை சீனா மிகவும் மதிக்கிறது.

ஆசியாவை ஐரோப்பா மற்றும் ஆபிரிக்காவுடன் இணைக்கும் பண்டைய பட்டுப்பாதை வணிகப் பாதை மற்றும் அதற்கு அப்பாலும் சென்று, வணிகமற்றும்உட்கட்டமைப்பு வலையமைப்பைஉருவாக்கும் அணை மற்றும் நெடுஞ்சாலை முயற்சியின் ஒரு முக்கியமான பங்காளராகவே இலங்கையை சீனா கருதுகிறது.

இலங்கை உள்ளிட்ட வளரும் நாடுகளுடன் உறுதியான ஒற்றுமை மற்றும் ஒத்துழைப்பை சீனா எதிர்பார்க்கிறது என்று அவர் தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்திப்பின்போது இலங்கை வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பன தெரிவித்தவை வருமாறு:-

சீனாவை ஒரு நெருங்கிய நண்பனாகவும், பங்காளியாகவுமே இலங்கையும் கருதுகிறது.

21 ஆம் நூற்றாண்டு கடல் வழிப் பட்டுப்பாதைத் திட்டத்தில் பங்கேற்பதன் மூலம், துறைமுகங்கள், உட்கட்டமைப்பு மற்றும் ஏனைய துறைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்த முடியும் என்று நம்புகிறது என்று அவர் கூறியுள்ளார்.

அதேவேளை, சீனாவுடன், சுதந்திர வர்த்தக உடன்பாட்டில் கூடிய விரைவில் கையெழுத்திடுவதற்கு இலங்கை ஆர்வமாக இருக் கிறது என்றும் இலங்கை வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பன தெரிவித்துள்ளார்.

பீஜிங்கில் நடந்த வரவேற்பு நிகழ்வில் உரையாற்றிய போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

சீனாவுடன் சுதந்திர வர்த்தக உடன்பாட்டில் கூடிய விரைவில் கையெழுத்திடுவதில் இலங்கை மிகவும் ஆர்வமாக இருக்கிறது. இதன் மூலம், இரண்டு நாடுகளுக்கும் கூடுதல் வணிக வாய்ப்புகள் கிடைக்கும்.

பொருளாதார வளர்ச்சியை நோக்கிய எமது பயணத்தில் சீனா நம்பகமான மற்றும் முக்கியமான பங்காளியாக இருந்துள்ளதுடன், அதன் அர்ப்பணிப்பு மற்றும் உதவியை இலங்கை பாராட்டுகிறது.

எமக்குத் தேவையான நேரத்தில்உதவுகின்றஉண்மையான, நம்பகமானநண்பனாகசீனாவை இலங்கை மதிக்கிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.(க)

# உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதற்கு அனைத்துத் தடைகளும் நீக்கப்பட்டன!

உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதற்கான அனைத்துத் தடைகளும் தற்போது நீக்கப்பட்டுள்ளன.

இலங்கையில் உள்ளூராட்சித்தேர்தல்வரும்ஜனவரி மாதம் 25 ஆம் திகதிக்கும், 31ஆம் திகதிக்கும் இடையில் நடத்தப்படும் என்று தேர்தல் ஆணைய வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

உள்ளூராட்சிசபைகளினதும், அவற்றுக்குத் தெரிவு செய்யப்பட வேண்டிய உறுப்பினர்களினதும் விவரங்கள் அடங்கிய வர்த்தமானி அறிவித்தல் நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்டதை அடுத்தே, தேர்தல் திணைக்களம் இந்த முடிவை எடுத்துள்ளது.

புதிய தேர்தல் முறையின் கீழ் உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதற்கு ஏற்ற வகையில், வர்த்தமானி அறிவிப்பில் நேற்றுமுன்தினம் காலை உள்ளூராட்சி மாகாணசபைகள் அமைச்சர்பைஸர்முஸ்தபாகையெழுத்திட்டிருந்தார்.

இதையடுத்து, உள்ளூராட்சித்தேர்தலை நடத்துவதற்கான அனைத்துத் தடைகளும் நீக்கப்பட்டன.

நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவிப்புக்குஅமைய,341உள்ளூராட்சி சபைகளுக்குத் தேர்தல் நடத்தப்படும். இவற்றுக்கு 8 ஆயிரத்து 356உறுப்பினர்கள்தெரிவு செய்யப்படவுள்ளனர்.

அத்துடன்,நுவரெலிய மாவட்டத்தில் புதிதாக நான்கு பிரதேச சபைகள் உருவாக்கப்பட்டுள்ளன.

அம்பகமுவ பிரதேசசபை, மூன்றாகப் பிரிக்கப்பட்டு, அம்பகமுவ, நோர்வூட், மஸ்கெலிய என மூன்று பிரதேச சபைகள் உருவாக்கப்பட்டுள்ளன.

நுவரெலிய பிரதேசசபையும், மூன்றாக பிரிக்கப்பட்டு, நுவரெலிய, அக்கரபத்தன, கொட்டகல பிரதேசசபைகள் உருவாக்கப்பட்டுள்ளன.

இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளதை அடுத்து, உள்ளூராட்சித் தேர்தலுக்கான தேர்தல் அறிவிப்பை தேர்தல் திணைக்களம் வெளியிடவுள்ளது.

நவம்பர் 27ஆம் திகதிக்கும் 30ஆம் திகதிக்கும் இடையில் வேட்புமனுக்களைக் கோரும் அறிவிப்பு வெளியாகலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதன்படி டிசெம்பர் 11ஆம் திகதிக்கும், டிசெம்பர் 17ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கும் இடையில், வேட்புமனுக்களை ஏற்றுக்கொள்ளும் காலமாக அறிவிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஜனவரி 25ஆம் திகதிக்கும், 31 ஆம் திகதிக்கும்இடைப்பட்ட-ஞாயிறு அல்லது அரச விடுமுறை நாள் அல்லாத ஒரு நாளில், தேர்தலை நடத்தவும் தேர்தல் ஆணையம் முடிவு செய் யும்.

இதுதொடர்பான இறுதியான முடிவுகளை தேர்தல் ஆணையமே அறிவிக்கும்.

நேற்றுமுன்தினம்வெளியிடப்பட்டவர்த்தமானிஅறிவிப்புக்கு அமைய, உள்ளூராட்சித் தேர்தல் - வட்டார வாரி மற்றும் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறை ஆகியன இணைந்த கலப்பு தேர்தல்முறையாகஇடம் பெறும்.

60 வீதமான உறுப்பினர்கள் வட்டார வாரியாகவும், 40 வீதமான உறுப்பினர்கள் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின் கீழும் தெரிவு செய்யப்படுவர்.

புதிய சட்டத்தின்படி, பெண்களுக்கு வேட்புமனுக்களில் 25வீதஇடம்ஒதுக்கப்படவேண்டும். எனினும், முன்னர் உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் 25 வீத வேட்பாளர்கள் இளைஞர்களாக இருக்க வேண்டும் என்ற விதிமுறை நீக்கப்பட்டுள்ளது.

இந்த தேர்தலில் சமுர்த்தி அதிகாரிகள் உள்ளிட்ட களநிலை அதிகாரிகள் போட்டியிட முடியாது. வேட்பு மனுத் தாக்கல் தொடங்கும் நாளில் இருந்து ஓர் ஆண்டுக்கு முன்னர், களநிலைப் பணிகளில் இருந்து விலகிய, அல்லது ஓய்வுபெற்ற அதிகாரிகளால் மாத்திரம் இந்த தேர்தலில் போட்டியிட முடியும்.

# முல்லையில் அடைமழை!





கொழும்பு, நவ. 03

நீண்டகால வறட்சியின் பின்னர் முல்லைத்தீவு மாவட்டத்தில் நேற்று அதிகாலை தொடக்கம் கடும் மழை பெய்து வருகின்றது.

இதனால் முல்லைத்தீவு நகரத்தில் பொதுமக்களின் நடாமாட்டம் மிகக் குறைவாகக் காணப்படுகிறது எனவும், மக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள மக்கள், வறட்சியின் காரணமாக மிகவும் பாதிப்படைந்திருந்தனர்.

இந்தநிலையில் தற்பொழுது பெய்துவரும் மழையால் பொதுமக்கள் மத்தியில் மகிழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

# ஆஸ்திரேலிய பிரதமர் இலங்கைக்கு வருகை!

ஆஸ்திரேலிய பிரதமர் மெல்கம் டர்ன்புல் இலங்கைக்கான விஜயத்தை மேற்கொண்டு நேற்றுக் காலை கொழும்பை வந்தடைந்தார்.

கட்டுநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் விசேடவிமானம் மூலம் நேற்றுக்காலை வந்தடைந்த ஆஸ்திரேலிய பிரதமருக்கு சட்ட ஒழுங்கு மற்றும் தென்மாகாண அமைச்சர் சாகல ரத்னாயக்க தலைமையில் விமானநிலையத்தில் அமோக வரவேற்பு வழங்கப்பட்டது.

இவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரைச் சந்தித்து பேச்சு நடத்தவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இரு நாடுகளுக்கிடையிலான இராஜதந்திர நல்லுறவுக்கு 70 ஆண்டுகள் நிறைவடை கின்றமையை முன்னிட்டு ஆஸ்திரேலிய பிரதமர் இலங்கைக்கு விஜயம் செய்திருக்கிறார் என இலங்கைக்கான ஆஸ்திரேலிய தூதுதரக அலுவலகம் தெரிவித்துள்ளது.

இரு நாடுகளுக்கிடையே பொருளாதார ரீதியில் வலுப்படுத்தல், சர்வதேச குற்றச் செயல்களைத் தடுத்தல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் ஆஸ்திரேலியப் பிரதமர் பேச்சு நடத்தவுள்ளார்.



# நாட்டில் புதிய அரசமைப்பை உருவாக்க இடமளியோம்!

## பொதுபலசேனா அமைப்பு பாய்ச்சல்

கொழும்பு, நவ. 03

நாட்டில் புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கு ஒரு போதும் இடமளிக்க மாட்டோம் என பொதுபலசேனா அமைப்பு தெரிவித்துள்ளது.

புதிய அரசமைப்பு தொடர்பாக கலந்துரையாட வேண்டிய அவசியம் கூட இல்லை என அந்த அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொடஅத்தே ஞானசார தேரர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது நாட்டு மக்களுக்கு உள்ளது அரசமைப்பு தொடர்பான பிரச்சினை அல்ல, வாழ்வது பற்றிய பிரச்சினையே எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

(க)

# பிணைமுறி மோசடி ஆணைக்குழுவுக்கு பிரதமர் ரணிலை அழைக்கத் தீர்மானம்

கொழும்பு, நவ. 03

சாட்சி ஒன்றை பெற்றுக்கொள்வதற்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை பிணைமுறி மோசடி ஆணைக் குழுவுக்கு அழைப்பதற்கு அவரிடம் வேண்டுகோள் விடுக்க பினைமுறி மோசடி தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

இதற்காக ஒதுக்கப்படும் திகதி எதிர் வரும் நாள்களில் அறிவிக்கப்படும் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

பிணைமுறி மோசடி தொடர்பில் பிரதமரிடம் சாட்சி ஒன்றைப் பெற்றுக்கொள்வதற்காக அழைப்பதற்குத் தீர்மானித்துள்ளதாகவும், அதற்கான திகதியை எதிர்வரக்கூடிய நாள்



களில் அறிவிப்பதாகவும் பிணை முறி மோசடி ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார்.

# செட்டிகுளத்தில் சித்தி விநாயகர் ஆலய சிலைகள் விசமிகளால் உடைத்து சேதம்!

கொழும்பு, நவ. 03

செட்டிகுளம், முகத்தான் குளம் சித்திவிநாயகர் ஆலய நவக்கிரகங்கள் விசமிகளால் உடைத்து வெளியே எறியப்பட்டுள்ளன. சில சிலைகளுக்கும் சேதம் விளைவிக்கப்பட்டுள்ளது. நேற்றுமுன்தினம் இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வவுனியா, செட்டிகுளம், முகத்தான்குளம் பகுதியில் அண்மையில் கும்பாபிஷேகம் செய்யப்பட்ட சித்தி விநாயகர் ஆலய வளாகத்தில் இருந்த நவக்கிரகங்களே உடைத்து விசமிகளால் சேதப்படுத்தப்பட்டுள்ளன. ஆலயத்தின் சிலைகளுக்கும் சேதம் விளைவிக்கப்பட்டுள்ளது.

ஆலய சிலைகள் உடைத்து வீசப்பட்டுள்ளன. காலை ஆலயத்துக்குச் சென்றவர்கள் ஆலயத்தின் சிலைகள் உடைக்கப்



பட்டு இருக்கின்றமையை அவதானித்து பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டதையடுத்து சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றார்கள்.

(க-100)

# துர்க்கை அம்மனின் குபேரவாசல் கோபுர கும்பாபிஷேகம்

தெல்லிப்பழை,நவ. 03

தெல்லிப்பழை துர்க்கை அம்மனின் தேவஸ்தானத்தின் குபேரவாசல் கோபுர கும்பாபிஷேகம் எதிர் வரும் ஜனவரி மாதம் 28 ஆம் திகதி இடம் பெறும்.

இந்தியக் கலைஞர் க.புருசோத்தமன் தலைமையில் இந்தியக் கலைஞர்களால் நிர்மாணிக்கப்பட்டு வரும் இந்தக் கோபுரம் 61 அடி உயரத்துடன் 5 தளங்களைக் கொண்டது. பலகோடி ரூபா செலவில் ஏற்கனவே தெற்கு வாயில் கோபுரம் அமைக்கப்பட்டு கும்பாபிஷேகம் இடம்பெற்றுள்ளது.

கிழக்கு வாசல் கோபுரம் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ளது. தற்போது வடக்கு வாயிலில், குபேர வாசல் கோபுரம் நிர்மாணிக்கப்பட்டு நிறைவடையும் தறுவாயில் உள்ளது.

(இ)

# மின் தடை அறிவித்தல்

யாழ்ப்பாணம், நவ. 02

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை சனி காலை 8மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை **வவுனியா பிரதேசத்தில்** சாளம்பைக்குளம் பிரதேசம், சாளம்பைக்குளம் புதிய வீட்டுத்திட்டம் ஆகிய இடங்களிலும்-

**மன்னார் பிரதேசத்தில்** முருங்கன் பிரதேசம் ஆகிய பிரதேசங்களிலும்-

ஏற்கனவே அறிவிக்கப்பட்டதற்கு மேலதிகமாக-

**நாளை சனிக்கிழமை** காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை **யாழ் பிரதேசத்தில்** சட்டநாதர் வீதி, பருத்தித்துறை வீதியில் கல்வியங்காட்டு சந்தையில் இருந்து நல்லூர் கோயில் வரை, நல்லூர் குறுக்கு வீதி, செம்மணி வீதி, கச்சேரி நல்லூர் வீதி, கனகரட்ணம் வீதி, திருமகள் வீதி, மலர்மகள் வீதி, கலைமகள் வீதி, பூமகள் வீதி, சாஸ்திரியார் வீதி, நடுத்தெரு லேன், நாவலர் வீதி, நொத்தாரிஸ் லேன், வேலப்பர் வீதி, புவனேஸ்வரி அம்மாள் வீதி, புறூடி லேன்,ஸ்ரான்லிக் கல்லூரி வீதி, சுப்பிரமணியம் வீதி-

முதலியார் வீதி, பாரதி லேன், புங்கன் குளம் வீதி ரயில்வே கடவை வரை, நாயன்மார் வீதி, குகன் வீதி, பொன்னம்பலம் வீதி, நாவலர் வீதியில் மாம்பழம் சந்தியில் இருந்து நல்லூர் குறுக்கு வீதி வரை, ஏ9 வீதியில் பாரதி வீதியில் இருந்து செம்மணி வளைவு வரை, நெடுங்குளம் வீதி ரயில் கடவை வரை, முள்ளி, நாவலடி, பூம்புகார், அரியாலை கிழக்கு, கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம், எஸ்.ஓ.எஸ் சிறுவர் பூங்கா, அரியாலை டீசல் அன்ட் மோட்டார் என்ஜினியறிங் பி.எல்.சி, நாயன்மார்க்கட்டு, Carlton Sports Network (CSN) ஆகிய பிரதேசங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின் பொறியியலாளர் எம்.துவாரகன் அறிவித்துள்ளார்.

(இ)

# கந்தபுராணம் விளக்கவுரை

யாழ்ப்பாணம்,நவ. 03

யாழ்.சின்மயாமிஷன் வதிவிட ஆச்சாரியார் பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யாவால் கந்த புராணம் வாராந்த விளக்கவுரை பிரதி வெள்ளிக்கிழமைகளில் மாலை 6.30 மணி முதல் 7.30 மணி வரை, இல.700 பருத்தித்துறை வீதி நல்லூரில் அமைந்துள்ள ஞானவேல் ஆச்சிரமத்தில் இடம்பெற்று வருகிறது.

இதில் இன்று வெள்ளிக்கிழமை ''முருகப் பெருமானின் படையணியின் தோற்றம்'' என்ற தலைப்பில் விரிவுரை நடைபெறும்.

(இ)

## தினசரி ராசி பலன் 03.11.2017

2017 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் புரட்டாதித் திங்கள் 18 ஆம் நாள் வெள்ளிக்கிழமை. சதுர்தசித் திதி பகல் 1.47 மணிவரை. பின்னர் பூரணை. நட்சத்திரம் அசுவினி பி.இ.3.28 மணிவரை. பின்னர் பரணி. அமிர்தசித்தயோகம் முழுவதும்.

**ராகுகாலம்** - காலை 10.26 மணிமுதல் 11.54 மணிவரை.

**சுபநேரம்** - காலை 6.07 மணிமுதல் 7.37 மணிவரை.

**திவசம் செய்ய வேண்டிய திதி**- ஐப்பசி மாத வளர்பிறை சதுர்த்தசி. - பூரணை

பிறந்த நட்சத்திர வழிபாடு: அசுவினி.

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.**

**மேஷம்:** நன்மையான நாள். பொருளாதாரம் வளமாக இருக்கும். குடும்ப ஒற்றுமை வளப்படும். தொழிலில் முன்னேற்றம் உண்டாகும். உத்தியோகத்தர்களுக்கு உயர் அதிகாரிகளின் நன்மதிப்பு உண்டாகும்.

**ரிஷபம்:** யோசனையான நாள். பணவரவு குறையும். குடும்பத்தில் நல்லுறவு குறைவடையும். உறவினர்கள் பாராமுகம் காட்டுவார்கள். தொழிலில் பல பிரச்சினைகள் தோன்றி மறையும்.

**மிதுனம்:** ஆக்கபூர்வ பலன்கள் காணப்படுகின்றன. பணவரவு திருப்தியைத் தரும். குடும்பத்தில் நல்லுறவு நிலவும். உத்தியோகத்தில் விருப்பங்கள் நிறைவேற உயரதிகாரிகள் உறுதுணையாக இருப்பார்கள்.

**கடகம்:** சமபலன்கள் காணப்படுகின்றன. வருமானம் சுமாராக இருக்கும். உத்தியோகத்தில் வேலைச்சுமை அதிகரிக்கும். பொறுப்புகளும் அதிகமாகும். குடும்ப நிம்மதிக்காக பெண்கள் சிரமப்பட வேண்டியிருக்கும்.

**சிம்மம்:** மேன்மையான நாள். பொருளாதாரம் ஏற்றம் அடையும். குடும்பத்தில் நல்லுறவு விருத்தியடையும். வியாபாரத்தில் மேலதிக லாபம் கிடைக்கும். உத்தியோகத்தில் திறமைகள் வெளிப்படும்.

**கன்னி:** சலனம் மிகுந்த நாள். பணவரவு குறையும். குடும்பத்தில்சிறு சங்கடங்கள் உண்டாகும். பயணத்தின் போது உடைமைப் பொருள்களில் கவனம் தேவை. பணிகளில் மிகுந்த கவனம் தேவை.

**துலாம்** : மத்திமமான நாள். பண வரவு சுமாராக இருக்கும். குடும்பத்தில் பெண்கள் எதிலும் நிதானமாக நடந்துகொள்வதன் மூலம் சங்கடங்கள் குறையும். பயணத்தின் போது தடங்கல்கள் ஏற்படும்.

**விருச்சிகம்:** யோகமான நாள். நிதி நிலைமை வளமாக இருக்கும். வியாபாரத்தில் கணிசமான லாபம் வரும். வீடு, வாகன யோகம் உண்டாகும். உத்தியோகத்தர் சிலருக்கு உயர்வுகள் கிடைக்கும்.

**தனுசு:** நன்மையான நாள். பொருளாதாரம் வளமாக இருக்கும். குடும்ப உறவு அன்புடையதாக இருக்கும். வேலை பார்க்கும் பெண்களுக்கு நன்மதிப்பு உண்டாகும்.

**மகரம்** : யோசனையான நாள். எதிர்பார்க்கும் பண வரவு வரத் தாமதமாகும். குடும்பச் செலவுகள் அதிகரிக்கும். உடல் நலக் குறைவால் மருத்துவச் செலவுகளும் உண்டாகும்.

**கும்பம்:** சம பலன்கள் காணப்படுகின்றன. வருமானம் சுமாராக இருக்கும். தேவையற்ற செலவுகள் உண்டாகும். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் உண்டாகும். பயணத்தின் போது அவதானம் தேவை.

**மீனம்:** உயர்வான நாள். வருமானம் உயர்வடையும். குடும்பத்தில் அன்னியோன்னியம் அதிகரிக்கும். சகோதர உறவு வலுவடையும். வியாபாரத்தில் கணிசமான லாபம் உண்டாகும்.

சந்திராட்டமநாள்: உத்தரம் 2ஆம்,3 ஆம்,4 ஆம் பாதம் அத்தம், சித்திரை 1ஆம்,2 ஆம் ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தோர் இன்று சுபகருமங்களில் ஈடுபடுகின்றமையைத் தவிர்க்கவும்.

காலைக்கதிர்
Kalaikkathir



**இடைக்கால அறிக்கை தொடர்பான விவாதம் புதன்கிழமை முதல் இடம்பெற்று வருகிறது. அரசமைப்புச் சபையாகக் கூடிய நாடாளுமன்றத்தில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா உரையாற்றினார். அந்த நீண்ட உரையின் தொகுப்பு இங்கு வெளியிடப்படுகின்றது.**



# சமஷ்டி என்ற சொற்பதம் சிங்களவருக்கு சந்தேகம்; ஒற்றையாட்சி என்பதில் தமிழருக்குச் சந்தேகம்

எமது நாட்டுக்கு புதிய அரசமைப்புதேவைஉணரப்பட்டிருப்பதாக ஒரு சாரார் சுட்டிக்காட்டி வருகின்ற நிலையில், புதிய அரசமைப்பு இந்த நாட்டுக்குத் தேவையில்லைஎன இன்னொருசாராரும்கூறி வருகின்றனர். அதற்கெனத் தத்தமது பக்கங்களைச் சார்ந்து பல்வேறு நியாயங்களையும்அவர்கள் முன்வைத்து வருகின்றனர்.

1978ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட அரசமைப்புச் சட்டம், கடந்த 40 வருடங்களாக பாவனையில் இருந்து வருகின்றது. இதுவரை இந்த அரசமைப்புச் சட்டம் 19 திருத்தங்களுக்கு உள்ளாகியுள்ளது. கடந்த கால அனுபவங்கள், தற்போதைய அரசமைப்புச் சட்டத்தை மாற்றியமைக்கப்பட வேண்டியதன் அவசியத்தை ஏற்படுத்தியுள்ளன.

குறிப்பாக, இந்த நாட்டில் எதிர்கால சந்ததியினருக்கு ஒரு வளமான நாட்டைக் காண்பதற்குத் தேவையான பொருளாதார சுபீட்சத்தையும், சமூகங்களுக்கு இடையிலான நல்லுறவையும் கட்டியெழுப்பக் கூடிய வகையில் இந்த நாடு எவ்வாறு நிர்வகிக்கப்படவேண்டும் என்பது புதிதாகச்சிந்திக்கவேண்டிய ஒரு கடப்பாடு இந்த சபையில் அங்கம் வகிக்கின்ற சகல உறுப்பினர்களுக்கும் இருக்கின்றது என்று நான் நம்புகின்றேன்.

**புதிய அரசியல் கலாசாரத்துக்கு வழி திறக்க வேண்டும்**

எதிர்கால சந்ததியினருக்கு நிம்மதியானதும், சந்தோசமானதும், சுபீட்சமானதுமான நாடு ஒன்றைக் காண வேண்டும் என்ற கனவை நிறைவேற்றி வைக்கக்கூடிய வகையில் ஒரு புதிய அரசியல் கலாசாரத்தைத் தோற்றுவிக்கக் கூடிய வகையில், அதற்கு வழி அமைக்கக் கூடிய ஒரு சிறந்த அரசமைப்புச் சட்டத்தை உருவாக்க வேண்டிய அவசியத்தைப்பலர்வலியுறுத்திவருகின்றனர்.

அதனையும்நாம்ஏற்றுக்கொள்ளும் அதேவேளை, அத்தகைய புதிய அரசமைப்பு, இந்த நாட்டிலுள்ள அனைத்து மக்களினதும் கருத்துகளுக்கு மதிப்பளித்தே உருவாக்கப்படவேண்டும் என்பதையும் இங்கு குறிப்பிட விரும்புகின்றேன்.

குறிப்பாக, எமது மக்களுக்கான அதிகாரப் பகிர்வு முதற்கொண்டு, சமூக, பொருளாதார, கலாசார, சூழல்உள்ளிட்ட அடிப்படைமனிதஉரிமைகளைஉறுதிப்படுத்துகின்ற வகையிலான – இந்த உரிமைகள் தொடர்பில் நீதிமன்ற நடவடிக்கைகளுக்குச் செல்லக்கூடிய வகையிலான புதிய அரசமைப்பொன்றின் தேவை பற்றி பெரும்பாலான மக்கள் தங்களது கருத்துக்களைவெளிப்படுத்தி வருகின்றனர்.

இந்தளவுக்கு மனித உரிமைகள் பற்றிப் பேசக்கூடிய நிலை உருவாகியுள்ள இந்த நாட்டில், இன்னமும் தமிழ் அரசியல் கைதிகள் எவ்விதமான விசாரணைகளும் இன்றி, பிணையும் இன்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். வலிந்து காணாமற்போகச்செய்தவர்களது உறவினர்கள் தங்களுக்கான நியாயம் கோரி வீதிகளில் இறங்கி பல மாதங்களாகப் போராடிவருகின்றனர். இந்த நிலையில், தமிழ் மக்களுக்கு என்ன பிரச்சினைகள் இருக்கின்றன? என்றும் கேள்விகள் கேட்கப்படுகின்றன. தமிழனாகப் பிறந்ததே பிரச்சினை என்றே இதற்கு பதில் கூற வேண்டியிருக்கின்றது.

**எமது நிலைப்பாடு**

எம்மைப் பொறுத்த வரையில் தமிழ் பேசும் மக்களுக்கு, அந்த மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையிலான நியாயமான அரசியல் அதிகாரங்கள், சட்டரீதியாகவும், நிர்வாக ரீதியாகவும் வேறு எவ்வகையிலும், மீளப் பெற இயலாத வகையில் பகிரப்படவேண்டும் என்ற நிலைப்பாட்டில் நாங்கள் தொடர்ந்தும் இருந்து வருகின்றோம்.

அதே நேரம், அனைத்து மக்களும் புரிந்துகொள்கின்ற வகையிலான தீர்வாகவே அது அமைந்திருத்தல் வேண்டும். இல்லையேல், அது, இந்த நாட்டில் மீண்டும் ஒரு மோதலை உருவாகக்கூடிய நிலைக்கே இந்த நாட்டைத் தயார்படுத்திவிடும் என்பதை நாங்கள் மறந்துவிடக் கூடாது.

தமிழ் மக்கள், இலங்கையர்களாக வாழவேண்டும்என்பதற்காகத்தமிழர்கள் என்ற அடையாளத்தைக் கைவிடவோ, தமிழர்களாக வாழவேண்டும் என்பதற்காக இலங்கையர்கள் என்ற அடையாளத்தைக்கைவிடவோதயாராக இல்லை. தமிழ் மக்கள் இலங்கையர்களாகவும் அதே நேரம், தமிழர்களாகவுமே வாழ விரும்புகின்றார்கள்.

தமிழ் மக்களது இந்த நியாயமான அபிலாஷைகளைக் கடந்தகால தமிழ் சிங்கள அரசியல் தலைமைகள் தங்களது சுயலாப அரசியலுக்குப் பயன்படுத்திக்கொண்டதன் காரணமாகவே சுமார் 30 வருடகால அழிவு யுத்தத்துக்கு இந்த நாடு முகம் கொடுத்திருந்தது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

தமிழ் பேசும் மக்கள் விரும்புகின்ற நியாயமான அரசியல் தீர்வு, சகோதர சிங்கள மக்களுக்கோ, இந்த நாட்டின் இறைமைக்கோ விரோதமானதல்ல என்பதை இந்தச் சபையின் ஊடாக சகோதர சிங்கள மக்களுக்குக் கூறவிரும்புகின்றேன். அந்தவகையில், எமது நியாயமான கோரிக்கையை சகோதர சிங்கள மக்களும் ஏற்றுக்கொள்வார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது.

**13 ஐ விட கூடுதல் அதிகாரமே தமிழ் மக்களுக்கு வேண்டும்**

இந்த நாட்டில் அனைத்து இன மக்களும் புரிந்து கொள்ளக்கூடிய வகையிலும்,தற்போதையஎமதுஅரசமைப்பில் இருக்கின்ற,13ஆவதுதிருத்தச்சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளவிடயங்களைவிடவும் முன்னேற்றகரமான அதிகாரப் பகிர்வுகளைக் கொண்ட வகையிலும் முழுமைப்படுத்தப்பட்டபுதியஅரசமைப்பு எமதுநாட்டில்நிறைவேற்றப்படுமாயின், அல்லது, புதிய அரசமைப்பு நிறைவேற்றப்படாமல், தற்போது நடைமுறையில் இருக்கின்ற அரசமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டத்தில்உள்ளடக்கப்பட்டுள்ள அதிகாரப் பகிர்வுகளைவிட முன்னேற்கரமான அதிகாரப் பகிர்வுகளை உள்ளடக்கியதான சீர்திருத்தங்கள் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்படுமாயின் அதனை நாங்கள் ஏற்பதற்குத் தயாராகவே இருக்கின்றோம்.

இத்தகைய புதிய ஏற்பாடுகள், தற்போதுள்ள 13 ஆவது திருத்தச் சட்டத்தில் உள்ளவாறான அதிகாரப் பகிர்வுக்கு எந்தவகையிலும் குறைந்தனவாக இருப்பின், அதனை ஒருபோதும் நாங்கள் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை என்பதை இங்கு வலியுறுத்த விரும்புகின்றேன்.

இந்த விடயத்தில், தமிழ் பேசும் மக்களுக்கான நியாயமான அரசியல் அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருக்கின்ற நாம், அது, ஒற்றையாட்சியாக, சமஷ்டியாக, அமெரிக்க மொடலாக, இந்திய மொடலாக, பின்லாந்து வரைவாக என்றெல்லாம் பெயர் வைத்துக் கொண்டுதான் வரவேண்டுமென்று வறட்டுப் பிடிவாதம் பிடித்துக் கொண்டிருக்கப்போவதில்லை. இவ்வாறு சொற் பதங்களை வைத்து, சிலம்பாட்டம் ஆடிக் கொண்டு இனியும் காலத்தைக் கடத்துவதற்குத் தமிழ் மக்கள் தயாராக இல்லை என்பதை அவதானத்துக்குக் கொண்டுவர விரும்புகின்றேன்.

**சொற்பதங்களை வைத்து சிலம்பாட்டம் ஆடி காலத்தைக் கடத்த எம் மக்கள் தயாரில்லை.**

எமதுநாட்டுக்குப்பொருத்தமானவகையிலானதும், எமது மக்களுக்கு போதிய அளவிலானதும், சட்ட ரீதியாகவோ அன்றி நிர்வாக ரீதியாகவோ எவ்வகையிலும்,மீளப்பெறஇயலாதவகையிலான நியாயமான அதிகாரப் பகிர்வையே நாம் தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றோம்.

உத்தேச புதிய அரசமைப்பு தொடர்பிலான இடைக்கால அறிக்கையில் என்னென்னவிடயங்கள்உள்ளடக்கப்பட்டுள்ளன என்பது தொடர்பாக ஆராய்ந்து பார்ப்பதற்குஇடங்கொடுக்காதவகையில், சமஷ்டி, ஒற்றையாட்சி போன்ற இத்தகைய சொற்பதங்கள் மக்களிடையே குழப்பத்தை உண்டு பண்ணிவிடுகின்றமையால், அதன் ஊடாக எழுகின்ற எதிர்ப்புகள்நேர்மையானமுயற்சிகளைக் கூடத் தடுத்து வருகின்ற நிலையையே நாம்தொடர்ந்தும்கண்டுவருகின்றோம்.

**சமஷ்டி என்றால் சந்தேகம்**

சமஷ்டி என்ற சொற்பதம் சிங்கள மக்களுக்குச் சந்தேகத்தையும், ஒற்றையாட்சி என்ற சொற்பதம் தமிழ் மக்களுக்கு சந்தேகத்தையும் உருவாக்கியுள்ள ஒரு நிலைமை, காலாகாலமாக எமது நாட்டில் முன்னிறுத்தப்பட்டு, இரு இனங்களுக்கிடையேயும்தமிழ் சிங்கள சுயலாபஅரசியல்வாதிகளால் போஷித்து, வளர்க்கப்பட்டு வந்திருக்கின்றது.

இத்தகையதொரு சூழலில் இந்த அரசு குறிப்பாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் புதிய அரசமைப்பு தொடர்பில் கடந்த தேர்தல் காலங்களில் மக்களுக்கு வழங்கியிருந்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்காக நேர்மையானமுறையில்செயற்பட்டுவந்தாலும், இந்த உத்தேசபுதிய அரசமைப்பு தொடர்பிலான இடைக்கால அறிக்கையில், ஏனையபலநல்லஅம்சங்கள்உள்வாங்கப்பட்டிருந்தன. ஆயினும், அந்த முயற்சிகள்வீணடிக்கப்பட்டுவிடும்நிலை ஏற்பட்டுவிடுமோஎன்றஅச்சம்தற்போது எழுந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

இந்தப் புதிய அரசமைப்பு தொடர்பிலானஇடைக்காலஅறிக்கைதயாரிப்பில் ஈடுபட்டுள்ளவர்கள் எனக் கூறிக் கொள்பவர்களில் ஒரு சிலர், தங்களது புகழை, தகைமைகளை சமூகத்தின் முன் பறைசாற்றுவதற்காகத் தெரிவித்து வருகின்ற சிலகருத்துக்கள், சும்மாகிடந்தவாய்க்கு அவல் கிடைத்ததைப் போன்று இனவாதத் தரப்பினருக்குச் சாதகமாக்கிவிட்டுள்ளன.

இந்த புதிய அரசமைப்பு தொடர்பிலான இடைக்கால அறிக்கை தயாரிப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த ஆரம்பகாலகட்டத்தில், எமது அரசமைப்பில் ஏற்கனவே இருக்கின்றவற்றை புதிதாக ஏற்படுத்துவதைப்போல், உத்தேச புதிய அரசமைப்பில் மாகாணங்களுக்குப்பொலிஸ், காணிஅதிகாரங்கள் வழங்கப்படும் என ஒருவர் தெரிவித்திருந்தார். தேவையற்றதொரு சந்தர்ப்பத்தில் திடீரென இப்படி ஒரு கருத்து வெளியிடப்பட்டதால், சந்தேகத்துக்கு உட்பட்டவர்கள் மத்தியில் ஒரு குழப்பமான சூழ்நிலைதோன்றியிருந்தது. இந்தக்குழப்ப நிலை மாறுவதற்குள், சமஷ்டி குணாதிசயங்களைக் கொண்டதாக உத்தேச புதிய அரசமைப்பு உருவாகுமென இன்னொருவர் கூறியிருந்தார். இதனால், ஏற்கனவே இருந்த குழப்ப நிலை அதிகரித்து, சில பௌத்த பீடங்களின் மகாநாயக்க தேரர்கள் புதிய அரசமைப்பு இந்த நாட்டுக்குத் தேவையில்லை என அறிக்கை விடும் அளவுக்கு நிலைமை வந்திருந்தது. இன்று இந்த நிலைமை அனைத்து பௌத்த பீடங்களினதும் கடுமையான விமர்சனத்திற்கு உட்பட்டிருப்பதைக் காணக் கூடியதாகவுள்ளது.

**சொற்பத குழப்பத்தால் ஏற்பட்டுள்ள பதற்றம்**

இப்போது இன்னுமொரு தேவையற்ற சர்ச்சை உருவாக்கப்பட்டு வருகின்றது. அதாவது, சிங்கள மொழியில் ஒற்றையாட்சியை ஏக்கீய ராஜ்ய என்றும், தமிழ் மொழியில், ஒற்றையாட்சியை – ஒரு மித்த நாடு என்றும் குறிப்பிடப்பட்டு, ஒரு குழப்பநிலைதோற்றுவிக்கப்பட்டுள்ளது. அரசின் தன்மை மற்றும் இந்த நாடு பற்றியவியாக்கியானத்துக்கிடையிலான இந்த குழப்ப நிலை காரணமாக இன்று எமது நாட்டில் அனைத்து பௌத்த பீடங்கள், சட்டத்தரணிகள் சங்கம், மேலும் பல பொது அமைப்புகள், இடது சாரிகள், புத்திஜீவிகள் இடையே ஒருவித பதற்ற நிலைமை உருவாகியுள்ளது. இந்தக் குழப்பம் ஏன்? எதற்காக? என நான் கேட்க விரும்புகின்றேன்.

தமிழ் மக்களை ஏமாற்றுவதற்கா? ‘ஒருமித்த நாடு’ எனத் தமிழில் மட்டும் எழுதிவிட்டால் மாத்திரம் தமிழ் மக்கள் தங்களுக்கு எல்லாம் கிடைத்துவிடும் என்று திருப்திப்பட்டு விடுவார்கள் என நினைத்துக் கொண்டு தமிழ் மக்களை ஏமாற்றுவதற்காக இவ்வாறு செய்யப்பட்டதா? (12 ஆம் பக்கம் பார்க்க...)

தொகுப்பு: பொன்.வேணு கிருஷ்ணா




ஒக்ரோபர் முதலாம் சிவில் கார்ட் பொலிஸ் செய்தமையைப் போல, லிபியாவின் பாதுகாப்புப் படைகள் அமைதியான வாக்காளர்கள் மீது தாக்குவதும்வயதுமுதிர்ந்தபெண்களை அடிப்பதுமான காணொலிகள் 2011 இல் வெளியாகியிருக்குமாயின், அப்போது பசுமைக் கட்சியின் டானியல் கோன்- பென்டிட் மற்றும் புதிய முதலாளித்துவ-எதிர்ப்புக் கட்சியின் ஒலிவியே பெசென்செனோ போன்ற மனிதாபிமான ஏகாதிபத்தியத்தின் வக்காலத்து வாதிகள் என்னமாதிரியான எதிர்வினையாற்றியிருப்பார்கள் என்பதைக் கற்பனை செய்வதற்கு கற்பனைத் திறன் அதிகமாய் அவசியப்படாது.

தனது சொந்த மக்களைத் தாக்குவதற்காக லிபியத் தலைவர் கேர்ணல் மும்மார் கடாபியைக் கண்டனம் செய்து, லிபியா மீது குண்டுவீசுவதற்கும் கடாபியைப் படுகொலை செய்வதற்குமான காலஅட்டவணையை நேட்டோ துரிதப்படுத்துவதற்குக் கோரியிருப்பார்கள்.

ஆனால், கோன்-பென்டிட் இப்போது மாட்ரிட்டை குண்டுவீசவோ ரஹோயைக் கொல்லவோ அழைக்கவில்லை. பாரிஸ், கட்டலோனியா மீது ஒரு நவ-பிராங்கோவாதத் தாக்குதலைத் தொடுப்பதற்கு ரஹோய்க்கு பச்சைக்கொடி காட்டிக்கொண்டே, பிரான்ஸின் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் மறைப்பின் கீழ் ஒரு மேலதிக பொலிஸ்-அரசின் பெருக்கத்துக்குத் தயாரித்துக் கொண்டிருக்கும் நிலையில், அவர் மக்ரோனுடனான நட்புணர்வு சந்திப்புகளை நடத்திக் கொண்டிருக்கிறார்.

## கட்டலோனியா: அரசியல்- வரலாற்றுச் சுருக்கம்






ஐரோப்பாவில் பிரித்தானியா மக்களின் பிரெக்ஸிட் ஆதரவான வாக்களிப்பைத் தொடர்ந்து கட்டலோனியா பிராந்தியத்தின் இன்றைய நிலை ஐரோப்பாபாவில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. பிரான்ஸின் தெற்கு மலைத்தொடரால் பிரிக்கப்பட்டு, ஸ்பெயின் நாட்டின் தென்கிழக்குப் பகுதியில் அமைந்திருக்கும் பிரதேசம் கற்றலோனிய ஆகும்.

கற்றலன் மொழி பேசும் மக்கள் Valencia,the Balearic Islands, Aragon மற்றும் Catalonia ஆகிய ஸ்பெயினின் பிராந்தியங்களிலும் பிரான்ஸ் , இத்தாலி ஆகிய நாடுகளின் சில இடங்களிலும் பரவி வாழ்கின்றனர்.

ஸ்பெய்னின் 17 தன்னாட்சி கொண்ட பிராந்தியங்களில் கற்றலோனியா 7.5 மில்லியன் மக்கள் தொகை கொண்ட ஒரு பிராந்தியமாகும். ஸ்பெய்னின் மக்கள் தொகையில் 16 சதவீதம் கட்டலோனியர்கள் ஆகும். சுற்றுலா நகரான பார்சிலோனாவை தலைநகராகக் கொண்டதும், 20 சதவீத GDP யையும் , 30சதவீத ஏற்றுமதியையும் ஸ்பெய்ன் நாட்டுக்கு ஈட்டித்தரும் வளம் பொருந்திய பிராந்தியமாகும். 12 ஆம் நூற்றாண்டு வரை தனியரசாக இருந்த கட்டலன் பிரதேசம், 16ஆம் நூற்றாண்டில் Nueva Planta Decrees 1716 எனும் ஆட்சி அதிகார சட்டத்தின் கீழ் நேரடியாக ஸ்பானிய ஆட்சியின் கீழ் வந்தது.

1931 ஆம் ஆண்டு ஸ்பெய்ன் குடியரசு ஆகிய போது கட்டலோனியாவுக்குத் தன்னாட்சி அதிகாரங்கள் வழங்கப்பட்டன. ஆனால், 1939 - 1975 வரையான பிராங்கோவின் சர்வாதிகார ஆட்சியில் கட்டலோனிய மக்கள் பெரிதும் நசுக்கப்பட்டனர். கற்றலோன் மொழிக்குத் தடை விதிக்கப்பட்டது. கட்டலோனியர்களின் கலாசார அடையாளமான மனித கோபுரம் (Castells or Human Tower) அமைத்தல் சட்டவிரோதம் என அறிவிக்கப்பட்டது. பெற்றோர் பிள்ளைகளுக்கு ஸ்பானிஷ் பெயர்களை வைக்க வற்புறுத்தப்பட்டனர். சர்வாதிகார ஆட்சிக்கு எதிராக போராடியவர்களும், கட்டலோனியா விடுதலைக்குப் போராடியவர்களையும் கொன்று குவித்தது பிராங்கோவின் ஆட்சி. முதலாளித்துவ ஆட்சியின் சர்வாதிகாரத் தன்மையைக் கேள்விக்கு உட்படுத்தி மில்லியன்கணக்கான இளைஞர்கள். தொழிலாளர்கள் மற்றும் கட்டலோனியா மக்கள் அணிதிரண்டனர்.

இந்நிலையில், 1978 இல் கொண்டுவரப்பட்ட புதிய அரசமைப்புச் சட்டம் கட்டலோனியாவுக்கு மீண்டும் தன்னாட்சி அதிகாரங்களை வழங்கியது.

இந்த விதத்தில் சமுதாயத்தின் சோசலிச மாற்றங்கள் தடுக்கப்பட்டு, முதலாளித்துவ வர்க்கம் ஓர் அரசமைப்பு மற்றும் நாடாளுமன்ற ஆட்சி மூலம் பெரும் சர்வாதிகாரக் கூறுகளை உள்ளடக்கிய அரசமைப்பு சட்ட மாற்றத்தின் மூலம் நிலைமையைக் கட்டுப்படுத்தியது. ஸ்பெயின் முதலாளித்துவமும் இடதுசாரிகளும் சம்மதித்து செயற்பட் டனர். இந்த அரசமைப்பு சட்டம் பொலிஸ் அதிகாரம், கல்வி, சுகாதாரம், பொதுத்துறை சேவைகள் என சில அதிகாரங்கள் உள்ளடங்கலாக தன் னாட்சி அதிகாரம் கொண்ட ஒரு பிராந் தியமாகியது.

2008 ஆம் ஆண்டின் பொருளாதார வீழ்ச்சியால் உழைக்கும் வர்க்கத்தினர், மாணவர்கள் , இளைஞர்கள் வெகுவாக பாதிப்படைந்தார்கள். வேலையில்லா திண்டாட்டம், மற்றும் குறைந்த ஊதியங்கள், இளைஞர்களுக்கான எதிர்காலம் இல்லாதமை ஆகியவற்றின் விளைவு தேசிய விடுதலையை நோக்கிநகர்த்துகிறது. 9.89 பில்லியன் யூரோக்களை வரியாகச் செலுத்தும் பிரந்தியம் தமது நிர்வாக நிதியாக 9.5 சதவிகிதத்தையே பெறுகிறது.

தமது வளங்கள் சுரண்டப் படுகின்றன எனவும், தமது கலாசாரம், மொழி என்பன முடக்கப்படுகின்றன எனவும் கட்டலோனிய மக்கள் தங்கள் சுதந்திரம் கோரி 1909, 1931, 1934, 1936, 1977 எனத் தொடர்ந்து போராடி வருகின்றனர்.

2010 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் ஸ்பெய்ன் நீதிமன்றம் கட்டலோனியா பிராந்தியத்தின் தன்னாட்சி அதிகாரங்களைக் குறைக்கும் சட்டங்களை அமுல்படுத்தியது. இதனால் 135 உறுப்பினர்களைத் தெரிவு செய்யும் கட்டலோனியா நாடாளுமன்றத்துக்கான தேர்தலில் சுதந்திர கோரிக்கை வலுப்பெற்றது.

(கேள்வி தொடரும்)



காலைக்கதிர் Kalaikkathir





# சுதந்திர வேட்கை

முப்பது ஆண்டுகளுக்கு மேல் படிநிலை வளர்ச்சி கண்டு, நீட்சி கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் புரட்சிகர வரலாறு ஒரு பூகம்பமாக வெடித்துச் சிதறி, பிரளயமாகப் பொங்கிப் பிரவகித்து அடங்கியிருக்கின்றது.

அந்த இயக்கத்தின் வரலாற்றுக்குள்ளே பொதிந்து கிடக்கும் அதிசயிக்கத்தக்க நுட்பமான அம்சங்களும் தியாகங்களும் வீர வரலாறுகளும் நம்மில் பலருக்குத் தெரிவதில்லை.

விடுதலைப் புலிகள் இயக்கம் பற்றிய ஒரு பார்வையாக – அந்த இயக்கத்துடன் பங்காற்றிய ஒரு வரலாற்றுப் பயணத்தின் படிமமாக – கட்டவிழ்கின்றது இந்த நூல்.

புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் எழுதிய 'போரும் சமாதானமும்' என்ற நூலின் ஊடாக விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தரிசித்த நாம், அவரது துணைவியாரான – ஆஸ்திரேலியப் பெண்ணான – அடேல் பாலசிங்கத்தின் பட்டறிவுப் பதிவு மூலமும் புலிகள் இயக்கத்தின் உட்தூக்குமங்களை இந்தப் புதிய தொடரின் ஊடே அறிந்து கொள்ள முடியும்.

'சுதந்திர வேட்கை' என்ற இந்த நூல் முதலில் ஆங்கிலத்தில் 'Will To Freedom' என்ற தலைப்பில் வெளியானது. தமிழ்ப் பதிப்பு சரியாக பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் 2002 இல் 'தமிழீழ விடுதலைப் போராட்டம் – உள்ளிருந்து ஒரு நோக்கு' என்ற பீடிகையுடன் வெளியானது.



145




## அத்தியாயம் - VIII

## விடுதலைப் போரின் நாயகர்கள்

விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக் கழகத்தின் பொறுப்பாளராகப் புதுவை பணியாற்றி வருகிறார். அத்துடன் பிரபல தமிழ் இலக்கிய ஏடான 'வெளிச்சத்தின்' மேற்பார்வை ஆசிரியராகச் செயற்பட்டு அந்தச் சஞ்சிகையை நீண்டகாலமாகப் பிரசுரித்து வருகின்றார். 'வெளிச்சம்' சஞ்சிகைக்கு பாலா பல கட்டுரைகளை எழுதி இருந்தார். 'பிரம்ம ஞானி' என்ற புனை பெயரில் தத்துவம், சமூகவியல், அரசியல் போன்ற துறைகளில் தொடர்ச்சியாகப் பல கட்டுரைகளை எழுதி இருக்கிறார். புதுவையின் ஊக்குவிப்பும், முயற்சியும் காரணமாகவே 'உடையாத விலங்குகள்' என்ற தலைப்பில் சீதனப் பிரச்சினை பற்றி நான் எழுதிய ஆங்கில நூல் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு தொடர்ச்சியான கட்டுரைகளாக 'வெளிச்சத்தில்' பிரசுரமாகின.

புதுக்கவிதை இலக்கியத்தில் புகழீட்டியவர் புதுவை. சரியாகச் சொல்லப் போனால் அவர் ஒரு மக்கள் கவிஞர். அவரது கவிதைகள் விடுதலைப் போராட்டத்தையும் அந்தப் போராட்ட சூழலில் வாழும் மக்களின் அவலம் நிறைந்த அன்றாட வாழ்க்கையையும் உணர்வுபூர்வமாக - மெய்யுண்மையாக - பிரதிபலித்துக் காட்டும். புதுவை ஒரு விடுதலைக் கவிஞரும் கூட. அவரது விடுதலைக் கவிதைகள் மிகவும் பிரபல்யமானவை. தமிழர் தேசமெங்கும் எல்லா மக்களாலும் உணர்வுடன் பாடப்படும் கவிதைகள் அவை.

எமது வீட்டுக்கு அடிக்கடி விஜயம் செய்யும் நண்பர்களில் ரவியும் (புலேந்திரன்) ஒருவர். ரவி ஒரு சிரேஷ்ட உறுப்பினர். புலிகள் அமைப்பின் அதிகார பூர்வ இதழான 'விடுதலைப் புலிகள்' பத்திரிகையின் ஆசிரியர். அடுத்தவர் ஜெயராஜ். புலிகள் அமைப்பின் தினசரி பத்திரிகையான 'ஈழநாதத்தின்' ஆசிரியர். விடுதலைப் புலிகள் அமைப்பின் கொள்கை நெறி தவறாமல் எழுத வேண்டும் என்பதால் ரவியும் ஜெயராஜும் பாலாவின் வழிகாட்டலில் தங்கி இருந்தனர்.

அரசியல் நிலைமையிலும், போர்க்கள நிலைவரங்களிலும் ஏற்படும் மாற்றங்கள், திருப்பங்களை அறிந்து கொள்வதற்காக ஜெயராஜ் எமது வீட்டுக்கு தினமும் வருவார். இராணுவ அரசியல் நிலைமை பற்றிய மாதாந்த கட்டுரைகள் எழுத வேண்டும் என்பதால் ரவி பாலாவை அடிக்கடி சந்தித்து, கலந்தாலோசனைகள் நடத்துவர். விடுதலைப் புலிகளின் இராணுவ தந்திரோபாய நகர்வுகள் பற்றி விவரிக்கும் கட்டுரைகள் பிரபாகரனுக்கு அனுப்பப்பட வேண்டும். அவரது ஒப்புதலைப் பெற்ற பின்னரே அந்தக் கட்டுரைகள் 'விடுதலைப் புலிகள்' பத்திரிகையில் பிரசுரமாகும். புலிகள் அமைப்பின் கொள்கையை விளக்கி, 'விடுதலைப் புலிகள் ' பத்திரிகைக்கு சில சமயங்களில் பாலாவும் தத்துவார்த்தக் கட்டுரைகளை எழுதுவார். புலிகள் அமைப்பின் கொள்கையை வகுக்கும் தத்துவாசிரியர் என்ற ரீதியில் மட்டுமல்லாமல், பத்திரிகைத் துறையிலும் நிறைய அனுபவம் பெற்றவர் என்பதாலும் பாலாவின் ஆலோசனையும் வழிநடத்தலும் ரவிக்கும் ஜெயராஜுக்கும் தேவைப்பட்டன. அத்தோடு பிரபாகரனுடனும் தமிழ்ச்செல்வனுடனும் மற்றைய மூத்த தளபதிகளுடனும் பாலாவுக்கு தனிப்பட்ட உறவும் தொடர்பும் இருந்தமையால் அன்றாட செய்திகளை மட்டுமன்றி, அரசியல் - இராணுவ நிலைமைகளையும் திருப்பங்களையும் எடுத்து விளக்கும் ஆற்றல் பாலாவிடம்



இருந்தது.

ரவியின் மனைவி சோபனா விடுதலைப் புலிகள் அமைப்பில் பணி புரிந்தவர். மகளிர் அமைப்பின் மாதாந்த ஏடான 'சுதந்திரப் பறவைகள்' பத்திரிகையில் அவர் பணி புரிந்த காலத்தில் இருந்து சோபனாவை எமக்கு நன்கு தெரியும். ஜெயராஜின் மனைவி கங்கா. இவர் புதுக்குடியிருப்பு மகா வித்தியாலயத்தில் ஆசிரியராகப் பணிபுரிகிறார். இந்த இருதம்பதிகளும் எமது நெருங்கிய நண்பர்கள் என்பதால் அடிக்கடி எமது இருப்பிடத்துக்கு வந்து செல்வார்கள்.

### தொடரும் போர்

கண்டி- யாழ்ப்பாண நெடுஞ்சாலையைக் கைப்பற்றி வன்னிப் பெருநிலப்பரப்பை இரு கூறுகளாகத் துண்டாடும் நோக்கத்தோடு தொடக்கப்பட்ட 'ஜெயசிக்குறு' படைநகர்வு 18 மாதங்களாக நிகழ்ந்த கொடிய சண்டைகளைத் தொடர்ந்து மாங்குளத்தில் தடுத்து நிறுத்தப்பட்டது. சிங்கள இராணுவத்தின் முன்னேற்றத்தை எப்படியாவது முறியடிக்க வேண்டுமென உறுதிபூண்டு நின்ற புலிப்படை வீரர்கள், மூர்க்கமான எதிர்த் தாக்குதலைத் தொடுத்தனர். சிங்கள இராணுவப் படையணிகளுக்குப் பின்புறமாகவும், பக்கவாட்டாகவும் உக்கிரமான தாக்குதலை நடத்தி, அரச துருப்புகளுக்கு பெரிய உயிர்ச் சேதங்களை விளைவித்தனர். புலி வீரர்களின் ஆக்ரோஷமான எதிர் தாக்குதலின் விளைவாக அரச படைகளின் மன உறுதி உடைக்கப்பட்டது. 'ஜெயசிக்குறு' சமரில் மூவாயிரம் இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்; ஏழாயிரம் பேர் வரை காயமடைந்தனர்.

வன்னிக் காடுகள் விடுதலைப் புலிகளுக்கு மிகவும் பரீட்சயமான பிரதேசம். இந்த மண்ணில் தான் புலி வீரர்கள் உலகத்தின் நான்காவது பெரிய இராணுவமாகிய இந்தியப் படையுடன் போராடி சாதனைகளைப் படைத்தனர். காட்டுக் கெரில்லாப் போரின் ஆழமான அனுபவத்தைக் கொண்டிருந்ததாலும், தமக்குப் பழக்கப்பட்ட இராணுவ ரீதியாக அனுகூலமான நிலத்தில் நின்று போராடியமையாலும் புலிப் படை வீரர்கள் சிங்கள அரச படைகளுக்கு பெரும் சவாலாக விளங்கினர்.



முல்லைத்தீவு பெரும் தளத்தில் இருந்து கைப்பற்றப்பட்ட தளவாடங்களை ஆதாரமாகக் கொண்டு பீரங்கி, மோட்டார், டாங்கி எதிர்ப்பு படைப்பிரிவுகளை உருவாக்கிய பிரபாகரன் அவற்றை 'ஜெயசிக்குறு' படை அணிக்கு எதிராக ஏவிவிட்டார். தமிழீழத்தின் முழுப்படை பலத்தையும் அணி திரட்டி வன்னிப் பிரதேசத்தைப் பாதுகாக்க அவர் உறுதி பூண்டிருந்தார். இதன் அடிப்படையில் மட்டக்களப்பு-அம்பாறை மாவட்டத்தின் மூத்த தளபதியான கேணல் கருணாவின் தலைமையில் இயங்கிய ஜெயந்தன் படையணியை வன்னிக்கு வரவழைத்தார். ஜெயந்தன் படையணி போர் அனுபவத்தில் முதிர்ந்த- போர்க் கலையில் பல சாதனைகளைப் புரிந்த- ஒரு சிறப்புப் படைப்பிரிவு. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த வன்னி பெரும் சமரில் ஜெயந்தன் படையணியின் பங்களிப்பு மகத்தானது. அது வன்னிச் சமரில் பெரும் திருப்பத்தை ஏற்படுத்தியது. ஜெயந்தன் படையணி, சாள்ஸ் அன்ரனி படையணி, இம்ரான்- பாண்டியன் படையணி, மாலதி படையணி, சுகன்யா படையணி, சோதியா படையணி மற்றும் வேவுப் பிரிவு, டாங்கி எதிர்ப்பு விசேட அணி, கரும்புலி அணி, விமான எதிர்ப்பு அணி போன்ற சகல படைப்பிரிவுகளும் ஒன்றிணைக்கப்பட்ட ஒரே கட்டளைப் பீடத்தின் கீழ் எதிரிப் படைகள் மீது தாக்குதல் நிகழ்ந்தன. இந்தப் பெரிய எதிர்த் தாக்குதலுக்கு கேணல் கருணா, கேணல் தீபன், கேணல் பால்ராஜ், கேணல் பானு, கேணல் விதுஷா ஆகிய மூத்த களத் தளபதிகள் தலைமை தாங்கி படை நகர்த்தினர்.

(தொடரும்...)

காலைக்கதிர் Kalaikkathir





# புதிய அரசமைப்பு சாத்தியமில்லை எனில் 13 ஆம் திருத்தத்தை மேம்படுத்தலாம்!

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

இல்லை, சிங்கள மக்களுக்குத் தமிழ் தெரியாது என நினைத்து, சிங்கள மக்களைஏமாற்றுவதாகஎண்ணிஇவ்வாறு செய்யப்பட்டதா? இல்லை, சிங்கள மக்களுக்குத் தெரிய வந்து, சிங்கள மக்களின் எதிர்ப்புக்களை, கோபங்களைத் தமிழ் மக்கள்மீது திருப்பிவிடலாம் என எண்ணி, திட்டமிட்டு இவ்வாறு செய்யப்பட்டதா?

இப்போது இத்தகைய நிலைமை தானே உருவாகி வருகின்றது? இனங்களுக்கிடையில் அதிகரித்துள்ள சந்தேகங்களை அகற்றி, அருகிப் போயிருக்கின்ற நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்குப் பதிலாக, மேலும், மேலும் சந்தேகங்களை வலுப்படுத்துவதாகவே இந்தச்செயற்பாடுஅமைந்திருப்பதுமிகவும் வேதனையாகவே இருக்கின்றது.

**தமிழ் சொற்பதத்திலும் ஒருவித மயக்கம்**

'ஏக்கீய ராஜ்ய' என்ற சிங்கள சொற்பதத்திற்குரிய தமிழ் சொற்பதம் – வழக்கில் இருக்கின்ற சொற்பதம் – 'ஒற்றையாட்சி' என்பதாகும். 'ஒருமித்த நாடு' என்றதமிழ்சொற்பதத்துக்குரிய சிங்கள சொற்பதம் 'எக்வூ ரட்ட' என்பதாகும். இந்த நிலையில், அரசின் தன்மை, பிரிக்கப்படாத மற்றும் பிரிக்கப்பட முடியாத நாடு என்பதை சிங்களப் பதமான 'ஏக்கீயராஜ்ய'நன்குவிவரிக்கப்படுகிறது என இடைக்கால அறிக்கையில்தமிழில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ள நிலையில், சிங்களத்தில் ஏக்கீய ராஜ்ய – ஒற்றையாட்சி என்று சிங்கள மக்களுக்கும், அதனையே 'ஒருமித்த நாடு' என்று தமிழ் மக்களுக்கும் வெவ்வேறு பெயர்களில் காட்சிப்படுத்துவதால் யாருக்கு என்ன இலாபம்? எனக் கேட்க விரும்புகின்றேன்.

தமிழ் மக்கள் இதனைப் புரிந்து கொள்ளாதவரையில், இப்படி ஒரு சொற்பதத்தை புகுத்தியவர்கள் இது தங்களது சாதனை என நினைக்கலாம். ஆனால், சிங்கள மக்கள் புரிந்துகொண்டால் சோதனை யாருக்கு என்பது தொடர்பிலும் இதை முன்மொழிந்தவர்கள் சிந்திக்க வேண்டும்.

ஒற்றையாட்சியை மிகத் தெளிவாகவே சிங்கள மொழியில் ஏக்கீய ராஜ்ய எனக்குறிப்பிடப்பட்டிருக்கும்நிலையில், அதனைத்தமிழ்மக்களைஏமாற்றுவதற்காக மாத்திரம் தமிழ் மொழியில் இன்னொரு பெயரைச் சூட்டி – பெயரை மாத்திரம் சூட்டி – அதாவது ஒருமித்த நாடு என்பது அரசின் தன்மையாக இல்லாத நிலையில் ஒருமித்த நாடு என்று அழைப்பது அரசின் தன்மை குறித்தா? அல்லது, நாடு குறித்த வியாக்கியானமா? அவ்வாறு எதையாவது இந்தத் தமிழ்ச் சொற்பதம் குறித்து நிற்கிறது எனில், அதை ஏன் சிங்கள மொழியில் குறிப்பிடவில்லை? ஏக்கீய ராஜ்ய எனும் ஒற்றையாட்சி என்ற சிங்கள சொற்பதத்தைத் தமிழில் ஒருமித்த நாடு எனக் குறிப்பிடப்படுவதன் ஊடாக மாத் திரம் அதிகரித்த அதிகாரங்கள் தமிழ்மக்களுக்குக் கிடைத்துவிடுமா? இல்லை. அல்லது ஒற்றையாட்சி என்ற சரியான தமிழ்ப் பதத்தைக் குறிப்பிட்டு விட்டால் அதிகாரங்கள் குறைந்து விடுமா? இல்லை. இணக்கப்பாடு காணப்படுகின்ற அதிகாரங்களே இருக்கும். அதுதான் உண்மை.

தமிழ் சொற்பதமோ, ஆங்கில சொற்பதமோ என்னென்ன கருத்துக்களைச் சுட்டிக்காட்டினாலும் இறுதியான தீர்வு சிங்களச் சொற்பதம் சுட்டிக்காட்டும் கருத்தையே கொண்டிருக்கும் என அனைத்து ஆவணங்களிலும் குறிப்பிடப்படுகின்றநிலையில்தமிழ்மக்களை மீண்டும் ஏமாற்றிவிடலாம் என நினைத்தா இவ்வாறான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனக் கேட்க விரும்புகின்றேன்.

இந்த சொற்பதங்களின் இருவேறு அர்த்தங்களையும் புரிந்துகொள்ள முடியாத அளவுக்குத் தமிழ் மக்களும், சிங்களமக்களும்அறிவிலிகள்அல்லர். சிங்களமக்கள்அனைவருக்குமேதமிழ் தெரியாதுஎன்றும்,தமிழ்மக்கள்அனைவருக்குமேசிங்களம்தெரியாதுஎன்றும் எண்ணிக்கொண்டு, இத்தகைய செயலில் ஈடுபடுபவர்களே அறிவிலிகளாக இருக்கக்கூடும் என நினைக்கின்றேன்.

**இது என்ன நாடகம்**

பலரை சில காலமும், சிலரை பல காலமும் ஏமாற்றலாம். ஆனாலும், எல்லோரையும் எந்தக் காலத்திலும் ஏமாற்றிக்கொண்டிருக்க முடியாது. இலங்கை அரசமைப்பை எடுத்துக் கொண்டால் 1972ஆம் ஆண்டிலிருந்து ஏக்கீய ராஜ்ய – ஒற்றையாட்சி எனும் பெயரையே இலங்கையின் அரசமைப்பு கொண்டுள்ளது. தற்போதைய இடைக்கால அறிக்கையிலும் அதே முறைமையே முன்வைக்கப்பட்டுள்ளது. அரசின் தன்மை ஏக்கீய ராஜ்ய– ஒற்றையாட்சியாகவே இருக்கும் எனக் கூறப்படுகின்றது. ஒருமித்தநாடு – எக்வூ ரட்ட என்ற வகையில் அங்கு அரசின் தன்மை குறிப்பிடப்படாத நிலையில், 'கானலைக் காட்டி நீர்' என்று கூறும் கதையாக அல்லவா இந்த செயற்பாடு அமைந்திருக்கின்றது? அதாவது, வடக்கில்தமிழரசு கட்சி என்றும் அதே கட்சியை தெற்கில் பெடரல் கட்சி (Fedaral Party) என்றும் கூறியமைபோல், இதனையும்அவ்வாறு மாறி, மாறிக் கூறலாம் என யாரும் நினைத்துவிட்டார்களா?

இத்தகைய நாடகம் தமிழ் மக்களின் நலன்களைக் கருத்தில் கொள்ளாது, தமிழ்மக்களின் வாக்குகளை மாத்திரமே குறிவைத்து ஆடப்பட்டிருக்கின்றது என்பது சிங்கள மக்களில் பலருக்குப் புரியாத நிலையில், இத்தகைய சொற்பிரயோகத்தால்தமிழ்மக்களுக்கு ஆகப்போவது ஒன்றுமில்லை என்பதுவும் உணரப்படாதநிலையில், இதன் ஊடாக நாடு பிரிக்கப்படுகின்றது என்ற நிலைப்பாட்டுக்கே சிங்கள மக்களில் பலரும் இன்று வந்திருக்கின்றார்கள்.

**மக்களை ஏமாற்றாதீர்!**

இன்று இந்த நாட்டில் இனங்களுக்கிடையில் நியாயமானதோர் அரசியல் தீர்வுக்கான கலந்துரையாடலுக்கு சுமுகமானதொரு சூழ்நிலை காணப்படுகின்ற நிலையில், இத்தகையகுழப்பத்தைஇந்த நாட்டில் உருவாக்குவது தேவைதானா? எனக் கேட்க விரும்புகின்றேன்.

இனியும் இந்த நாட்டில் குறுகிய அரசியல் சுயலாபங்களைக் கருதி எமது மக்களைத் தயவுசெய்து ஏமாற்ற வேண்டாம் எனக் கேட்டுக்கொள்கின்றேன். தமிழ் மக்களின் பெயரில் சிங்கள மக்களை ஏமாற்றாதீர்கள். சிங்கள மக்களின் பெயரில் தமிழ் மக்களை ஏமாற்றாதீர்கள். பொதுவாக இந்த நாட்டை ஏமாற்றாதீர்கள் என்பதை இங்கு வலியுறுத்த விரும்புகின்றேன்.

> **இன்று இந்த நாட்டில் இனங்களுக் கிடையில் நியாயமானதோர் அரசியல் தீர்வுக்கான கலந்துரையாடலுக்கு சுமுகமானதொரு சூழ்நிலை காணப்படுகின்ற நிலையில், இத்தகைய குழப்பத்தை இந்த நாட்டில் உருவாக்குவது தேவைதானா? எனக் கேட்க விரும்புகின்றேன். இனியும் இந்த நாட்டில் குறுகிய அரசியல் சுயலாபங்களைக் கருதி எமது மக்களைத் தயவு செய்து ஏமாற்ற வேண்டாம் எனக் கேட்டுக்கொள்கின் றேன். தமிழ் மக்களின் பெயரில் சிங்கள மக்களை ஏமாற்றாதீர்கள். சிங்கள மக் களின் பெயரில் தமிழ் மக் களை ஏமாற்றா தீர்கள். பொதுவாக இந்த நாட்டை ஏமாற்றாதீர்கள்.**

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா அம்மையார்முன்னேற்றகரமானதொரு அரசியல்தீர்வைக்கொண்டுவந்தபோது, அதனை தயாரிப்பதிலும், தடுப்பதிலும் துணை போனமைபோல், தற்போதும் அதே நிலையில், இத்தகைய சொற்பதஜாலங்களை முன்வைத்து அதனைத் தயாரிப்பதிலும், அதனையே முன்வைத்து, அதைத் தடுப்பதிலும் தமிழ் பிரதிநிதிகள் துணைபோகக் கூடாது எனக் கேட்டுக் கொள்கின்றேன். முயலுடனும் ஓடி, வேட்டை நாயுடனும் ஓடிய கதைபோல ஆகிவிடக்கூடாது.

கடந்தகால ஆட்சியில் வன்முறைக்குத் தீர்வுகாணப்பட்ட போதிலும், தேசிய நல்லிணக்கம் வெற்றிபெற்றிருக்கவில்லை. அந்தவகையில், எமது நாட்டு மக்களிடையே சகோதர, சமத்துவ சூழலை ஏற்படுத்துவதற்கும், நல்லநோக்கங்களை முன்வைத்து, தமிழ்மக்களை முன்னேற்றகரமான பாதையில் இட்டுச் செல்வதற்கும், ஜனாதிபதியும், பிரதமரும் மேற்கொண்டு வருகின்ற முயற்சிகளுக்குத்தமிழ் தலை மைகளும் ஆரோக்கியமான ஒத்துழைப்புகளை வழங்க முன்வரவேண்டும் என்ற கோரிக்கையையும் இங்கு முன்வைக்க விரும்புகின்றேன்.

கடந்த காலங்களில் எமது மக்களுக்குக் கிடைத்திருந்த பொன்னான வாய்ப்புகளை எல்லாம் தமிழ்தலைமைகள் எமது மக்களுக்காகப் பயன்படுத்தத் தவறிவிட்ட வரலாறுகளையே நாம் கண்டு வந்துள்ளோம். இந்த நிலையில் இப்போதாவதுமாற்றம்தேவை. அதுவே, எமது மக்களுக்கு நன்மை யைக் கொண்டு வரும். அந்த வகையில், புதிய அரசமைப்பு தொடர்பிலான உள்ளடக்க விடயங்கள், அதனது தேவை என்பன தொடர்பான விடயங்களை வெறும் வாய்ப் பேச்சுடன் நிறுத்திக் கொள்ளாமல், மக்களிடையே கொண்டு செல்வதற்குத்தமிழ் அரசியல்தலைமைகள் முன்வர வேண்டும்.

புதிய அரசமைப்பு ஒன்றின் தேவை இந்த நாட்டு மக்களுக்கு இருக்கின்றது. அது, இந்த நாட்டு மக்களது மனித உரிமைகள் உட்பட அனைத்து அடிப்படை உரிமைகளும் பாதுகாக்கப்படும் வகையில் உருவாக வேண்டும் என்ற எதிர்பார்ப்பு மக்களிடையே காணப்படுகின்றது.

**கூடிய அதிகாரம் இருப்பின் நாம் ஏற்கத் தயார்**

அந்தவகையில், இந்த நாட்டில் அனைத்து இன மக்களும் புரிந்து கொள்ளக்கூடிய வகையிலும், தற்போதைய எமது அரசமைப்பில் இருக்கின்ற, 13 ஆவது திருத்தச் சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களை விடவும் முன்னேற்றகரமான அதிகாரப் பகிர்வுகளைக்கொண்டவகையிலும்முழுமைப் படுத்தப்பட்ட புதிய அரசமைப்பு எமது நாட்டில் நிறைவேற்றப்படுமாயின், அல்லது, புதிய அரசமைப்பு நிறைவேற்றப்படாமல், தற்போது நடைமுறையில் இருக்கின்ற அரசமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள அதிகாரப் பகிர்வுகளைவிட முன்னேற்றகரமான அதிகாரப் பகிர்வுகளை உள்ளடக்கியதான சீர்திருத்தங்கள் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்படுமாயின் அதனை நாங்கள் ஏற்பதற்குத் தயாராகவே இருக்கின்றோம் என்பதை மீண்டும் தெரிவித்து–

அத்தகையதொரு புதிய அரசமைப்பு நிறைவேற்றப்பட இயலாத சூழ்நிலை ஏற்படுமானால், 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப் படுத்துவதை ஓர் ஆரம்பமாகக் கொண்டு படிப்படியான அதிகாரப் பகிர்வு நோக்கிய வழிமுறையை முன்னெடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். ★

# பேண்தகு அபிவிருத்தி இலக்குகள் குறித்த நிபுணர் குழு அறிக்கை ஜனாதிபதியிடம்!



கொழும்பு, நவ. 03

2030 ஆம் ஆண்டாகும் போது இலங்கையின் பொருளாதார, சமூக மற்றும் சூழல் ஆகிய துறைகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய பேண்தகு அபிவிருத்தி இலக்குகள் குறித்த நிபுணர் குழுவின் முதலாவது அறிக்கை வரைபு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கையளிக்கப்பட்டது.

ஜனாதிபதி அலுவலகத்தில் இந்த அறிக்கையை பேராசிரியர் மொஹான் முனசிங்கவினால் இந்த வரைபு ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது.

2030ஆம் ஆண்டாகும்போது பொருளாதாரம், சமூக மற்றும் சுற்றாடல் ஆகிய துறைகளில் இலங்கை அடைய வேண்டிய பேண்தகு அபிவிருத்தி இலக்குகள் குறித்த பேண்தகு அபிவிருத்தி நோக்கை வரைவதற்காக ஜனாதிபதியால் கடந்த ஜனவரி மாதம் நிபுணர் குழுவொன்று நியமிக்கப்பட்டது.

இந்தக் குழுவின் தலைவராக பேராசிரியர் மொஹான் முனசிங்க நியமிக்கப்பட்டார்.

பொருளாதார, சமூக மற்றும் சுற்றாடல் ஆகியதுறைகளுடன் தொடர்பான விவசாயம், போக்குவரத்து, மின்சக்தி, சுகாதாரம், கல்வி, நீர், சமுத்திரம் மீன்பிடி, நகர, பௌதிக திட்டமிடல் ஆகிய இலக்குகளினூடாக 2030 ஆம் ஆண்டாகும்போது இலங்கை அடைய வேண்டிய இலக்குகள் குறித்து இவ்வரைபு விரிவான விடயங்களை உள்ளடக்கியுள்ளதுடன், அவ்விடயங்களை எதிர்காலத்தில் நடைமுறைப் படுத்துவது குறித்து இதன் போது விரிவாக கலந்துரையாடப்பட்டது.

மேற்படி பேண்தகு அபிவிருத்தி நோக்கு இலங்கையில் வரையப்பட்ட முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும்.

இந்த வரைபு தொடர்பாக மக்கள் கருத்தறிவதற்காக எதிர்வரும் ஜனவரி மாதம் தேசிய பேண்தகு கலந்துரையாடல் என்ற பெயரில் வெளியிடப்படவுள்ளது.

அந்த வகையில் எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் மே மாதம் வரை இலங்கை அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கிய வகையில் இது குறித்த மக்கள் கருத்துக்கள் பெற்றுக் கொள்ளப்படுவதுடன், இலங்கையின் எதிர்கால பேண்தகு அபிவிருத்தி நோக்கு குறித்து பொதுமக்கள், அரசியல்வாதிகள், நிபுணர்கள் உள்ளிட்ட அனைத்து துறைகளிலும் விரிவானதொரு கலந்துரையாடலை மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தக் கருத்துக்கள் மற்றும் முன்மொழிவுகளுக்கேற்ப குறித்த அறிக்கையில் திருத்தங்கள் செய்யப்படவுள்ளன.

இந்த நிகழ்வில் ஜனாதிபதியின் செயலாளர் ஒஸ்டின் பெர்னாண்டோ, தேசிய பொருளாதார பேரவையின் செயலாளர் லலித் சமரகோன், ஜனாதிபதியின் ஒருங்கிணைப்புச் செயலாளர் சிரால் லக்திலக்க ஆகியோரும் கலந்துகொண்டனர். (க)

# மொழி, மதச் சமவுரிமை வழங்கப்பட வேண்டும்!



## அனுரகுமார திஸாநாயக்க தெரிவிப்பு

மொழி மற்றும் மதச் சமவுரிமை வழங்கப்பட வேண்டும் என ஜே.வி. பி.யின் பொதுச் செயலாளர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அனைத்துப் பிரஜைகளுக்கும் மொழி மற்றும் மதச் சமவுரிமை வழங்கப்பட வேண்டும்.

எந்தவொரு மதத்தையும் உயர்வானது என வரையறுத்து தேசிய ஒற்றுமையை கட்டியெழுப்ப முடியாது.

புதிய அரசமைப்பு தொடர்பில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது.

எனவே, மக்களின் ஆணை தொடர்பில் எவருக்கும் எந்தப் பிரச்சினையும் ஏற்படக்கூடிய வாய்ப்பு இல்லை.

தமிழீழ விடுதலைப் புலிகளின் பிடியிலிருந்து மீண்டது போன்று புலம் பெயர் தமிழர்களின் பிடியிலிருந்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மீளவேண்டும்.

இலங்கைஒருஇனத்துக்கு சொந்தமான நாடு அல்ல. பல்லினங்களுக்கு சொந்தமான நாடாகும். சிங்களம், தமிழ், முஸ்லிம் என்ற மூன்று இனங்களும், பௌத்தம், இந்து, இஸ்லாம், கிறிஸ்தவம் என்ற நான்கு மதங்களும், இரண்டு பிரதான மொழிகளையும் கொண்டே நாடே இலங்கையாகும்.

இங்கு எந்த மதத்தையும், எந்த இனத்தையும் குறைத்து மதிப்பிட்டு தேசிய சமத்துவத்தை கட்டியெழுப்ப முடியாது.

ஏனைய மக்களினதும் இன, மத, கலாச்சார உரிமைகளையும் உறுதிப்படுத்தி, அவர்களை ஆட்சியின் பங்காளர்களாக மாற்ற வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# தலைக்கவம் அணியாத மாணவர்களுக்கு எதிராக வவுனியாவில் பொலிஸார் அதிரடி நடவடிக்கை!

கொழும்பு, நவ. 03

வவுனியாவில் நேற்றுக் காலை மோட்டார் சைக்கிளில் பாடசாலைக்குச் சென்ற மாணவர்கள் பலருக்கு எதிராக பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

அந்த மாணவர்கள் தலைக்கவசம் அணியாது மோட்டார் சைக்கிளில் சென்ற காரணத்தினால், வவுனியா புகையிரத நிலைய வீதியில் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் இவர்கள் மீது நடவடிக்கை எடுத்துள்ளனர்.

வவுனியா பொலிஸ் நிலையத்தில் நேற்றுமுன்தினம் போக்குவரத்து விதிமுறைகள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்றை பொலிஸார் மேற்கொண்டிருந்தனர்.

இதில் வவுனியா வர்த்தகர் சங்கம், முச்சக்கரவண்டி சாரதிகள், சிவில் பிரமுகர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இதன்போது வவுனியா நகர போக்குவரத்து நடைமுறைகள் தொடர்பாகவும், முச்சக்கர வண்டி சாரதிகள் வெளிமாவட்டத்திலிருந்து வரும் பயணிகளை அழைத்துச் செல்லும் போது சந்தேகத்திற்கிடமான முறையில் நடவடிக்கைகள் அமைந்திருந்தால் பொலிஸாருக்கு தகவல்களை வழங்குமாறும், பாடசாலைகளில் பொலிஸார் கடமைகளில் உள்ளதாகவும் போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் பாடசாலைகளுக்கு மாணவர்களை மோட்டார் சைக்கிளில் அழைத்துச் செல்லும் பெற்றோர்கள் மாணவர்களுக்கு தலைக்கவசம் கட்டாயம் அணிந்து செல்லு மாறும், பாடசாலை மாணவர்கள் மோட்டார் சைக்கிளில் பாடசாலைக்கு செல்லும் போது அவர்கள் கட்டாயம் தலைக்கவசம் அணிந்திருக்க வேண்டும்.

அவ்வாறு செல்லாதவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவித்துள்ளனர்.

இதையடுத்தே நேற்றுக் காலை பாடசாலைக்கு மோட்டார் சைக்கிளில் தலைக்கவசம் அணிந்து செல்லாத மாணவர்களுக்கு எதிராக பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

# வைத்தியசாலைகளில் நீண்டகாலம் சிகிச்சை பெறும் மாணவர்களுக்கு கல்வியை தொடர்வதற்கு நடவடிக்கை!



வைத்தியசாலைகளில் நீண்டகாலமாக தங்கியிருந்து சிகிச்சை பெறும் மாணவர்களின் கல்வியை தொடர்ந்தும் முன்னெடுப்பதற்காக கல்வி அமைச்சு வேலைத் திட்டமொன்றை ஆரம்பித்துள்ளது.

இதற்கமைவாக மகரகம அபெக்ஸா வைத்தியசாலை உள்ளிட்ட விசேட வைத்தியசாலைகளில் ஒருவருட காலத்திற்கு ஆசிரியர்களை ஒன்றிணைப்பதற்கான வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

ஒருவருட காலத்திற்கு கொழும்பு றிஜ்வே சிறுவர் வைத்தியசாலையுடன் இணைக்கப்பட்டுள்ள கல்வி யியல் கல்லூரி ஆசிரியர்கள் ஐவர் தமது கடமைகளை பூர்த்தி செய்துள்ளனர்.

மேலும் ஒரு வருடத்திற்கு புதிதாக ஐந்து ஆசிரியர்கள் கடந்த 31 ஆம் திகதி இணைக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பு நாளந்தா கல்லூரியை சேர்ந்த ஆசிரியர் சிலர் றிஜ்வே வைத்தியசாலையில் தமது கடமைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

சிங்கள மொழி பாடசாலை ஆசிரியர்கள் நால்வரும் தமிழ் மொழி ஆசிரியர் ஒருவரும் கடமை புரிகின்றமை குறிப்பிடத்தக்கது.

# உ.பியில் அனல்மின் நிலைய கொதிகலன் வெடித்து விபத்து




**25 பேர் சாவு; 200 இற்கும் மேற்பட்டோர் காயம்**

லக்னோ,நவ.03

உத்தரப்பிரதேசத்தின் ரேபரேலி மாவட்டத்தில் அனல்மின் நிலையக் கொதிகலன் வெடித்தது. இதில், 25 பேர் பலியானார்கள்; 200இற்கும் மேற்பட்டோர் காயம் அடைந்துள்ளனர் எனத்தெரிவிக்கப்படுகிறது.

உத்தரப் பிரதேச மாநிலம் ரேபரேலி மாவட்டத்தில் உஞ்சாஹர் என்ற இடத்தில், தேசிய அனல்மின் நிலையத்தின் பெரோஸ் காந்தி மின் உற்பத்தி நிலையம் உள்ளது.

கடந்த ஏப்ரல் மாதம் திறக்கப்பட்ட அதில், மொத்தம் ஆயிரத்து 550 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யும் 6 மின் உலைகள் உள்ளன. அவற்றில், 500 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யும் மின் உலை ஒன்றில் சோதனை ஓட்டம் நடந்து கொண்டிருந்தது.

அவ்வேளையில்அங்குள்ள பிரமாண்ட கொதிகலன் (பொய்லர்) நேற்று முன்தினம் எதிர்பாராதவிதமாக, பலத்த சத்தத்துடன் வெடித் தது. இதனால், அந்த நேரத்தில் பணியில் இருந்த தொழிலாளர்கள் அதிர்ச்சி அடைந்தனர். அலறி அடித்தபடி வெளியே ஓடினர். மின் நிலையத்தில் இருந்து கரும்புகை வெளியே றியது.



இந்த விபத்தில், 25 தொழிலாளர்கள் பலியானார்கள். 200இற்கும் மேற்பட்டோர் தீக்காயம் அடைந்தனர். அவர்கள் அருகில் உள்ள ஆஸ்பத்திரிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். சம்பவத்தின்போது, சுமார் ஆயிரம் தொழிலாளர்கள் வேலை செய்து கொண்டிருந்தனர் என நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர். அவர்களில் பெரும்பாலானோர் ஒப்பந்த தொழிலாளர்கள் ஆவர்.

அனல்மின் நிலையத்தில் சில உடல்கள் இன்னும் அப்புறப்படுத்தப்படவில்லை. காயம் அடைந்தவர்களில் பலரது நிலைமை கவலைக்கிடமாக இருக்கிறது. இதனால், சாவு எண்ணிக்கை அதிகரிக்கும்என்று அஞ்சப்படுகின்றது.

உத்தரபிரதேச முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் தற்போது மொரீஷியஸ் நாட்டுக்குச் சென்றுள்ளார். அவர் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளுக்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் உடனடியாக எடுக்குமாறு முதன்மை உள்துறைச் செயலாளருக்கு உத்தரவிட்டுள்ளார்.

அதிக அழுத்தம் காரணமாக, கொதிகலனின் கழிவு சாம்பல் குழாயில் வெடிப்பு ஏற்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. (ப)

## பெண்கள் பாதுகாப்பில் முதலிடத்தில் கோவா



பிளான் இந்தியா என்ற அமைப்பு நடத்திய ஆய்வில் பெண்கள் பாதுகாப்பு, கல்வி, சுகாதாரம், வறுமை ஒழிப்பு ஆகியவற்றின் ஒட்டு மொத்த புள்ளிகள் அடிப்படையில் கோவா மாநிலம் முதலிடத்தைப் பெற்றுள்ளது.

மத்திய பெண்கள்- குழந்தைகள் நலத்துறை சார்பில் பெண்கள் முன்னேற்றம் மற்றும் அவர்களுக்கான பாதுகாப்புத் தொடர்பாக ஆய்வு ஒன்று நடத்தப்பட்டுள்ளது. 'பிளான் இந்தியா' என்ற அமைப்பின் மூலம் இந்த ஆய்வை நடத்தி உள்ளனர்.

பெண்கள் தொடர்பான 170 வகையான தகவல்களைச் சேகரித்து அதன் மூலம் இந்த ஆய்வு நடத்தப்பட்டுள்ளது.

இதன்படி, பெண்களுக்குப் பாதிப்பு குறைவாகவும், பாதுகாப்பு அதிகமாகவும் உள்ள மாநிலமாக கோவா இருக்கிறது. 0 என்ற எண்ணில் இருந்து 1 என்ற எண் வரை இதற்கான புள்ளிகள் கொடுக்கப்பட்டு இந்த அளவீட்டைக் கணக்கிட்டுள்ளனர்.

நாட்டிலேயே பெண்கள் பாதுகாப்பு மற்றும் முன்னேற்ற நடவடிக்கைகளில் பீகார் மிக மோசமாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ப)

## 1,008 தேங்காய் உடைத்து நடிகை ரோஜா வழிபாடு


வை.எஸ்.ஆர். காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஜெகன் மோகன் ரெட்டி மேற்கொள்ளும் பாதயாத்திரை சிறப்பாக நடைபெற வேண்டி முன்னாள் நடிகையும் தற்போதைய நகரி எம்.எல்.ஏயுமான ரோஜா 1008 தேங்காய் உடைத்து வழிபட்டார்.

ஜெகன் மோகன் ரெட்டி ஆந்திராவில் உள்ள 13 மாவட்டங்களுக்கும் பாதயாத்திரை சென்று பொதுமக்களைச் சந்தித்து குறைகளைக் கேட்க உள்ளார்.

மாநிலம் முழுவதும் நடைபெறவுள்ள ஜெகன்மோகன் ரெட்டியின் பாதயாத்திரை சிறப்பாக அமைய வேண்டி திருப்பதி அடுத்த அப்பலாய குண்டாவில் உள்ள பிரசன்ன வெங்கடேஸ்வர சுவாமி கோவிலில் ரோஜா 1008 தேங்காய் உடைத்து வழிபட்டார்.



## காஷ்மீர் எல்லையில் பாக். அத்துமீறல்



காஷ்மீரின் சம்பா பகுதியில் அத்துமீறி நுழைந்து பாகிஸ்தான் இராணுவத்தினர் நடத்திய தாக்குதலில் ஓர் இந்தியப் பாதுகாப்புப் படை வீரர் உயிரிழந்தார்.

ஜம்மு - காஷ்மீர் மாநிலத்தின் சம்பா மாவட்டத்தில் உள்ள எல்லைப்பகுதியில் பாகிஸ்தான் இராணுவத்தினர் நேற்றுக் காலை சுமார் 9.30 மணியளவில் அத்துமீறி நுழைந்தனர். அப்போது அந்தப் பகுதியில் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த இந்திய எல்லைப் பாதுகாப்புப் படையினர் மீது பாகிஸ்தான் இராணுவத்தினர் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இதையடுத்து எல்லைப்பாதுகாப்புப் படையினர் பதில் தாக்குதல் நடத்தினர். இந்தச்சண்டையில் ஓர் இந்திய எல்லைப் பாதுகாப்புப் படை வீரர் உயிரிழந்தார் எனவும், அவர் எல்லைப் பாதுகாப்புப்படை கான்ஸ்டபிள் தபன் மொண்டால் எனவும் இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர். இதேபோல், கடந்த மாதம் 26 மற்றும் 31ஆம் திகதிகளிலும் எல்லைப் பகுதியில் பாகிஸ்தான் இராணுவம் போர்நிறுத்த ஒப்பந்தத்தை மீறித் தாக்குதல் நடத்தியமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir



# அணுசக்திக்கு எதிராகத் தென்கொரியாவுடன் இணையத் தயார்

பீஜிங்,நவ.03

கொரியத் தீபகற்பத்தில் அணுசக்திக்கு எதிராகத் தென் கொரியாவுடன் இணைந்து செயற்படத் தயாராக இருப்பதாக சீன வெளியுறவுத்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

சமீபகாலமாக வடகொரியா ஏவுகணைச் சோதனைகளை நடத்திவருகின்றது. அமெரிக்கா உள்ளிட்ட உலக நாடுகளின் எதிர்ப்புக்களை மீறி வட கொரியா இந்தச் சோதனைகளைத் தொடர்ந்து நடத்திவருகின்றது. இதன்




காரணமாக கொரிய தீபகற்பத்தில் போர் மூளும் அபாயம் அதிகரித்துள்ளது.

வடகொரியாவுக்குச் சீனா, ரஷ்யா உள்ளிட்ட நாடுகள் மறைமுகமாக ஆதரவளித்து வருகின்றன எனக் கூறப்பட்டு வந்தது. ஆனால், இதுதொடர்பாக சீனா மற்றும் ரஷ்யா எந்தவிதக் கருத்தும் தெரிவிக்காமல் இருந்தன. இருப்பினும், கொரிய தீபகற்பத்தில் பேச்சுகள் மூலம் தீர்வு காணவேண்டும் என்றும், அமெரிக்கா தனது படைகளைத் திரும்பப் பெற வேண்டும் என்றும் சீனாவலியுறுத்தி வருகின்றது.

இந்தநிலையில், கொரிய தீபகற்பத்தில் அணுசக்திக்கு எதிராகத் தென்கொரியாவுடன் இணைந்து செயற்படத் தயாராக இருப்பதாக சீன வெளியுறவுத்துறை அமைச்சர் காங் சுவான்யூ தெரிவித்துள்ளார். தூதரகப் பேச்சு மூலம் கொரியத் தீபகற்பத்தில் அமைதி நிலைநாட்டப்படும் என அவர் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

தென்கொரிய வெளியுறவுத்துறை அமைச்சர் லீ டூ-ஹேண்னுடன் பீஜிங்கில் நேற்று முன்தினம் நடந்த அணுசக்திக்கு எதிரான பேச்சுக்குப் பின்னர் பேசிய போதே அவர் இவ்வாறு கூறினார். (ப)



## கர்ப்பிணியின் வயிற்றை தடவிக் கொடுத்த புலி!

அமெரிக்காவில் மிருகக்காட்சிச் சாலைக்குச் சென்ற கர்ப்பிணியின் வயிற்றைப் புலி தனது நாக்கால் தடவிக் கொடுத்துள்ளமை ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்காவின் இன்டியாணா மாகாணத்தில் உள்ள பொட்டவாரொமி மிருக காட்சிச் சாலைக்கு சிமித் என்பவர் தனது மனைவி நட்ரசாவுடன் சென்றுள்ளார்.

இவர் 27 வாரம் கர்ப்பமாக உள்ள நிலையில் புலியை அடைத்து வைத்துள்ள கூண்டுக்கு அருகே அமர்ந்து கொண்டு செல்பி எடுத்துக் கொண்டிருந்தார். அப்போது அவர் அருகே வந்த புலி அவரின் செயலைக் கண் காணித்துக் கொண்டிருந்தது. அப் பெண் கர்ப்பமாக இருப்பதை உணர்ந்த புலி, அவரது வயிற்றைக் கண்ணாடி கூண்டுக்குள் இருந்தவாறு மெதுவாகத் தனது நாக்கால் தடவிக் கொடுத்துள்ளது.

புலியின் இந்தச் செயல் தங்களுக்கு நெகிழ்ச்சியூட்டியுள்ளது என தம்பதியினர் தெரிவித்துள்ளனர். (ப)

# சவுதி விமானப்படை ஏமனில் தாக்குதல்

## அப்பாவிகள் சாவு; கட்டடங்கள் தரைமட்டம்





சனா,நவ.03

ஏமன் நாட்டின் தென்பகுதியில் உள்ள சாடா மாகாணத்தில் சவுதி அரேபியா தலைமையிலான விமானப்படை நேற்றுமுன்தினம் நடத்திய தாக்குதலில் பொது மக்கள் 29 பேர் உயிரிழந்துள்ளனர்.

ஏமன் நாட்டில் அரசுக்கு எதிராக ஈரானின் ஆதரவுடன் உள்நாட்டு ஹவுத்தி புரட்சிப் படையினர் கடந்த மூன்றாண்டுகளாக ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அரசுப் படைகளுடன் புரட்சிப் படையினர் நடத்திவரும் இந்த மோதலில் பத்தாயிரத்துக்கும் அதிகமானவர்கள் உயிரிழந்துள்ளனர்.

அரசுப் படையினருக்குச் சவுதி அரேபியா தலைமையிலான இஸ்லாமியப் படைகள் ஆதரவு அளித்து வருகின்றன. இந்த நிலையில், அந்த நாட்டின் தென் பகுதியில் உள்ள சாடா மாகாணத்தில் ஹவுத்திப் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள சஹர் மாவட்டத்தில் பிரபல வணிகப் பகுதியில் உள்ள விடுதி மீது சவுதி அரேபியா நாட்டின் தலைமையிலான விமானப்படை நேற்று நடத்திய தாக்குதலில் பொது மக்களில் 29 பேர் உயிரிழந்தனர்.

சவுதி அரேபியா நாட்டின் எல்லைப்பகுதியின் அருகில் உள்ள சஹர் மாவட்டத்தில் நடைபெற்ற இந்தத் தாக்குதலில் பல கட்டடங்கள் தரைமட்டமாகின என ஏமன் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (ப)

# கருங்கடலில் மூழ்கியது துருக்கிச் சரக்கு கப்பல்

இஸ்தான்புல்,நவ.03

இஸ்தான்புல் அருகே உள்ள ஆசியப் பகுதியில் துருக்கி நாட்டுச் சரக்கு கப்பல் கருங்கடலில் மூழ்கியது. அதில் இருந்த 11 பேர் கதி என்ன? என்பது தொடர்பான எந்தத் தகவலும் கிடைக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.





துருக்கி நாட்டுக்குச் சொந்தமான பிலால் பால் என்ற சரக்குக் கப்பல் அந்நாட்டின் வடமேற்கில் உள்ள புர்சா மாகாணத்தில் இருந்து வடக்கே உள்ள ஜோங்குல்டாக் மாகாணத்துக்குக் கருங்கடல் வழியாகத் தாது இரும்பு ஏற்றிச் சென்று கொண்டிருந்தது.

நேற்று முன்தினம் இரவு அந்தக் கப்பல் நடுக்கடலில் மூழ்கியது என துருக்கி பிரதமர் பினாலி இல்ட்ரிம் தெரிவித்துள்ளார். இந்த விபத்துக்கான காரணம் தொடர்பாகத் தெளிவான தகவல் ஏதும் வெளியாகவில்லை. அந்தக் கப்பலில் மாலுமிகள் மற்றும் பணியாளர்கள் 11 பேர் இருந்தனர் எனத் தெரிகிறது என்று தெரிவித்துள்ளார்.

அவர்களைத் தேடும் பணியில் மூன்று படகுகளும் ஒரு ஹெலிக்கொப்டரும் ஈடுபட்டுவரும் நிலையில், அவசர உதவிப் படகுகளும், சில மிதக்கும் நீச்சல் உடைகளும் கப்பல் மூழ்கிய பகுதியில் காணப்படுகின்றன எனத் துருக்கி ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

## ஆசியாவின் முதல் பணக்காரர் இவர்தான்

ஆசியாவின் பணக்காரர்களுக்கான பட்டியலில் ரிலையன்ஸ் இன்டஸ்ரீஸ் தலைவர் முகேஷ் அம்பானி முதல் பணக்காரர் என்ற அந்தஸ்தைப் பெற்றுள்ளார்.



உலகில் உள்ள பெரும் செல்வந்தர்களின் பட்டியலை போர்ப்ஸ் பத்திரிகை ஆண்டுதோறும் வெளியிடுகின்றது. அதன்படி தற்போது ஆசியாவின் முதல் கோடீஸ்வரராக ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸின் தலைவர் முகேஷ் அம்பானி முன்னேறியுள்ளார்.

இவர் சீனாவின் ஹியு கா என்பவரை பின் தள்ளி நானூறு கோடியே 21 லட்சம் டொலர்களுடன் முதலிடம் பிடித்துள்ளார் எனத் தெரிவிக் கப்பட்டுள்ளது. (ப)

# 31 வருட தோல்வி முடிவு வேண்டும்

## — அண்டர்சன்



பிரிஸ்பேன் மைதானத்தில் கடந்த 31 வருடங்களாக வெற்றிபெற முடியாத நிலையை முடிவுக்கு கொண்டு வர வேண்டும் என்று அண்டர்சன் கூறியுள்ளார்.

ஆஸ்திரேலியா-இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான ஐந்து போட்டிகள் கொண்ட பாரம்பரிய டெஸ்ட் தொடர் அடுத்த மாதம் 23ஆம் திகதி பிரிஸ்பேனில் உள்ள கப்பா மைதானத்தில் தொடங்குகின்றது. இந்த மைதானம் ஆஸ்திரேலியாவிற்கு மிகவும் ராசியானதாகும்.

1988ஆம் ஆண்டு நடைபெற்ற மேற்கிந்தியத்தீவுகளுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் ஆஸ்திரேலியா தோல்விய டைந்தது. அதன்பின் அந்த அணி பிரிஸ்பேன் கப்பா மைதானத்தில் தோல்வியடைந்ததே கிடையாது.

1989 முதல் ஆஸ்திரேலியா இந்த மைதா னத்தில் 28 போட்டிகளில் விளையாடியுள்ளது. இதில் 18 போட்டிகளில் வெற்றி பெற்றுள் ளது. 7 போட்டிகளைச் சமநிலையில் முடிந் துள்ளது.

இங்கிலாந்து 1986ஆம் ஆண்டு ஆஸ் திரேலியாவை வீழ்த்தியிருந்தது. அதன்பின் 1998 மற்றும் 2010இல் இரண்டு முறை சமன் செய்துள்ளது. 31 வருடங்களாக வெற்றி பெற முடியாமல் இங்கிலாந்து உள்ளது. தற் போது இங்கிலாந்து அணி ஆஷஸ் தொடரில் விளையாடுவதற்காக ஆஸ்திரேலியா சென் றுள்ளது. பிரிஸ்பேன் கப்பா மைதானத்தில் கடந்த 31 வருடங்களாக வெற்றி பெற முடியாததற்கு முடிவு கட்ட வேண்டும் என்று இங்கிலாந்து வேகப்பந்து வீச்சாளர் அண்டர்சன் கூறியுள்ளார்.

# இந்தியாவுக்கு எதிரான தொடரில் மாற்றத்தை ஏற்படுத்த முடியும்

## - சந்திமால் நம்பிக்கை

இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் மாற்றத்தை ஏற்படுத்த முடி யும் என இலங்கை டெஸ்ட் அணித் தலைவர் தினேஷ் சந்திமால் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இந்தியாவுக்கு எதிரான கிரிக்கெட் தொடர் கடினமானது. இந்திய டெஸ்ட் வீரர்கள் அனைவரும் நல்ல மனோதி டத்துடன் இருக்கின்றனர். எனினும் எம்மால் மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என்ற நம்பிக்கை வெகுவாக இருக் கின்றது. இலங்கையில் விளையாடி யதைவிட இந்தியாவில் எமது வீரர்கள் திறமையாக விளையாடுவார்கள் என நம்புகின்றேன்.

பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் தொடர் பற்றி கருத்து வெளியிட்ட தினேஷ் சந்திமால், கிரிக்கெட் விஜய மானது கடினமானதாகத்தான் இருந்தது. எனினும் நாங்கள் அனைவரும் திற மையை வெளிப்படுத்தினோம். எல்லா



புகழ்ச்சியும் சகல வீரர்களுக்கும் உரித் தானது.

அத்துடன் அணி முகாமைத்துவமும் சிறந்த சேவையை வழங்கியது. ஐக்கிய அரபு இராச்சியத்திற்குச் சென்றதும் ஒவ்வொரு வீரரும் தத்தமது திட்டங் களை செவ்வனே நிறைவேற்றினர்.

சகல வீரர்களும் வியக்கவைக்கும் வகையில் திறமையை வெளிப்ப டுத்தினர். இதன் பலனாக சாதகமான முடிவுகள் டெஸ்ட் போட்டிகளில் கிடைத்தன என்று தெரிவித்துள்ளார்.

# 2019 உலகக் கிண்ணத்தை இலங்கை வெல்வது கடினமாம்

## – அர்ஜுன ரணதுங்க



இலங்கையின் கிரிக்கெட் தற்போதைய நிலையில் இருந்தால் 2019 உலகக் கிண்ணத் தொடரில் நாம் வெற்றிபெறுவது கடினம் என்று முன்னாள் தலைவரும் அமைச்சருமான அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் போட்டிகளில் இலங்கை அணி வெற்றி பெறும் என்று எதிர்வு கூறமுடியாது. இந்தியாவுக்கு எதிராக நடைபெறவுள்ள தொடரில் இலங்கை அணி வெற்றிபெறுவதும் கடினமாக இருக்கும்.

விளையாட்டு வீரர்களைக் குறைகூறுவதற்கு ஒன்றுமில்லை அவர்களிடம் நல்ல திறமை யுள்ளது. ஆனால் கிரிக்கெட்டை நிர்வகிக்க முடியாத நிர்வாகமே இன்று காணப்படுகின் றது.

நான் கிரிக்கெட் பற்றி கூறியவை சரியாக நடந்துள்ளன. அதனால்தான் எமது நாட்டு அணி இப்படியே இருந்தால் உலகக் கிண்ணத் தொடரில் எதை சாதிப்போம் என்று சொல்ல முடியாது.

பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் போட்டிகளில் வெற்றிபெற்றது தொடர்பாக மகிழ்ச்சியடைகிறேன்.

வீரர்களிடம் எந்தப்பிரச்சினையும் இல்லை. வீரர்களின் மனநிலையை சரிசெய்து நாட்டுக் காக விளையாடவைத்தால் வெற்றி பெறுவது உறுதி என்று அமைச்சர் தெரிவித்தார்.

# பாக். டெஸ்ட் தொடர் வெற்றி மகிழ்ச்சியானது தொடர் தோல்விகள் ஏமாற்றமளிக்கின்றன

## – நிக் போத்தாஸ்

டெஸ்ட்போட்டிகளில்இலங்கை சரித்திரம் படைத்தது. பாகிஸ் தானை டெஸ்ட் தொடரில் முழு மையாக வெற்றிகொண்டதன் மூலம் ஐக்கிய அரபு இராச்சியத்தில் வேறு எந்து நாடும் செய்திராத சாத னையை இலங்கை நிலைநாட்டியது என இலங்கை கிரிக்கெட் நிறுவனக் கேட்போர்கூடத்தில் நேற்றுமுன் தினம்நடைபெற்ற ஊடகசந்திப்பில் பயிற்றுநர் நிக் போத்தாஸ் தெரி வித்தார்.

எனினும் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கொண்ட போட்டிகளில் அடைந்த தோல்வி ஏமாற்றமளிக் கின்றது என்று தெரிவித்துள்ளார்.

ஐக்கிய அரபு இராச்சியத்தில் பாகிஸ்தானை டெஸ்ட் தொடரில் வெற்றிகொண்ட முதலாவது நாடு என்ற சாதனையை நிலைநாட்டிய இலங்கை அணித் தலைவருக்கும் ஏனைய வீரர்களுக்கும் மதிப்பளிக்க வேண்டும்.

எனினும் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்போட்டிகளில்சரிவு ஏற்பட்டது. அது ஏமாற்றம் தருகின்றது. எவ் வாறாயினும் ஒட்டு மொத்த கிரிக் கெட் விஜயத்தில் பல சாதகமான விடயங்கள் இடம்பெற்றன. களத் தடுப்பு வெகுவாக முன்னேறியி ருந்தது. பந்துவீச்சும் உயரிய நிலையில் இருந்தது. திட்டங்கள் நலமாக அமைந்தன.

ஆனால், துடுப்பாட்டத்தைப் பொறுத்த மட்டில் திட்டமிட்டவாறு எதுவும் நடைபெறவில்லை.

ஏனெனில் உலகில் அதிசிறந்த பந்துவீச்சாளர்களை இலங்கை துடுப்பாட்ட வீரர்கள் எதிர்கொள்ள நேரிட்டது. முழுத் தொடரையும் எடுத்துக்கொண்டால் டெஸ்ட் தொடர் வெற்றியுடன் ஆரம்பம் நலமாக அமைந்தது.

இந்த வெற்றி எமக்கு இதமாக இருந்தது. சர்வதேச ஒருநாள் மற்றும் இருபது -20 போட்டிகளில் எமது வீரர்கள் திறமையை வெளிப் படுத்த முயற்சித்தனர். ஆனால், அது சாத்தியப்படவில்லை என்றார் பயிற்றுநர் நிக் போத்தாஸ்.

(ப)






# ஐ.சி.சி. ரி - 20 தரவரிசை முதலிடம் பிடித்த அணி

ஐ.சி.சி. வெளியிட்டுள்ள ரி-20 அணிகளுக்கான தரவரிசைப் பட்டியலில் பாகிஸ்தான் முதலிடத்தைப் பிடித்துள்ளது. ரி-20 போட்டிகளின் சிறந்த அணிகளுக்கான தரவரிசைப் பட் டியல் தற்போது வெளியிடப்பட் டுள்ளது.

இதுவரை ரி-20 போட்டிகள் வரலாற்றில் முதலிடத்தைப் பிடிக்காத பாகிஸ்தான் அணி முதல்முறையாக அந்த இடத்தைப் பிடித்துள்ளது.

இதுநாள் வரை நியூசிலாந்து அணி முதலிடத்தில் இருந்தது, இந்த நிலையில் சமீபத்தில் நடந்த இந்தியா- நியூசிலாந்து அணிகள் இடையிலான முதல் ரி-20 போட் டியில் நியூசிலாந்து தோற்றது.

இதன் காரணமாக அந்த அணியின் புள்ளிகள் குறைந்ததால் இரண்டா மிடத்திலிருந்த பாகிஸ்தான் தற்போது முதலிடத்தைப் பிடித்துள்ளது.

புதிய பட்டியலின் படி பாகிஸ்தான் 124 புள்ளிகளும், நியூசிலாந்து 121 புள்ளிகளும் பெற்றுள்ளன.

மூன்றாமிடத்தில் இருக்கும் மேற் கிந்தியத் தீவுகள் 120 புள்ளி களைப் பெற்றுள்ளது, பட்டியலில் இந்தியா ஐந்தாவது இடத்திலும், இலங்கை எட்டாவது இடத்திலும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.



# பாண்டையா மிகச் சிறந்த வீரர்

– பாராட்டும் கபில்தேவ்

ஹர்த்திக் பாண்டையா சிறந்த வீரராக உருவாகி வருகின்றார் என இந்தியக் கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் கபில்தேவ் கூறியுள்ளார். இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் கபில்தேவ் டில்லியில் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியவை வருமாறு:-

இந்திய அணியில் ஹர்த்திக் பாண்டையாவின் வளர்ச்சி எனக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கின் றது. மூன்று வடிவிலான போட்டிகளிலும் நேர்த்தியாக ஆடுகிறார். சிறந்த வீரராக அவர் உருவாகி வருகிறார்.

பாண்டையாவை சகலதுறை ஆட்டக்காரர் களாக மாற்றும் முயற்சியாகவே அவரை வெவ் வேறு துடுப்பாட்ட வரிசையில் அணி நிர்வாகம் களம் இறக்கி வருகிறது. அணி நிர்வாகத்தின் இந்த முடிவு சரியானதே.

வேகப்பந்து வீரரான பும்ராவை முதல் முறையாக பார்க்கும்போது வித்தியாசமான செயல் அமைப்புடன் பந்துவீசும் அவர் எவ்வளவு நீடிப்பார் என்று எண்ணினேன். ஆனால் என்னை போன்றவர்களின் எண்ணங்களை அவர் மாற்றிவிட்டார். பும்ரா மிகவும் அபாரமாக பந்து வீசுகிறார். அணியில் நீண்ட நாள்களுக்கு நீடிப் பேன் என்பதை அவர் நிரூபித்துவிட்டார்.

# தந்தையைப் போலவே பந்து வீசி அசத்திய நெஹ்ராவின் மகன்




சர்வதேச கிரிக்கெட் போட் டிகளில் இருந்து இந்திய வேகப்பந்து வீச்சாளர் ஆஷிஷ் நெஹ்ரா நேற்று முன்தினம் ஓய்வு பெற்றார்.

போட்டி முடிந்த பின் மைதானத்திற்கு வந்த அவரது மகன் அருஷ், அணித்தலை வர் கோஹ்லியின் முன்பு தனது தந்தையைப் போலவே பந்து வீசி அசத்தினார்.

நியூசிலாந்துக்கு எதிரான முதல் ரி-20 போட்டியில் இந் தியா 53 ஓட்டங்கள் வித்தி யாசத்தில் வெற்றி பெற்றது.

போட்டியின் முடிவில் நடந்த கொண்டாட்டத்தில் அனுபவ வீரர் நெஹ்ரா தனது குடும்பத்துடன் கலந்து கொண்டார்.

அப்போது நெஹ்ராவின் மகன் அருஷ், தனது தந்தை பந்து வீசுவது போன்ற சாய லில் விராட் கோஹ்லி முன்பு பந்து வீசி காட்டினார், இதனை பார்த்து வியந்த கோஹ்லி அவரைப் பாராட்டினார்.

மேலும், தனது பள்ளி நாள்களின் போது நடந்த போட்டிக்கு தலைமை ஏற்ற நெஹ்ரா, தனக்கு பரிசு வழங் கியதை நினைவு கூர்ந்தார். அதனைத் தொடர்ந்து மைதா னத்தில் இருந்த ரசிகர்கள் அனைவரும் 'மிஸ் யூ நெஹ்ரா ஜி' என தங்களது வாழ்த்துக் களைக் கூறினர்.

கடந்த 25 ஆண்டுகளில் இந்திய அணி சார்பில் ஒரு வேகப்பந்து வீச்சாளர் இவ் வளவு மரியாதையுடன் ஓய்வு பெறுவது இதுவே முதல் முறையாகும்.

# கூடைப்பந்தாட்ட இறுதிப் போட்டிகள்

கே.சி.சி. மயூரன் ஞாபகார்த்த கூடைப்பந் தாட்ட இறுதிப்போட்டி இன்று கொக் குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இன்று மாலை 4.30 மணிக்கு இடம் பெறவுள்ள .இப்போட்டியில் சென்றலியன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் மோத வுள்ளது. மேலும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கொக்குவில் இந்துக்கல்லூரி அதிபர் எம்.ஞானசம்பந்தன், சிறப்பு விருந் தினராக நல்லூர் பிரதேச செயலக விளை யாட்டுத்துறை அலுவலர் கே.மயூரன் மற்றும் இளைஞர் சேவை மன்ற அலுவலர் ஆர்.யுவராஜ் ஆகியோர் கலந்து சிறப்பிக்க வுள்ளனர். (ப)

# பாக். வீரர் மீது வாழ்நாள் தடை



சூதாட்டத்தில் ஈடுபட்ட பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர் காலித் லத்தீப் மீதான தடையை வாழ்நாள் தடையாக நீடிக்க பாகிஸ்தான் கிரிக்கெட் சபை முடிவு செய்துள்ளது.

கடந்த பெப்ரவரி மாதம் நடந்த பாகிஸ்தான் சூப்பர் லீக் போட்டியில் பாகிஸ்தானின் துடுப்பாட்ட வீரர் காலித் லதீப் மற்றும் ஷார்ஜில் ஆகியோர் சூதாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால் இருவருக்கும் தலா ஐந்து ஆண்டுகள் விளையாடத் தடை விதிக்கப்பட்டது. லதீபிற்கு அபராதமாக பத்து லட்சமும் விதிக்கப்பட்டது.

இந்த நிலையில் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை லதீப் மீது வாழ்நாள் தடை விதிக்க முடிவு செய்துள்ளது.

இது குறித்து பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் சட்ட ஆலோசகர் தபசுல் ரிஸ்வி கூறுகையில்,

காலித் லத்தீபிற்கு வழங்கப்பட்ட தடை எங்களுக்குத் திருப்தி அளிக்க வில்லை. எங்களின் கொள்கை, ஊழல் இல்லாத விளையாட்டு வீரர் களைக் கொண்டிருப்பதாகும். ஆனால், அதனை மீறும் வகையில் லத்தீபும், ஷார்ஜீலும் நடந்து கொண்டனர்.

ஷார்ஜீல் சூதாட்டத்தில் ஈடுபட் டதற்கு ஐந்து ஆண்டுகள் தடை மட்டும்தான் விதிக்கப்பட்டது. ஆனால், லத்தீபிற்கு தடையுடன் கூடிய அப ராதமும் விதிக்கப்பட்டது. ஏனெனில், அவர் சூதாட்டத்தில் ஈடுபட்டதோடு அல்லாமல் சக அணி வீரரையும் ஈடு படுத்தியுள்ளார். எனவே தான் அவர் மீது கிரிக்கெட் விளையாடுவதற்கு வாழ்நாள் தடை விதிக்க மேல்முறையீடு செய்துள்ளோம் என அவர் தெரிவித் துள்ளார்.

## சம்பந்தனை...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

யங்கள் உள்ளன. சிலருக்கு, புதிய தேர்தல்முறை மாற்றம் இங்கே முக்கிய விடயமாக இருக்கிறது. இன்னும் சிலருக்கு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை மாற்ற வேண்டும் என்பது முக்கியமாக தெரிகிறது. ஆனால், இந்த நாட்டில் வடக்கில், மலையகத்தில், கிழக்கும் மேற்கு, தெற்கில் வாழும் தமிழ் மக்களுக்கு அதிகாரப்பகிர்வு என்பதும், அதனுடன் சேர்ந்த தேசிய இனப்பிரச்சினை தீர்வும் முக்கிய விடயங்களாக இருக்கின்றன. நாம் இதை முக்கிய தேவைகளாக கொண்டே இந்த அரசமைப்பு விவகாரத்தில் இணைந்து கொண்டுள்ளோம். முஸ்லிம் மக்களின் நிலைப்பாடும் இதுவே என நான் எண்ணுகிறேன்.

நாங்கள் தேர்தல்முறை மாற்றம்தொடர்பிலும் அக்கறைகொண்டுள்ளோம். அதேபோல், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை தொடர்பிலும் எங்கள் யோசனைகள் இங்கே இடம் பெற்றுள்ளன. தமிழ் முற்போக்கு கூட்டணி, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை முழுமையாக மாற்ற உடன்படவில்லை.

அதிகாரம் குறைக்கப்பட்டு, நாடாளுமன்றத்துக்கு பதில் சொல்லும், மக்களால் நேரடியாக தெரிவு செய்யப்படும் ஜனாதிபதி முறைமையை நாம் விரும்புகிறோம். தமிழ் முற்போக்கு கூட்டணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், ஈழமக்கள் ஜனநாயக கட்சி ஆகிய கட்சிகளைச் சேர்ந்த பதினேட்டு நாடாளுமன்ற உறுப்பினர்களின் சார்பாக நாம் இந்த யோசனையை, இந்த இடைக்கால ஆவணத்தில் தெரிவித்துள்ளோம்.

புதியஓர் அரசமைப்பு கொண்டு வருவதற்கான தேவை என்ன? இந்த நாட்டில் வாழும் பிரதான இரண்டு இனங்கள் மத்தியில் ஒருவரை நோக்கி ஒருவருக்கு சந்தேகங்கள் இருக்கின்றன. அச்சங்கள் இருக்கின்றன. சிங்கள மக்களின் அச்சம் என்ன? தமிழர்கள் மீண்டும் தனியொரு ஈழநாட்டை நோக்கி பயணிப்பார்களா என்றும், தம் அரசியல் இலக்கை அடைய ஆயுதப் போரை ஆரம்பிப்பார்களா என்ற அச்சங்கள் சிங்கள மக்கள் மத்தியில், சிங்கள அரசியல் கட்சிகள் மத்தியில் உள்ளன.

இவை மிக நியாயமான அச்சங்கள். அதேபோல், தமிழ் மக்கள் மத்தியில் இரண்டு அச்சங்கள் உள்ளன. ஒன்று, இந்த நாடு முழுக்க முழுக்க சிங்கள பௌத்த நாடாக மாற்றப்பட்டு விடுமோ என்ற அச்சம் உள்ளது. அடுத்தது, இந்த நாட்டில் அதிகாரம் பகிர்ந்து வழங்கப்படாமல், தாம் ஏமாற்றப்பட்டு விடுவோமோ என்ற அச்சம் இருக்கின்றது. இவையும் மிகவும் நியாயமான அச்சங்கள். இவற்றை சிங்கள மக்களும், கட்சிகளும் புரிந்துகொள்ள வேண்டும்.

இங்கேஎனக்குமுன் உரையாற்றியமுன்னாள்ஜனாதிபதிமஹிந்த ராஜபக்ஷ, தான் கொள்கை அடிப்படையில் அதிகார பகிர்வுக்கு உடன்படுகிறார் எனக் கூறினார். தேசிய ஐக்கியத்தை விரும்புகிறார் எனக் கூறினார்.

இந்தக் கருத்துகளை நான் வரவேற்கிறேன். இன்று இங்கே சம்பந்தன் எதிர்க்கட்சி தலைவராக இருக்கிறார். அதுபற்றி நான் ஒன்றைக் கூறவேண்டும்.

இலங்கை நாட்டின் நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சி தலைவர் பதவியை ஏற்றுகொண்டதன் மூலம், சம்பந்தன் இன்று இலங்கை நாட்டு வியூகத்துக்குள் வந்து விட்டார். அதன்மூலம், தனிநாடு என்ற வியூகத்தை கைவிட்டு விட்டார். இது சிங்கள மக்களுக்கு இதன்மூலம் அவர் வழங்கியுள்ள நல்ல ஒரு செய்தியாகும். இதை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ புரிந்துகொள்ள வேண்டும். இனிமேல் இங்கே இல்லாததை சொல்லி நாட்டை குழப்புவதை விட்டுவிட்டு நாம் தேசிய ஐக்கியத்தை நோக்கி பயணிக்க வேண்டும். – என்றார்.

## மீள...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு எச்சரிக்கை விடுத்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மீண்டும் ஓர் ஆயுதப் போராட்டத்தை ஏற்படுத்தி நாட்டில் குழப்பங்களை ஏற்படுத்தி விட வேண்டாம்.

இலங்கையில் தமிழ்மக்களுக்குத் தீர்வைப் பெற்றுக்கொள்வதற்குப் பல தடைகள் காணப்படுகின்றன. தற்போதைய சூழலில் தமிழ் மக்களுக்குத் தீர்வு கிடைக்குமா என்பதில் சந்தேகம் ஏற்பட்டுள்ளது. அந்தச் சந்தேகத்தை அரசு நீக்க வேண்டும்.

நாடாளுமன்றத்தில் அரசமைப்புத் தொடர்பாக விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது, அரசமைப்புக்கு எதிராக வெளியில் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

இந்த விடயத்தில் வெளியில் இருப்பவர்கள் ஒன்றை நினைவில் நிறுத்திக் கொள்ள வேண்டும். அதாவது இனியும் ஓர் ஆயுதப்போராட்டம் நடைபெறாது என யாரும் கூற முடியாது. அதனைத் தவிர்ப்பதற்கான பொறுப்பு அரசின் கைகளில் உள்ளது.

விமல் வீரவன்ஸ நாடாளுமன்றத்திற்கு குண்டு போடவேண்டும் எனத் தெரிவித்துள்ளார். இப்படியானவர்கள் இருக்கும் வரையிலும் தமிழ் மக்களுக்குத் தீர்வு கிடைக்குமா?

வடக்கு – கிழக்கு மக்கள் மட்டுமல்லாது மலையக மக்களும் இந்த நாட்டில் நிம்மதியாக வாழ வேண்டும். புதிய அரசமைப்புக்கு அனைவரும் தமது ஆதரவை வழங்க வேண்டும் – என்றார்.

## மேர்வின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனினும் ஆட்சி மாற்றத்தின் பின்னர் அரசியலில் இருந்து அவர் ஒதுக்கப்பட்டதோடு, மீள அரசியலில் பிரவேசிப்பது தொடர்பில் வெளிப்படையான கருத்துகளை அவர் பகிர்ந்து கொள்ள வில்லை.

மேலும், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோர் செய்த ஊழல்களுக்குத் தன்னிடம் ஆதாரங்கள் இருப்பதாகவும் மேர்வின் சில்வா கருத்து வெளியிட்டிருந்தார்.

அது மட்டுமன்றிக் கடந்த கால ஊழல்கள் தொடர்பில் இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக் குழுவிடம் குற்றச்சாட்டு ஒன்றையும் அவர் முன்வைத்திருந்தார்.

இந்த நிலையில் சில காலமாக அமைதியாக இருந்த மேர்வின் சில்வா மீண்டும் அரசியல் களத்தில் குதிப்பதற்காகப் புதிய கட்சி மூலம் செயற்பட ஆரம்பித்துள்ளார் எனக் கூறப்படுகின்றது.

நாரஹேன்பிட்டியில் உள்ள அவருடைய இல்லத்தில் வைத்து தனது புதிய கட்சியை அவர் ஆரம்பித்து வைத்துள்ளார்.

# இராசநாயகம் காலமானார்



யாழ்ப்பாணம், நவ.3

கிளிநொச்சி மகாதேவா சைவச் சிறுவர் இல்லத்தின் தலைவரும் கிளிநொச்சி மாவட்டத்தின் முன்னாள் அரச அதிபருமாகிய தி.இராசநாயகம் (வயது – 71) நேற்றிரவு 7.30 மணியளவில் யாழ். ஆஸ்பத்திரியில் காலமானார்.

கிளிநொச்சி மகாதேவா சைவச் சிறுவர் இல்லத்தில் சுமார் நானூறு இளஞ் சிறார்களைப் பேணி பராமரித்து வரும் அவரது சேவையைப் பாராட்டி யாழ். மாநகரசபை அண்மையில் அவருக்கு 'யாழ். விருது' வழங்கி கௌரவித்திருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

திட்டமிடல் சேவை மூலம் அரச சேவைக்கு உள்ளீர்க்கப்பட்ட ஒருவர் அரச அதிபர் பதவி வரை உயர்ந்தார் என்ற பெருமையைப் பெற்றவர் இவரே.

கிளிநொச்சி மேலதிக அரச அதிபராகவும், அரச அதிபராகவும், மாகாணசபையின் பிரதிப் பிரதம செயலாளராகவும் அவர் பணியாற்றியவர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் (பூநகரியில்) பிறந்து இந்த மாவட்டத்திலேயே அரச அதிபராக உயர்ந்தவர் இவர் மட்டுமே.

சாவகச்சேரி இந்துக் கல்லூரி மற்றும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## அரசியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போது கோரிக்கை விடுத்தனர்.

சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு ஏற்பாடு செய்த இந்தப் போராட்டத்தில் வைத்தியர்கள், சைட்டத்திற்கு எதிரான மக்கள் இயக்கத்தை சேர்ந்தோர், முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்கத்தினர், இலங்கை ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள், தமிழ் விருட்சத்தினர் எனப் பெரும் எண்ணிக்கையானோர் பங்கேற்றனர்.

வவுனியா மேல் நீதிமன்றத்தில் கடந்த நான்கு வருட காலமாக விசாரணையில் இருந்த மூன்று தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பான வழக்கு, சட்டமா அதிபரின் ஆலோசனைக்கு அமைய அநுராதபுரம் மேல் நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. சாட்சிகளின் பாதுகாப்புக் கருதியே வழக்கை மாற்றியதாக அரசு குறிப்பிட்டுள்ள நிலையில், இதற்கு எதிர்ப்பு தெரிவித்து குறித்த மூன்று அரசியல் கைதிகளும் கடந்த 39 நாள்களாக உண்ணா விரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவர்களுக்கு ஆதரவாகத் தமிழர் தாயகத்தில் மாத்திரமன்றி தலைநகர் கொழும்பிலும் ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டதோடு, யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் கடந்த 4 நாள்களாக நிர்வாக முடக்கல் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## கொட்டும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொட்டும் மழையையும் பொருட்படுத்தாது பல்கலைக்கழக நிர்வாகத்தை முடக்கி மாணவர்கள் இந்தப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

அநுராதபுரம் சிறைச்சாலையில் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் மூன்று தமிழ் அரசியல் கைதிகளின் வழக்குகளையும் மீளவும் வவுனியா மேல் நீதிமன்றத்துக்கு மாற்றுமாறும், சகல தமிழ் அரசியல் கைதிகளையும் விடுவிக்குமாறும் வலியுறுத்தி இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அரசியல் கைதிகளின் கோரிக்கைகள் தொடர்பில் அண்மையில் ஜனாதிபதி மைத்திரியை யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் சந்தித்த போது, விரைவில் தீர்வைப் பெற்றுத்தருவதாக ஜனாதிபதி உறுதியளித்திருந்தார்.

எனினும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாத நிலையில் மாணவர்கள் இந்த நிர்வாக முடக்கல் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

## மைத்திரியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொகுதியில் முன்னாள் ஜனாதிபதியும் தற்போதைய எம்.பியுமான மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் இத்தகைய முடிவு எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

## நல்லாட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயற்பாடுகள் மகிழ்ச்சியளிக்கும் வகையில் இல்லை என ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றக் குழு குற்றம் சாட்டியுள்ளது.

இலங்கைக்கான பயணத்தை மேற்கொண்டுள்ள ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்ற உறுப்பினரும் தெற்காசியப் பிராந்திய விவகாரங்களுக்கான ஐரோப்பிய ஒன்றியக் குழுவின் தலைவருமான ஜீன் லம்பேட் அம்மையாரே இதனைக் குறிப்பிட்டுள்ளார். நேற்றுக் கொழும்பில் நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

நாங்கள் ஒரு வருடத்திற்கு முன்னர் இங்கு பயணம் மேற்கொண்டிருந்தோம். அதன்போது பிரதமர் உட்பட பல உயர்மட்டத் தலைவர்களினால் பயங்கரவாத தடைச்சட்டம் சர்வதேச நீதியில் ஏற்றுக்கொள்ளும் வகையில் மாற்றப்படும் என்ற உறுதிமொழி வழங்கப்பட்டிருந்தது.

ஆனால் அது தொடர்பில் இன்னமும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமல் இருப்பது கவலையளிக்கின்றது. இந்தச் சட்டத்தின் அடிப்படையில் இன்னும் பலர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இதனை ஏற்றுக்கொள்ள முடியாது.

அதேபோன்று மக்களின் காணிகளை விடுவிப்பதிலும் திருப்தியளிக்கும் வகையில் வேகம் காட்டப்படாமலிருப்பது வேதனையளிக்கின்றது. புதிய அரசமைப்பு உருவாக்கும் முயற்சிகளை உற்சாகமாக மேற்கொண்டு அதனூடாக ஜனநாயகத்தையும், நல்லிணக்கத்தையும், மனித உரிமைகளையும் பாதுகாப்பதற்கான முயற்சிகளை இலங்கை அரசு மேற்கொள்ள வேண்டும் – என்றார்.

ஐரோப்பிய ஒன்றியத்தால் இலங்கைக்கு வழங்கப்படுகின்ற ஜி.எஸ்.பி. வரிச்சலுகை தொடர்பான மேலதிக நடவடிக்கைகளுக்காகவும், தற்போது ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கான மீன்பிடி ஏற்றுமதித் தடையை நீக்குவது தொடர்பான தீர்மானத்தை மேற்கொள்வதற்காகவும் இலங்கை நிலவரங்களை அறிந்து கொள்ளும் நோக்கிலும் குறித்த குழுவினர் இலங்கைக்கான பயணம் மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தமிழர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்த நாட்டை ஆளுகின்ற சிங்களத் தலைவர்கள் எம் மக்களுக்குக் கல்வியின் மீதான அடக்கு முறைகளை ஆரம்ப காலத்தில் கையாண்டதால் போராட்டங்கள் பல உருவெடுத்தன.

1957ஆம் ஆண்டு அப்போதைய பிரதமருக்கும், தந்தை செல்வநாயகத்திற்கும் ஒப்பந்தம் ஒன்று நிறைவேற்றப்பட்டது. எனினும் அந்த ஒப்பந்தம் நடைமுறைக்குக் கொண்டு வரப்படவில்லை.

1972 மற்றும் 1978 ஆம் ஆண்டுகளில் நடைமுறையில் இருந்த அரசியல் யாப்புகள், தமிழ் மக்கள் தம்முடைய பிரதேசங்களில் இறைமையுடன் வாழ வழிசமைத்துக்கொடுக்கவில்லை.

அதன் அடிப்படையிலேயே தந்தை செல்வநாயகம் தனிநாடு என்ற கோட்பாட்டுக்குச் சென்றால் மாத்திரமே தமிழர்கள் இன அடையாளத்துடன் வாழ முடியும் என்ற கோரிக்கையை முன்வைத்தார்.

அதன் பின்னர் அந்த கோரிக்கையின் அடிப்படையிலும், 1971ஆம் ஆண்டுக்குப் பிறகு தகுதி இருந்தும் பல்கலைக்கழகத்திற்கு அனுமதி கிடைக்காத சில மாணவர்களின் ஆலோசனைகளுக்கு அமைவாகவும் அண்ணன் பிரபாகரன் ஆயுதப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தார்.

அவ்வாறு அவர் ஆயுதப் போராட்டத்தைக் கையில் எடுத்ததற்குக் காரணம் அப்போதைய ஆட்சியாளர்களின் சட்டங்களும், தமிழர்கள் மீதான அடக்குமுறைகளுமே காரணம்.

தந்தை செல்வநாயகம் அப்போது கொண்டுவந்த ஒப்பந்தங்கள் நிறைவேற்றப்பட்டிருந்தால் நாட்டில் ஆயுதப்போராட்டம் ஏற்பட்டிருக்காது. அன்று ஆரம்பிக்கப்பட்ட அந்த ஆயுதப்போராட்டம் சர்வதேசத்தின் உதவியுடன் 2009ஆம் ஆண்டு அழிக்கப்பட்டது.

இந்த நிலையிலேயே 2015 ஆம் ஆண்டு ஆட்சி மாற்றம் அடைந்தது. இப்போது உள்ள கூட்டு ஆட்சிக்கு எமது பங்களிப்பையும் வழங்கியுள்ளோம்.

எனினும் இன்றும் தமிழ் மக்களின் பல்வேறுபட்ட கோரிக்கைகள் நிறைவேற்றப்படாமல் உள்ளன, கொடுக்கப்பட்ட வாக்குறுதிகளும் நிறைவேற்றப்படவில்லை என்பது சுட்டிக்காட்டப்படத்தக்கது.

அதேபோன்று புலம்பெயர்ந்து சென்ற தமிழர்கள் மீண்டும் இந்த நாட்டிற்கு வந்து வாழும் நிலைமை உருவாக்கப்படவேண்டும். அதற்கு பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்பட வேண்டியதும் அவசியம்.

இந்த நாட்டில் பூர்வீகமாக வாழ்ந்துவரும் எம்மக்கள் இறைமையுடன் வாழ்வதற்குரிய வகையில் அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும் – என்றார்.

# இலங்கையின் நல்லிணக்க நிகழ்ச்சித் திட்டத்துக்கு ஆஸ்திரேலிய பிரதமர் மெல்கம் டர்ன்புல் பாராட்டு!

கொழும்பு, நவ. 03

இலங்கை அரசு முன்னெடுத்துள்ள நல்லிணக்க நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக ஆஸ்திரேலிய பிரதமர் மெல்கம் டர்ன்புல் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்குப் பாராட்டு தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று முற்பகல் ஜனாதிபதியுடன் இடம்பெற்ற இருதரப்பு பேச்சின்போதே ஆஸ்திரேலிய பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

போதைப்பொருள் கடத்தல் மற்றும் மனித கடத்தல் உள்ளிட்ட குற்றங்களுக்கு எதிராக இலங்கை வழங்கிவரும் ஒத்துழைப்புக்கு ஆஸ்திரேலிய பிரதமர் நன்றி தெரிவித்தார்.

இலங்கையின் போதைப் பொருளுக்கு எதிரான ஆற்றல்களை மேலும் வளர்த்துக் கொள்வதற்கு ஆஸ்திரேலியா உதவும் என ஆஸ்திரேலிய பிரதமர் இதன்போது உறுதியளித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கயில்-

இலங்கையில் மிகவிரைவில் ஆரம்பிக்கப்படவுள்ள தேசிய பாதுகாப்புக் கல்லூரிக்கு ஆஸ்திரேலியா உதவும்.



அந்தக் கல்லூரியின் நிர்வாக மற்றும் கலைத்திட்ட நிபுணத்துவத்தை வழங்குவதற்கும் தெரிவுசெய்யப்பட்ட பாடநெறி தகவல்களை வழங்குவதற்காக சிரேஷ்ட இராணுவ அதிகாரியொருவரை இரண்டு வருடங்களுக்கு ஆஸ்திரேலியா அனுப்பிவைக்கும்.

மேலும், கரையோரப் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக மூன்று அதிவேகப் படகுகளை ஆஸ்திரேலியா அன்பளிப்பாக வழங்கும். இந்த அதிவேக படகுகள் கரையோரப் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு மிகவும் பயனுள்ளவை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதன்போது, இலங்கையின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கும், சர்வதேச மன்றங்களிலும் ஆஸ்திரேலியா வழங்கி வரும் தொடர்ச்சியான உதவிகளுக்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆஸ்திரேலிய பிரதமருக்கு நன்றி தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் ஜனாதிபதி மைத்திரி மேலும் தெரிவித்தவை வருமாறு:-

சட்ட விரோதமாக நாட்டுக்குள் கொண்டுவரப்படும் போதைப்பொருள்கள் இலங்கைக்கு பெரிய பிரச்சினையாக இருக்கிறது. இலங்கை ஒரு தீவு நாடாக இருக்கின்ற காரணத்தால் பல்வேறு சர்வதேச போதைப்பொருள் கடத்தல் காரர்கள் தமது கடத்தல் நடவடிக்கைகளுக்கு இந்த நாட்டை மத்திய நிலையமாகப் பயன்படுத்துகின்றனர்.

கடந்த காலங்களில் கடற் பாதுகாப்பு கண்காணிப்புப் படகுகளை வழங்கி இலங்கையின் கரையோரப் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு உதவியமைக்காக ஆஸ்திரேலியாவுக்கு நன்றி தெரிவிக்கிறேன்.

புதிய வர்த்தக மற்றும் முதலீட்டு உடன்படிக்கை தொடர்பாக ஆஸ்திரேலியப் பிரதமருக்கு நன்றி தெரிவிக்கிறேன். இந்த உடன்படிக்கை இரு நாடுகளுக்குமிடையிலான வர்த்தக மற்றும் முதலீட்டு கூட்டுறவை மேலும் மேம்படுத்த உதவும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

அலரி மாளிகையில் நேற்று இடம்பெற்ற இருதரப்பு வர்த்தக மற்றும் முதலீட்டு ஒப்பந்தம் கைச்சாத்திடும் நிகழ்வின் போது ஆஸ்திரேலிய பிரதமர் மெல்கம் டர்ன்புல் மற்றும் இலங்கை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் பிரசன்னமாகியிருந்தனர்.

இலங்கைக்கான இந்த விஜயத்தை மேற்கொண்டமையை யிட்டு ஜனாதிபதி ஆஸ்திரேலிய பிரதமர் டேர்ன் புல்லுக்கு நன்றி தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் வசந்த சேனாநாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ மற்றும் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் பிரசாத் காரியவசம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

(க)

## நெடுந்தீவுக் கடற்பரப்பில் இந்திய மீனவர் 13 பேர் கைது!

இலங்கையின்வடக்கே யாழ்ப்பாணம் நெடுந்தீவுக் கடற்பரப்பில், எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் தமிழக மீனவர்கள் 13 பேர் இலங்கைக்கடற்படையால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட மீனவர்கள் பயன்படுத்திய படகுகள் இலங்கைக்கடற்படையால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

இவ்வாறுகைதுசெய்யப்பட்ட மீனவர்களில் 9பேர்புதுக்கோட்டை மாவட்டம் ஜெகதாபட்டினத்தைச் சேர்ந்தவர்கள் என்பதுடன், ஏனைய 4 மீனவர்களும்இராமநாதபுரத்தை சேர்ந்தவர்கள் எனத் தெரியவந்துள்ளது.

மீனவர்களை மலேரியாபரிசோதனைக்கு உட்படுத்திய பின்னர் யாழ்ப்பாணம் நீரியல் வளத்துறை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படவுள்ளனர் என்றுகடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

விசாரணைகளின் பின்னர் அந்த 13 தமிழக மீனவர்களும் நீதிமன்றத்தில்முன்னிலைப் படுத்தப்படவுள்ளனர்.

## இனங்களுக்கிடையே குரோதத்தை ஏற்படுத்தவேண்டாம் என்கிறார் மஹிந்த!



கொழும்பு, நவ. 03

இனங்களுக்கிடையே குரோதத்தை ஏற்படுத்தவேண்டாம் என்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த கூறியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற அரசமைப்பின் நடவடிக்கை குழுவின் அறிக்கை மீதான விவாதத்தின்போதே அவர் இந்த விடயங்களை குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

புதிய அரசமைப்பு செயற்பாடுகளில் நாம் நேர்மையாகக் கலந்துகொண்டோம். நாட்டில் தேசிய ஒற்றுமை மற்றும் மத ஒற்றுமை ஆகியன எதிர்பார்க்கப்படுகின்றன. இனங்களுக்கிடையே குரோதத்தை ஏற்படுத்தவேண்டாம்.

திட்டமிட்ட வகையில் நல்லிணக்கத்தை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டமையும் காரணமாக அமைந்துள்ளது.

நாம் நேர்மையான முறையில் அரசமைப்பு செயற்பாடுகளில் பங்குகொண்டோம். குழுக்களிலும் கலந்துகொண்டோம்.

அரசமைப்பு செயற்பாடுகள் தொடர்பில் சந்தேகம் இருந்த பொழுதிலும் அதில் கலந்துகொண்டமை நாடு மற்றும் இனப்பற்றின் காரணமாகவே ஆகும். மேலும் ஆலோசனைகளை நாம் முன்வைத்துள்ளோம். புதிய அரசமைப்பின் மூலம் இனங்களை ஒன்றிணைப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## சுனாமி தொடர்பில் முன்னெச்சரிக்கை ஒத்திகை நிகழ்வு!

கொழும்பு, நவ. 03

சுனாமி கடற்பேரலை தொடர்பில் தெளிவுபடுத்தும் முன்னெச்சரிக்கை ஒத்திகை நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இடர்முகாமைத்துவ மத்திய நிலையத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த நிகழ்வு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

இது தொடர்பான வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகளுக்கும் தெளிவுபடுத்துமாறு இடர்முகாமைத்துவ நிலையம் சுற்றுலா ஹோட்டல் துறையைக் கேட்டுக் கொண்டுள்ளது.

சுனாமி எச்சரிக்கை கோபுரம் அமைக்கப்பட்டுள்ள 77 பிரதேசங்களில் இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(க)

## போரால் பாதிக்கப்பட்டவருக்கு அனந்தி சுயதொழில் உதவி!

போரால் பாதிக்கப்பட்டவருக்கு வடக்கு மகளிர் விவகார அமைச்சரால் சுய தொழில் முயற்சிக்கான உதவி வழங்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சபையின் 2017 ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் இருந்து மகளிர் விவகார அமைச்சர் அனந்தி சசிதரனால் போரால் பாதிக்கப்பட்டவருக்கு சுயதொழில் முயற்சிக்கான உதவி வழங்கப்பட்டுள்ளது.

நவாலி வடக்கு, மானிப் பாயைச் சேர்ந்த நடேசு பிரபாகரன் என்பவர் தனது வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் சொந்தமாக கராஜ் ஒன்றை அமைப்பதற்கு உதவிசெய்யுமாறு கோரியிருந்தமையையடுத்து வட மாகாண சபையின் 2017 ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் இந்த உதவி வழங்கப்பட்டுள்ளது.

இந்தப் பயணாளர் கராஜ் அமைப்பதற்குத் தேவையான சிமெந்து மற்றும் தகரம் என்பன மகளிர் விவகார அமைச்சர் அனந்தி சசிதரனால் வழங்கப்பட்டுள்ளன.







விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச் செல்வனின் பத்தாவது ஆண்டு நினைவேந்தல் நேற்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் முல்லை மாவட்டப் பணியகத்தில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படம்.






நான்காவது நாளாகவும் கொட்டும் மழையில் தொடரும் பல்கலைக்கழக மாணவர்களின் போராட்டம்.

# நுவரெலியாவில் புதிய பிரதேச சபைகள்; மலையகத்தில் பெரும் கொண்டாட்டம்!

நுவரெலியா,நவ.3

நுவரெலியா மாவட்டத்தில் பிரதேச சபைகளை அதிகரிக்க அமைச்சரவையில் அங்கீகாரம் வழங்கப்பட்டமைக்கு ஆதரவு தெரிவித்து, மலையக நகரங்களில்நேற்று மாலை 3.00 மணியளவில் கொண்டாட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

தொழிலாளர் தேசிய சங்கத்தின்ஆதரவாளர்கள் ஹட்டன்மற்றும்பொகவந்தலாவை நகரங்களில்ஒன்றுகூடி பாற்சோறு சமைத்து பட்டாசு கொளுத்தி மகிழ்ச்சி ஆரவாரங்களில் ஈடுபட்டனர்.

நுவரெலியா மாவட்டத்தில் அம்பகமுவ பிரதேச சபை மூன்றாகப் பிரிக்கப்பட்டுமஸ்கெலியா,நோர்வூட், அம்பகமுவ பிரதேச சபைகளாகவும், நுவரெலியா பிரதேச சபை மூன்றாகப் பிரிக்கப்பட்டு நுவரெலியா, கொட்டகலை, அக்கரப்பத்தனை ஆகிய பிரதேச சபைகளாகவும் அதிகரிக்கப்பட்டமைக்குஆதரவுதெரிவித்தே நேற்று இந்த மகிழ்ச்சி ஆரவாரத்தில்மக்கள்ஈடுபட்டனர்.







இந்த மகிழ்ச்சி ஆரவாரத்துக்கு மத்திய மாகாண சபை உறுப்பினர் சோ.ஸ்ரீதரன் உட்பட தொழிலாளர் தேசிய சங்கத்தின் ஆதரவாளர்களும் கலந்து கொண்டனர். (உ)

இன்று மாலை
K.T. பிரசாத் வழங்கும்
உலக சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு
மாபெரும் இசை நிகழ்ச்சி
விஷேடமாக சிறுவர், சிறுமியர் தமது பெற்றோருடன், அனைவரும் கலந்து சிறப்பிக்கலாம்.
இடம் : யாழ் / இந்துக்கல்லூரி சபாலிங்கம் மண்டபம்
காலம் : இம்மாதம் 03 ஆம் திகதி வெள்ளிக்கிழமை
நேரம் : மாலை 3:30 மணிக்கு (03.11.2017)
தொடர்புகளுக்கு:
0786125929
077 5504910
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
அனுமதி இலவசம்
அனுசரணை வழங்குவோர்
NLB NATIONAL LOTTERIES
NSB National Savings Bank
cecb
PEOPLE'S BANK
PLC பீப்பள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி (மக்கள் வங்கியின் ஒரு துணை நிறுவனம்)
இலங்கைவங்கி BOC தேசத்தின் வங்கியாளர்
CEYPETCO
SPMC
Lanka Sugar Company
SriLankan Airlines

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.11.2017 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.